
# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு.

மாலை 15] பிரமாதீச - ஆவணி, புரட்டாசி - ஆகஸ்ட் 1973 [மணி 11



திருச்சி மாவட்டம், குமாரவயலூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் தலைமையில், உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள், தியான மண்டபத்தைத் திறந்து வைத்தல். (12—8—73)

## பொருளடக்கம்


1 மெய்கண்ட நூல்களின் வாழ்வியல் உண்மைகள்
2. உறவும் உணர்வும்
3. முருகன் பெருமை
4. தஞ்சை மாவட்டக் கோவில்களின் வரலாறு
5. பழனியும் பழனியாண்டவரும்
6. பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவர்
7. நாவாய் உறையும் நாரண நம்பி
8. இறைவனும், உயிரும்
9. திருவண்ணாமலைக் கோயிற் கல்வெட்டுகள்
10. இராமாநுசரின் இனிய அருளுரைகள்
11. இராமாநுசர் மாட்சி
12. குறிஞ்சிக் கிழவன்


### சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்


ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் தனிப்பிரதி விலை ரூபா, ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34'' என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.


சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்

OFFICE OF THE STATE EDITOR
8-OCT 1973
GAZETTEERS


# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 16] பிரமாதீச - ஆடி, ஆவணி - ஆகஸ்டு 1973 [மணி 11

# மெய்கண்ட நூல்களின் வாழ்வியல் உண்மைகள்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

## முன்னுரை

''தத்துவ ஞானம் என்பது சொற்களில் வாழ்கின்றது; ஆனால் உண்மைச் செய்தியும், அநுபவமும், சொற்களில் அமைத்துக் கூற முடியாத வழிகளில் கடந்து நின்று, நம்முடைய வாழ்க்கையினின்றே முகிழ்த்து அரும்பி மலர்ந்து தத்துவ ஞானமாகக் கனிந்து நிற்கின்றன'' என்று[1], **வில்லியம் ஜேம்ஸ்** என்னும் அமெரிக்க நாட்டுப் பேரறிஞர் குறிப்பிடுகின்றார். இதனால், வாழ்க்கையின் உண்மையும் தெளிவும் மிக்க நிகழ்ச்சி அல்லது அனுபவங்களோடு, நெருங்கிய உயிர்ப்புள்ள தொடர்பைப் பெறாத தத்துவஞானம் அல்லது கொள்கையானது, எத்தகைய மதிப்பும் பயனுமின்றி, உயிரிழந்த வெறும் பிணத்திற்குச் சமமேயாகும் என்பது புலனாகும். எனவே உண்மையான தத்துவஞானம் அல்லது கொள்கையானது, வெறும் கற்பனையோ, பயனில் உன்னமோ, சிந்தனைச் சிதறல்களோ அன்று என்பது தெளிவாம். வாழ்க்கையின் நடைமுறைக்கு இயைந்து, அறிவுக்குப் பொருந்தி, அனுபவத்தைத் தழுவிக் கண்டுணரப்பெறும் சிறந்த நுண்ணிய உண்மைகளின் தொகுப்பே தத்துவ ஞானமாகும்.[2]

---

(1) ''Philosophy lives in words, but truth and fact well up into our lives in ways that exceed verbal formulation''

-Prof WILLIAM JAMES.
The Varieties of Religious Experience, P. 456

(2) ''Nothing in it is taken for granted, nor anything is asserted arrogantly, nor any attempt to shut the mouth of an earnest and inquiring student. Every problem and every knotty point in the history of thought is taken up in a calm, serious and dignified mood, is duly considered in all its aspects, and is then solved by the application of strict logical methods derived from the keen observations of daily occurrences in life.''

-MARAIMALAI ADIGAL.

148712



J2 Q2m211, N59TK

## கவிதையும் தத்துவமும்

கவிதைக்கும், தத்துவத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. ''கவிதையானது வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றது; வாழ்க்கைக்கு உரியதாக விளங்குகின்றது; வாழ்க்கையை வளப்படுத்தும் குறிக்கோள் கொண்டது; வாழ்க்கையின் குறை நிறைகளை ஆராய்ந்து உணர்த்தித் திருத்திச் செம்மைப் படுத்துகின்றது''[3]. தத்துவம் என்பதும் இத்தன்மைய ஒன்றேயாகும். தத்துவமும் வாழ்க்கை அனுபவங்களிலிருந்தே தோன்றுகின்றது. வாழ்க்கையைப் பற்றியதாக, வாழ்க்கையினின்று தோன்றுவதாக, வாழ்க்கையை வளப்படுத்தும் குறிக்கோள் உடையதாக, தத்துவமும் விளங்குகின்றது. வாழ்வின் குறைநிறைகளை உணர்ந்து உய்ய முயலும் உயரிய உணர்வே, தத்துவ ஞானம் எனப்படுகின்றது. இவ்வாற்றால் கவிதைக்கும், மெய்யுணர்வு ஆகிய தத்துவஞானத்திற்கும் இடையேயுள்ள இயைபு ஒப்புமைகளை யாவரும் இனிது உணரலாம்.

''சிறந்த தத்துவஞானியல்லாத எவரும், ஒரு பெரும் கவிஞராகச் சிறந்து விளங்கியதில்லை''[4], என்று **கோல்ரிட்ஜ்** என்னும் அறிஞர் கூறுகின்றார். ''ஓர் உயர்ந்த உண்மைத் தத்துவத்தை, எவ்வாற்றாலேனும் விளக்காத கவிதையினை இயற்றும் ஆசிரியர் எவரையும், யான் மதிப்பதில்லை''[5] என்று **ஜேம்ஸ் லோவல்** என்னும் அறிஞர் இயம்புகின்றார். ''தத்துவத்திற்கே முதலிடம்; அதனை அடுத்தே அதன் உயர்ந்த விளைவாகிய கவிதைக்கு இடம்''[6] என்று, **இராபர்ட் பிரவுனிங்** என்னும் கவிஞர் குறிப்பிடுகின்றார். ''தத்துவ மனப்பான்மையைத் தூண்டுவித்துத் தோற்றும் அளவைப் பொறுத்தே கவிஞர்களின் சிறப்பும் பெருமையும் அமைகின்றன''[7] என்று **எமர்சன்** என்னும் பேரறிஞர் கூறுகின்றார். சிறந்த கவிதை வடிவில் உயரிய தத்துவ நுட்பங்களை விளக்குகின்ற மெய்கண்ட நூல்கள், நாம் நம் வாழ்வியலிற் காணும் அன்றாட உண்மைகளையே அடிப்படையாகக் கொண்டு அமைந்திருத்தல் அறிந்து வியந்து போற்றற்பாலது. இதன் பயனாகவே மெய்கண்ட நூல்கள் விளக்கும் சைவ சித்தாந்தத் தத்துவக் கோட்பாட்டினை, மேலை நாட்டு அறிஞர்களும் சாலவும் வியந்து பின்வருமாறு போற்றியுள்ளனர்.

## சைவசித்தாந்தம்

''சைவசித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையானது, தென்னிந்தியத் தமிழ் மக்களுடைய பேரறிவின் பெரும் பயனாகும். இந்திய நாட்டிலுள்ள சமயங்கள் எல்லாவற்றிலும், சைவசமயமே மிகவிரிந்ததும், பெரும்பான்மையான மக்களால் தழுவப் பெற்றதும், ஐயத்திற்கு இடனின்றி உண்மையிலேயே பெருஞ்சிறப்பு வாய்ந்ததும் ஆகும். தமிழ் மக்களின உள்ளங்களை அது பெரிதும கவர்ந்து அரசு வீற்றிருக்கின்றது.''[8] ''பிற எல்லா ஆராய்ச்சி வகைகளையும், கொள்கை அல்லது வழிபாட்டு முறைகளையும் விட, சைவசித்தாந்தமானது சில சிறப்பியற் பண்புகளைத் தனக்கெனப் பெற்றுளிர்கின்றது. அது பெரிதும் பழைமை வாய்ந்ததாய், அப்பழைமையினாலாய பெருமைகளை எல்லாம் பெற்று விளங்குகின்றது. சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கை, தமிழ்மொழிக்கும் தமிழ் மக்களுக்குமே சிறப்பாக உரியது. சமய உலகில தென்னிந்தியாவில் உள்ள மிகப் பெரும் பழைமையான சிறந்த கருத்துக்களுக்கெல்லாம, சைவசமயமே நேரிதின் உரிமைத் தொடர்புடையதாகும்.''

''தமிழ் மக்களின் சமயமாகிய அதனை நோக்க, அடுத்துள்ள ஏனைய பிறவெல்லாம். ஒப்பியல் முறைமையிற் காணின், அபலவர்க்கு உரியனவும் அண்மையில் தோன்றியனவுமேயாகும். சமய ஆராய்ச்சித் துறையிலும், கொள்கை வாழ்க்கை என்பனவற்றை உணர்த்தும் முறையிலும், மிகமிகச் சிறந்த தொன்றாகத் தென்னிந்தியா பெற்றிருப்பது, சைவசித்தாந்தமே எனலாம்.''

---

(3) ''Poetry (philosophy) is made out of life, belongs to life, exists for life. It is important, therefore, to hold fast to this that poetry is at bottom a criticism of life; that the greatness of a poet lies in his powerful and beautiful application of ideas to life–to the question : How to live?''

-MATTHEW ARNOLD.

(4) ''No man was ever yet a great poet without being at the same time a profound philosopher'' -S. T. COLERIDGE.

(5) "No poem ever makes me respect its author which does not in some way convey a truth of philosophy.''

-JAMES LOWELL

(6) ''Philosophy first, and poetry which is its highest outcome afterwards."

—ROBERT BROWNING.

(7) ''The great poets are judged by the frame of mind they induce''

—R, W. EMERSON.

(8) ''Saiva Siddhanta philosophy is the choicest product of the Dravidian intellect. It is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India''

—Dr. G. U. POPE

N73. 15·11.



''மனித குலத்தின் சிந்தனையிலே முழுநிறைவானதும், மூதறிவார்ந்ததுமாகப் பெரிதும் மதித்துப் போற்றத்தக்கதாக விளங்குவது சைவசித்தாந்தமேயாகும்.''9

## மெய்கண்ட நூல்கள்

இத்தகைய சிறப்புமிக்க சைவசித்தாந்தம் என்னும் தமிழகத்துக்கே தனிச்சிறப்பாக உரிய தத்துவக் கொள்கையினை விளக்கும் மெய்கண்ட நூல்கள், மெய்கண்டதேவர், அருள்நந்திசிவாசாரியர், மறைஞானசம்பந்தர் உமாபதிசிவாசாரியர் என்னும் சைவசமய சந்தான ஆசிரியர்கள் நால்வராலும் செய்யப் பெற்றனவாகும். இவர்கள் சைவசமய ஆசிரியர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் என்னும் நால்வரின் வழியில், அவர்களுக்குப் பிற்காலத்தில் தோன்றியருளிய சான்றோர்கள். மெய்கண்டதேவர் முதலிய சந்தான ஆசிரியர்கள் நால்வர்களாலும் செய்யப்பட்டமையால், இவர்தம் நூல்கள் **மெய் கண்ட நூல்கள்** எனப் பெயர் வழங்குவன வாயின. மனிதவாழ்வியலின் மெய்ம்மைகளை உள்ளவாறு கண்டுணர்ந்து வகுத்து விளக்குகின்ற நூல்களாதலாலும், இவற்றிற்கு **மெய் கண்ட நூல்கள்** என்னும் பெயர் மிகமிகப் பொருந்துவதாயிற்று.

மெய்கண்டதேவர் கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் (கி. பி. 1232), திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்திருந்தவர். திருப்பெண்ணுகடம் என்னும் தலத்தில், அச்சுத களப்பாளர் என்பவருக்கு இவர் புதல்வராகத் தோன்றினர் என்பது வரலாறு. இவர் இயற்றிய நூல் **சிவஞான போதம்** எனப்படும். இவருக்குக் குலகுருவாக இருந்து பின்னர் மாணவராகும் பேறுபெற்றவர், சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெற்ற திருத்துறையூர் அருள்நந்தி சிவாசாரியர். இவரால் **சிவஞானசித்தியார்**, **இருபா இருபஃது** என்னும் இரு நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. இவ்விருவருக்கும் சிறிது முன்னர் 12-ஆம் நூற்றுண்டில் திருவியலூர் உய்யவந்ததேவர், திருக்கடவூர் உய்யவந்த தேவர் என இருவர் விளங்கியிருந்தனர். இவர்கள் முறையே **திருவுந்தியார்**, **திருக்களிற்றுப் படியார்** என்னும் இரு நூல்களை மெய்கண்ட தேவருக்கு முன்னரே இயற்றிப் போந்தனர்.

அருள்நந்திசிவாசாரியார்பால் மாணவராக விளங்கி, ஞானம் பெற்றவர் மறைஞான சம்பந்தர். ஞானனந்த அநுபவநிலையில் திளைத்துநின்ற இவர் நூல் ஏதும் செய்திலர். ஆனல், இவர்பால் அருள்பெற்ற மாணவராகிய உமாபதிசிவம் என்பவர் **சிவப்பிரகாசம்**, **திருவருட்பயன்**, **வினா வெண்பா**, **போற்றிப்பஃறொடை**, **உண்மைநெறிவிளக்கம்**, **கொடிக்கவி**, **நெஞ்சுவிடு தூது**, **சங்கற்பநிராகரணம்** என்னும் எட்டு நூல்களை அருளிச் செய்தனர். மெய்கண்ட நூல்களுள், இவை 'சித்தாந்த அஷ்டகம்' எனவும் சிறப்பித்து வழங்கப்பெறும். இனி அருள்நந்தி சிவத்துடன் ஒருசாலை மாணவராய் மெய்கண்டதேவர்பால் அருள்பெற்ற திருவதிகை மனவாசகங்கடந்தார் என்பவர் **உண்மை விளக்கம்** என்னும் உயரியதொரு நூலை இயற்றியுள்ளார். இவை மொத்தம் பதினன்கு நூல்களாகும்.

> ''உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
> பிந்திருபா உண்மை பிரகாசம்-வந்தஅருட்
> பண்புவினு போற்றிகொடி பாசமிலா
> நெஞ்சுவிடு
> உண்மைநெறி சங்கற்பம் உற்று''

என்னும் இப்பதினன்கையும் சைவசித்தாந்த சாத்திரங்கள் என்றும், மெய்கண்ட நூல்கள் என்றும், பெரியோர்கள் போற்றிவருகின்றனர். இம்மெய்கண்ட நூல்கள் விளக்கும் வாழ்வியல் உண்மைகளை இறையியல் உயிரியல் தளையியல் என்னும் மூன்று தலைப்புகளில், இங்கு மிகமிகச் சுருக்கமாக இயன்ற பெற்றி காண்போம்.

## இறையியல்

மெய்கண்ட நூல்கள் பதினன்கிலும் விளக்கப்பெறுவனவற்றைப் பொதுவாக, பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களாகப் பெரியோர்கள் குறிப்பர். இவற்றுள் பதியை **இறை** என்றும், பசுவை **உயிர்** என்றும், பாசத்தைத் **தளை** என்றும், தமிழில் வழங்கும் மரபு உண்டு. இம்முப்பொருள்களைப் பற்றிச் சிவஞான போதம் சிவஞானசித்தியார் சிவப்பிரகாசம் என்னும் நூல்கள் விளக்கியருள்கின்றன. மெய்கண்டதேவர் பிரமாண இயல் இலக்கணவியல் சாதனவியல் பயனியல் என நான்கு இயல்களாகப் பிரித்துக்கொண்டு, ஒவ்வோர் இயலுக்கும் மும்மூன்று நூற்பாக்களாக, 12 நூற்பாக்களால் தமது சிவஞான போதம் என்னும் நூலை இயற்றியருளினர்.

| | | |
|---|---|---|
| 1. | பதியுண்மை | பிரமாண இயல் |
| 2. | பாசவுண்மை | |
| 3. | பசுஉண்மை | |
| 4. | பசு இலக்கணம் | இலக்கண இயல் |
| 5. | பாச இலக்கணம் | |
| 6. | பதியிலக்கணம் | |
| 7. | ஞானம்பெறுவோர் இயல் | சாதன இயல் |
| 8. | ஞானத்தை உணரும் முறை | |
| 9. | ஞானத்தை அடையும் முறை | |

(9) "Saiva Siddhanta may be ranked among the perfect and cleverest system of human thought"

—Dr. KAMIL ZVELEBIL.

10. பாச நீக்கம்
11. சிவப்பேறு
12. அணைந்தோர் தன்மை
} பயனியல்

இங்ஙனம் அமைந்துள்ள சிவஞானபோத நெறியினையேஏற்றபெற்றிபின்பற்றித் தழுவிச் **சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம்** என்னும்நூல் கள் முறையே வழி நூலாகவும், சார்பு நூலா கவும் அமைந்துள்ளன.

## இறையுண்மை

மெய்கண்டதேவர், தமது சிவஞானபோத நூலில், தாம் எடுத்துக்கொண்ட முறை மைக்கு ஏற்ப, இறையுண்மை நிறுவ முற்படு கின்றார். நம்போன்ற எளிய அறிவற்ற பாமர மக்களுக்கு இறையுண்மையில் போதிய தெளிவு இருப்பதில்லை யாதலின், இறைவன் ஒருவன் உளனோ இலனோ என்று ஐயுற்றுத் தடுமாறி வருகின்றோம். ஆனல் ஞானிகளுக்கு அத்தகைய ஐயம் சிறிதும் ஏற்பட வாய்ப்பே யில்லை. அவர்கள் நனவிலும், கனவிலும் இறைவனோடு கலந்து பழகி இன்புற்றுத் திளைத்து நிற்பவர்கள். அதனாலேயே தாம் அநுபவித்து இன்புற்ற இறையருள் நலங்களை வியந்து விதந்து விவரித்துப்பாடி மகிழ்ந் தருளிய ஞானிகள் எவரும், கடவுள் உண்மைக் குக் காரணங்கள் தேடிக் கண்டுபிடித்து உரைக்க முற்பட்டிலர். பிறவிக் குருடருக்குச் சூரியன் தெரியாமலிருக்கலாம். ஆனல் ஏனை யோருக்குச் சூரியன் ஒருவன் உளன் என்று காரணங்கள் சொல்லி விளக்கிக் காட்ட வேண்டுவதில்லை யன்றோ? ''காணுதாற் காட்டுவான் தான் காணுன்; காணுதான் கண்டானும் தான்கண்டவாறு'' என்பது திருவள்ளுவர் அளிக்கும் அறிவுரை. ''கடவுளை நம்புபவர்களுக்கு எத்தகைய விளக்கமும் தேவையில்லை. கடவுளை நம்பாதவர்களுக்கு எவ்வளவுதான் விளக்கங்கள் கூறினாலும் பயனில்லை''10. மேலும் கடவுள் என்பது நாம் நம் எளிய அறிவினல் சுட்டி அறியக்கூடிய பொருளன்று. நாம் அவனை அவனருள்கொண்டே சுட்டிறந்து நின்று அநுபவித்து உணர்தல் வேண்டும். அங்ஙனம் சுட்டிறந்து அநுபவித்து உணர்வதற்கு நமக் குத் தகுந்த பக்குவநிலை அமைதல் வேண்டும். இதனையே தாயுமான சுவாமிகள்,

''கன்னிகை ஒருத்தி சிற்றின்பம் வேம்பெனினும்
கைக்கொள்வள் பக்குவத்தில்
கணவன் அருள்பெறின் முனே சொன்னவாறு
என்? எனக் கருதி நகையாவள்''

என அருளிச் செய்தார். இதனாலேயே ஞானி கள் எவரும் இறையுண்மை நிறுவுவதற்குக் காரணகாரிய விளக்கங்களைக் கூற முற்படு வ்தோ முயல்வதோ இல்லை. ஆயினும் மெய் கண்டார் பெருமான் நம்மீது வைத்த கருணை யினல் இறையுண்மை நிறுவுவதற்கு ஏற்ற பெற்றி சில காரணங்களும் நம் அறிவு நிலைக் கேற்ப ஒருசிறிது காட்டியருள முற்படுகின்றார். அவர் தம்முடைய உள்ளொளியாலும் உயரிய அருள் அநு பவத்தினாலும் செவ்விதின் தெளிந் திருந்த இறையுண்மையினை, நம்மாட்டு அவர் கொண்ட இரக்கம் காரணமாகத் தருக்க நெறி முறையில் வைத்துக் காட்டி அறிவுறுத்து கின்றார்.

உலகிலுள்ள பல வேறு வகைத் தத்துவச் சிந்தனையாளர்களுள் பலர் கடவுளுண்மையை மறுப்பர். வேறு சிலர் உயிர் என்பதொன்று இல்லை என்பர். மற்றும் சிலரோ உலகமே யில்லை என்பர். உலக வாழ்க்கையையே வெறும் கனவு, மாயை, மித்தை, பொய்த்தோற்றம் என்றெல்லாம் சிலர் குறிப்பிடுவர். மெய் கண்டார் மனிதகுல வாழ்வின் அடிப்படை யில் தத்துவநுட்பங்களை உணர்த்த வந்தவர். ஆதலின் அவர் உலகம் ஒன்று உண்டு என்ப தனை அனைவருக்கும் நடைமுறையிற் காட்டி உடன்படுவித்து, அங்ஙனம் காணப்பட்ட உலகத்தைக்கொண்டு, காணப்படாத கடவுள் உண்மையினை நிறுவி உணர்த்த முற்படு கின்றார். இவ்வுலகமானது பல்வேறு வகைத் தாய்க் காணப்படுகின்றது. பல பாகுபாடு களைக் கொண்டு திகழ்கின்றது; அறிவற்ற சடப்பொருளாக உள்ளது; சுட்டியுணரப் படுகின்றது. மேலும் தோன்றுதல், நிலை பெறுதல், மறைதல் என்னும் முத்தொழில் களை உடையதாகத் திகழ்கின்றது. இத் தொழில்கள் தாமே நிகழ்வன அல்ல. அறி வற்ற சடப்பொருள்களில் நிகழும் இத்தொ ழில்களை, அறிவுடைய ஒருவன் முறைப்படி நிகழ்த்துவித்தல் வேண்டும். செய்வோரை யின்றிச் செய்வினை இல்லை. இவ்வுலகம் தானே தோன்றியதன்று. அறிவுடைய ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டதே ஆதல் வேண்டும். இங்ஙனமெல்லாம், பகுத்தறிவுக்கும் தருக்க நெறிமுறைகளுக்கும் முற்றுகப் பொருந்தும் வகையில் தெற்றென விளக்கிச்செல்கின்றார், மெய்கண்டார்.

''அவன்அவள் அது எனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே; ஒடுங்கி மலத்து உளதாம்;
அந்தம் ஆதி என்மனார் புலவர்''

---

(10) ''For those who believe in God, no explanation is necessary ; for those who do not believe, no explanation is possible''

என்னும் சிறிய நூற்பாவில், மிகவிரிவான பொருள்களைச் செறித்துவைத்து, அவர் சிறப்புற விளக்கியருளியிருக்கின்றார்.

ஒருவனே டொருத்தி ஒன்றென்
றுரைத்திடும் உலக மெல்லாம்
வருமுறை வந்து நின்று
போவதும் ஆத லாலே
தருபவன் ஒருவன் வேண்டும்,
தான்முதல் ஈறும் ஆகி
மருவிடும் அனுதி முத்த
சித்துரு மன்னி நின்றே.

என்பனபோலவரும் சிவஞான சித்தியார் செய்யுட்கள், அச்சிவஞானபோத நூற்பாவின் அடியொற்றி மிகவிரிவாகப் பல பாடல்களில், வினு விடை முறையில், சிறந்துயர்ந்த கவிதை நடையில் விளக்கிச் சென்றிருத்தல், தக்கோர் பால் பல்கால் பயின்றுணர்ந்து தெளிந்து மகிழற்பாலது. அவையிற்றையெல்லாம் இங்கு விவரித்து எடுத்து விளக்குதல் இயலாதாதலின், இவ்வடிப்படையினைத் தழுவிச் சில பொதுவான சிந்தனைகளை மட்டும் இங்கு ஒரு சிறிது கண்டமைதல் சாலும்.

## வாழ்வியற் சிந்தனைகள்

உலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவாகக் கடவுள் உணர்ச்சி யென்பது என்றுமே இருந்து வந்திருக்கின்றது. மனிதனுக்குரிய உணர்ச்சிக் கூறுகள் பலவற்றுள், கடவுள் பற்றிய உணர்ச்சிக் கூறும் இயல்பாகவே அமைந்து கிடக்கின்றது. நாகரிகம் எய்தப் பெறாத காட்டு மக்கள் முதல், நாகரிகத் துறையில் நனிசிறந்த மேன்மக்கள் ஈறாக, அனைவருக்குமே அவரவர்களின் நிலைக்கும் பண்பாட்டுக்கும் ஏற்பக் கடவுள் உணர்ச்சி அமைந்து விளங்கிவரக் காண்கின்றோம். மனித குலம் தோன்றிய காலம் முதல் இயல்பாகவே எல்லா நாடுகளிலும் எல்லா இனத்தினர்களிடையும், கடவுளுணர்ச்சியும் வழிபாடும் நிலவி வருகின்றன.

இவ்வுலகில் உள்ள சூரியன், சந்திரன், பரந்த வானப் பெருவெளி, அங்கு ஒளிரும் எண்ணில்லாத விண்மீன்கள், கடல்கள், மேகங்கள், ஓங்கியுயர்ந்த மலைகள், நெருப்பும் காற்றும் போன்ற பூதங்கள், மற்றும் எத்தனையோ சரம் அசரம் என்னும் இயங்கியல் நிலையியற் பொருள்கள் என்பவற்றின் இயல்பையெல்லாம் எண்ணிப் பார்த்தால், கடவுள் ஒருவர் உண்டு என்னும் உணர்வு கட்டாயம் உண்டாகும். உலகப் படைப்பின் திறமும் இயற்கையும் எத்துணை வியக்கத்தக்கனவாக இருக்கின்றன. சூரியன் காலையிலும், சந்திரன் மாலையிலும், விண்மீன்கள் இரவிலும் தோன்றித் தத்தம் ஒழுங்கு முறைகள் தவறாமல் ஒளிவீசி உழன்று கொண்டு வருகின்றன. பரந்த பெருங் கடலின் நீரை முகந்து கொண்டு பல இடங்கட்கும் பரவிச் சென்று மேகங்கள் மழை பொழிந்து பயிர்களை வாழ்விக்கின்றன. கடல் தன் எல்லையிற் கடந்து பொங்கி விடாமல் ஒரு வரம்புக்குள் அடங்கி நிற்கின்றது.

காலம் என்பது பகலும் இரவும் மாறி மாறி வருவதுடன், இளவேனில் முதுவேனில் கார் காலம் குளிர்காலம் முன்பனிக்காலம் பின் பனிக்காலம் எனப் பல்வேறு பருவங்களாகவும் அமைந்து, அவ்வக் காலங்களுக்கு ஏற்ற மரம் செடி கொடி மூலிகைவகைகளை உண்டாக்கி வளர்த்தும், இயற்கை நிகழ்ச்சிகளைத் தோற்றுவித்தும், காய்கனி பயிர் வகைகளை அளித்தும் உதவி புரிகின்றது.

பாம்பு முதலிய நச்சு உயிர்கள், மந்திரம் முதலியவற்றுக்குக் கட்டுப்பட்டு வசமாகின்றன. உயிர்க் கூட்டங்கள் தம்முடைய இன வளர்ச்சியுற்றுப் பெருகி, வழி வழியே தம் பண்புகள் மாறாமல் விளங்கிவருகின்றன. யானை முதல் எறும்பு ஈறாக உள்ள, எண்ணில்லாத கோடிக்கணக்கான உயிரினங்கள் யாவும், ஆணும் பெண்ணுமாக அமைந்து கூடிக்கலந்து வாழ்ந்து பெருகி வருகின்றன. இங்ஙனமே செடி கொடி வகைகளில் ஒவ்வொன்றும் தமக்கென ஒவ்வொரு தனித்தனி அமைப்பும் பண்பும் பயனும் பெற்றுத் திகழ்கின்றன.

மக்களில் சிலர் குருடு செவிடு ஊமை முடம் முதலிய குறைபாடுகள் உடையவர்களாக உள்ளனர். ஒருசிலர் தீராப் பிணியாளர்களாயும், மற்றும் சிலர் காண்பதற்கே அருவருப்பை விளைவிக்கும் குரூபிகளாகவும் உள்ளனர். வேறுசிலர் பெருஞ் செல்வராக விளங்குகின்றனர். ஒரு சிலர் வறுமையிலேயே வாடி வதங்குகின்றனர். ஒருசிலர் பேரறிஞர்களாக விளங்குகின்றனர். மற்றும் சிலரோ அறியாமையிற் கிடந்து அழிகின்றனர். சிலர் நல்லொழுக்கம் தலைநிற்கின்றனர். பிறர் சிலரோ தீயொழுக்கமே பேணி வாழ்கின்றனர்.

நம் உடலில் ஒன்பது பெருந்துளைகளும் பல சிறு துளைகளும் உள்ளன. ஓட்டைக் குடத்திற்குள் அடங்கியுள்ள காற்றுப்போல், நம் உயிர் அதன்கண் ஒருவாறு தங்கியிருக்கின்றது. நம்முடைய உடம்பில் ஓர் உறுப்புக் குறைந்தால் அதனை நாமே மீட்டும் படைத்துக் கொள்ள இயலவில்லை. ஒவ்வோர் உடம்பிலும் உயிராகிய காற்று, தங்கி இயங்கி வருகின்றது. உயிர்களின் பிறப்பும் இறப்பும் அவற்றின் வசத்திலில்லை. நாம் விரும்பும் போது இறக்கவோ இறக்காமலிருக்கவோ இயலுவதில்லை. அங்ஙனமே நம் முன்பின் பிறவிகளும், நாம் இறந்த பின் இருக்கும் நிலைகளும், மறைபொருளாகவும் வியப்பாகவும் உள்ளன.

நாம் நினைப்பது போலவோ, விரும்பி மகிழ்வது போலவோ எதுவும் நடப்பதில்லை. சில சமயங்களில் நாம் சிறிதும் எதிர்பாராத நன்மை தீமைகள் ஏற்படுதலைக் காணுகின்றோம். நம் வாழ்க்கையின் போக்கு நமக்கே விளங்குவதில்லை. மகப்பேறு வேண்டுவோர்க்கு அது கிடையாமையும், வேண்டாதார்க்கு அது மிகுதியாகக் கிடைத்தலும், ஆண் மகவு வேண்டுவோர்க்குப் பெண் மகவு பிறத்தலும், பெண் மகவு வேண்டுவோர்க்கு ஆண்மகவு உதித்தலும், சில சமயங்களில் இரண்டுமல்லாத அலித்தன்மையில் குழந்தைகள் தோன்றுதலும் போன்ற, பலப்பல நிகழ்ச்சிகளைக் காண்கின்றோம்.

உலகப்பொருள்க ளெல்லாம் சடம் சித்து என்று இருவகைப்படும். சடம் என்பது உயிரில் பொருள். சித்து என்பது உயிருடைய பொருள். சடப் பொருள்கள் உயிரும் உணர்வும் உடையன அல்ல வாதலின் தாமே இயங்கமாட்டா. சித்துப் பொருள்களோ உயிரும் உணர்வும் உடையனவாயினும், சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவை. தமக்கெனச் சுதந்திரமில்லாதவை. ஆதலால் இவையிரண்டிற்கும் வேறாக உள்ள பேரறிவும் பேராற்றலும் உடைய பரம்பொருளே, இவ்வுலகைப் படைத்து இயக்குவதாதல் வேண்டும். குடத்தைக் காணுங்கால் அதனை வனைந்த குயவன் ஒருவன் உண்டென உணர்வோம்; நல்ல அணிகலன் ஒன்றைக் காண நேர்ந்தால் அதனைச் செய்த கம்மியன் ஒருவன் உளன் எனத் தெளிவோம். ஓர் அழகிய ஆடையைக் காண்பின் அதனை நெய்த நெசவாளன் ஒருவன் உண்டு எனக் கொள்வதில் நமக்கு ஐயம் ஏற்படுவதில்லை. அவ்வாறே இவ்வுலகத்திற்கும் ஒரு கடவுள் உண்டு என நாம் உறுதியாக நம்பலாம்.

பரந்த உலகத்தை நோக்கி யுணருந்தோறும், இதனைப் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என நம்புவது அறிவிற்கு ஏற்றதேயாகும். அக் கடவுட் பொருளே நமக்குத் தனு (உடல்) கரண (கருவி) புவன (உலகம்) போகங் (நுகர் பொருள்)களைக் கொடுத்து, நம்முடைய நல்வினை தீவினைகளுக்கேற்ப இன்ப துன்பங்களை நல்கி, நம்மைக் காத்து ஆட்கொண்டு வருகிறது. இவ்வுண்மைய உணர்ந்து நம்பி வாழ்வதனால் நமக்கு நம் உலகியல் வாழ்வில் நன்மையே ஏற்படும் என்பது திண்ணம். "நம்பினோர் கெடுவதில்லை; இது நான்கு மறைத் தீர்ப்பு" என்பர் பாரதியார். நம்பிக்கையினால் விளையும் நலங்கள் பல.

"இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாத மறைவான ஏதோஒரு பேராற்றல் எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கின்றது. அதனை நாம் காணவிட்டாலும் உள்ளதென்று உணருகின்றோம். காணப்படாத இந்த ஆற்றல்தான், தன்னை நாம் உணர்ந்துகொள்ளும்படிப் புலப்படுத்துகின்றது. நாம் நம் புலன்களால் உணர்கின்ற உலகியற் பொருள்களைப் போல இல்லாமல், அவற்றிற்கு வேறுபட்டதாக அது விளங்குகின்றது. அதனாற்றான் எந்தச் சான்றுகளும் காட்டி விளக்கி அதனை நாம் நிறுவ முடியவில்லை. அது நம் அறிவுக்கும் சான்றுகளுக்கும் அப்பாற்பட்டுக் கடந்து நிற்கின்றது.

அப்பேராற்றலே கடவுள். கடவுட் பொருள் வெளிப்புறச் சான்றுகளால் அறியப்படுவதன்று. தமது உள்ளத்தினுள்ளே அதன் உண்மை இயல்பு விளங்குதலைக் கண்டு உணர்ந்ததனால், புனிதமடைந்த ஞானிகள் அல்லது அருளாளர்களின் வாழ்க்கைப் பண்பினாலும் ஒழுக்கத்தினாலுமே, அதன் இருப்புப் புலனாகும். எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும். வாழையடி வாழையாக இடையறாமல் தொடர்ந்து தோன்றிவரும் மெய்யுணர்வாளர்கள் அல்லது முனிவர்களின் அனுபவங்களிலேயே கடவுளை விளக்கும்சான்றுகள் காணப்படும். அச்சான்றுகளை மறுதலிப்பது, ஒருவர் தன்னைத் தானே மறுதலித்துக் கொள்ளுதற்குச் சமமாகும்."

## காந்தியடிகள்

"கடவுள் என்பது காரண காரியங்களைக் காட்டி, வெறும் சொற்போர் செய்வதன் வாயிலாக அறியப்படக் கூடிய பொருளன்று. சொற்போர் புரிவதன் மூலம், கடவுளுண்மையை நிறுவும்படி நீங்கள் என்னைக் கேட்பீர்களேயாயின், நான் தோல்வியடைதல் திண்ணம். ஆனால் நான் உங்களுக்கு இதனை உறுதியாகக் கூற முடியும். இந்த அறையில் நீங்களும், நானும் அமர்ந்திருக்கின்றோம் என்பதை எவ்வளவு தெளிவாக யான் உணர்கின்றேனோ, அதனைவிட மிகமிகத் தெளிவாகக் கடவுள் இருத்தலை யான் உணர்கின்றேன்."

"காற்றில்லாமலும் நீரில்லாமலும் நான் வாழ்தல் கூடும். ஆனால் கடவுளின்றி என்னால் வாழ்தல் இயலாது. நீங்கள் என் கண்களைப் பறிக்கலாம், என் மூக்கைத் துண்டிக்கலாம், அவற்றால் என்னைக் கொல்லமுடியாது. ஆனால், கடவுளிடம் யான் கொண்டுள்ள நம்பிக்கைகளைச் சிதறிப்போகச் செய்யுங்கள்! அப்போதே யான் இறந்து படுவேன்" எனக் காந்தியடிகள் கூறியிருத்தல், இங்கு நாம் பெரிதும் கருதுதற்குரியது.

## ஏதுக்கள்

'தெய்வம் என்பதோர் சித்தம்' இயல்பாகவே அமையப் பெறுதவர்களுக்கு, அஃது உண்டாகும் வண்ணம், நம் தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள் எத்தனையோ அறிவுரைகளும்

அருளுரைகளும் வழங்கியுள்ளனர். சிறப்பாக நம் சைவ சித்தாந்த சாத்திரங்கள் ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதித்துக் காட்டி, நமக்குத் தெய்வ உண்மையினைத் தெளிவுறுத்துகின்றன.

இந்நாளில் மேலைநாட்டு அறிஞர்களும் மனித வாழ்க்கைக்குத்தெய்வங்கொள்கையின் இன்றியமையாமையினை உணர்ந்து வற்புறுத்தி வருகின்றனர். (1) இயற்கையமைப்புக் காரணம்; (2) சமய வாழ்வியல் அனுபவக் காரணம், (3) ஒழுக்க நெறிக்காரணம் (4) குறிக்கோள் வகைக் காரணம், (5) தொழிற் படு முறைமைக் காரணம், (6) புறத்தோற்ற உண்மைக் காரணம், (7) நம்பிக்கையுரிமைக் காரணம் முதலிய பலவற்றைக் காட்டி; மேலை நாட்டு அறிஞர்கள் கடவுளுண்மையினை நிறுவுவர்.

### வாழ்க்கைச் சிக்கல்கள்

ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும், சில பல நிகழ்ச்சிகளோ, அனுபவங்களோ, இன்றியமையாமைகளோ ஏற்பட்டு, எங்ஙனமேனும் சமய உணர்வையும் கடவுள் நம்பிக்கையையும் எழுப்பியே விடுகின்றன. முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பர் ஆகியே ஒழிகின்றனர். நிலைபேறுடையன போலத் தோன்றும் பொருள்களெல்லாம் முடிவில் நிலை பேறின்றி அழிந்து மறைந்து போதலை நாம் நாடோறுங் கண்டு வருகின்றோம். மனிதனின் செருக்கும் பெருமிதமும் முனைப்பும் நாளடைவில் தேய்ந்து மாய்ந்து போகின்றன. பெருத்த துன்பங்களும், நோய்களும், தொல்லைகளும் நேருங்காலெல்லாம், மனிதன் தன்னுடைய சிறுமையினை உணரவேண்டியவன் ஆகின்றான். எல்லோரையும் அடக்கியாண்டு, யாவும் தம்மாலேயே நடப்பனவாகக் கருதித் தருக்கிக் களித்து நிற்போரும், பின்னொரு ஞான்று 'அந்தோ வினையே' என்று அழுங்கித் துன்பம் உழக்கக் காண்கின்றோம். தன்னுடைய அறிவும், முயற்சியும், ஆற்றலும் பிறவும் ஒருவரையறைக்கு உட்பட்டனவே என்று உணர்கின்றபோது, வரையறைக்கு உட்படாத பேரறிவும் பேரின்பமும் உடைய முழுமுதற் பெரும் பொருளின் துணையைத் தேடி அடைய, மனிதன் பெரிதும் ஆவலுற்று அலைகின்றான்.

### உலகியல் நிகழ்ச்சிகள்

பரந்துபட்ட இவ்வுலகியல் நிகழ்ச்சிகள் அனைத்தையும் கூர்ந்து ஆராய்ந்து காணுந்தோறும், அவற்றிற்கெல்லாம் மூல முதற் காரணமாக இருந்து இயக்கிவரும் ஒப்புயர்வற்ற முழு முதற் பெரும் பொருளின் உண்மையினை யாவரும் இனிது உடன்படவே வேண்டியுள்ளது. நாம் நினைப்பது ஒன்றாக இருப்ப, நிகழ்வதோ பிறிதொன்றாக முடிகின்றது. எத்துணை உயர்ந்த இன்பங்களை நுகர்வோரும், சின்னாளில் அவற்றினை வெறுத்தொதுக்கி இனையதென்று கூற இயலாத வேறேதோ ஒரு பேரின்பத்தினை விழைந்து நின்று, உள்ளம் அமைதி யிழப்ப ஏக்கற்று அலமந்து உழல்கின்றனர். நமக்குத் துணை என நம்மால் நம்பப் பெறுபவர்கள் பலரும் நம்மைக் கைவிடநேரும் நிலையில், ''நான் இந்த எட்டாம் ஹென்றிக்கு ஊழியஞ் செய்ததற்குப் பதில் இறைவனுக்கு ஊழியம் செய்திருப்பின், அப் பெருமான் என்னை இத் தள்ளாத வயதில் இங்ஙனம் கைவிட்டிருக்க மாட்டான்''[11] எனக் கார்டினல் உல்சி என்பார் கதறிப் புலம்பியது போல, இறைவனின் துணையை எதிர் நோக்கியே நாமும் வருந்திக் கதறி அலறும் நிலையை அடைகின்றோம். இனைய செய்திகள் பலவும் கருதுவார்க்குத் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாதல் திண்ணம்.

### வியத்தகு அமைப்பு

''நமது மனித உடம்பில் 600 தசைநார்கள், 1000 மைல் நீளமுள்ள இரத்தக் குழாய்கள், 550 இரத்த நாளங்கள், 16 சதுர அடிப் பரப்புடைய தோல், 15 லட்சம் வியர்வைக் கோளங்கள், மூச்சுப்பையில் தேன் கூடு போன்ற 70 கோடி கண்ணறைகள், $3 \times 10^{12}$ நரம்புக் கண்ணறைகள், 300 லட்சம் வெள்ளையணுக்கள், $18 \times 10^{13}$ சிவப்பணுக்கள், $2\frac{1}{2}$ லட்சம் தலைமயிர்கள் ஆகியவை உள்ளன. 70 ஆண்டுகளில் நமது இதயம் 250 கோடி தடவைகள் துடிக்கின்றது. 5,00,000 டன் ரத்தத்தை வெளியேற்றி உடம்பிற் பரவச் செய்கின்றது. நாள்தோறும் 36 அவுன்ஸ் அளவு உமிழ்நீர் சுரந்து விழுங்கப்படுகின்றது. 120 முதல் 240 அவுன்ஸ் வரை வயிற்றிற் செறிநீர் ஊறி, உணவைச் செறிப்பித்துக்

---

1. The teleological and evolutionary argument.
2. The religious experience argument.
3. The moral argument.
4. The idealistic argument.
5. The pragmatic argument.
6. The realistic argument.
7. The right to believe argument;

11. "Had I but served god, instead of Henry the Eighth, He would not have deserted me like this in my old age."

—CARDINAL WOLSEY.

கிருமிகளைக் கொல்லுகின்றது (12). இது போன்ற செய்திகளை அறிந்து எண்ணுந் தோறும் நாம் பெரிதும் இறும்பூது எய்துகின்ற னம் அல்லமோ? நம் உடலாகிய பிண்டத்தின் கண் நிகழும் இத்தகைய நிகழ்ச்சிகளைப் போலவே, அண்டத்தின் கண்ணும் எத்த னையோ பலப்பல வியத்தகு நிகழ்ச்சிகள் நடை பெறுகின்றன. அவற்றையெல்லாம் ஒரு சிறி தேனும் உன்னித்துணரவல்லார், கடவுள் உணர்ச்சியுடையவ ராகாமல் இருத்தல் ஒல்லுமோ?

## சார்லஸ் எலியட்

சர் சார்லஸ் எலியட் என்னும் பேரறிஞர் ''யாராவது கடவுள் இல்லை என்று கூறினல், இறந்தொழியக்கூடிய, பரமாணுவினும் மிகச் சிறிய, ஓர் அற்ப மனிதன், இவ்வுலகின் ஓர் அணுத்துணைப் பரப்பில், ஒரு நொடி நேர அளவு மட்டுமே வாழ்ந்து கொண்டு, அழகும் வியப்பும் ஒழுங்கமைப்பும் நிறைந்து எல்லை யின்றி விரிந்து விளங்கும் பேரண்டத் தொகுதி களையெல்லாம் நன்கினிது கண்டுணர்ந்து வைத்துங் கூட, மெய்ப்பிக்கப்பட முடியாத ஒரு கருத்தை, இத்துணை உறுதியாகக் கொள் ளுதல் எவ்வாறு இயலும்? என்று தான் நான் வினவுகிற்பேன்'' (13) என்று குறிப்பிடு கின்ருர்.

## சிசரோ

இங்ஙனமே, இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உரோம நாட்டில் உயிர் வாழ்ந்திருந்த சிசரோ என்னும் பெரு நாவலர், ''இயற்கைப் பொருள்களில் மனி தனின் அறிவு-ஆராய்ச்சி-ஆற்றல் என்பனவற் ருற் செய்து நிறைவேற்ற இயலாத ஏதோ ஒன்று அமைந்து கிடக்கின்றது, அது மனிதனை விடச் சிறந்ததாகவே இருத்தல் வேண்டும், அது கடவுளைத் தவிர வேறு யாதாக இருத்தல் கூடும்?'' 14 என அறைகூவி அறிவுறுத்தியிருப் பதும், ஈண்டு நாம் உணர்தற்குரியது.

## பேராசிரியர் யுங்

உலகப் புகழ்பெற்ற உளநூல் அறிஞர் ஆகிய பேராசிரியர் யுங் என்பவர் பின்வருமாறு கூறு கின்ருர். ''கடந்த முப்பது ஆண்டுகளாக உலக நாகரிக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும் என்பாற் கலந்து ஆய்வுரை கேட்டுள்ள னர். என்னுடைய பிணியாளர்கள் அனைவருள் ளும், வாழ்க்கையின் இரண்டாம் பகுதியில்— அதாவது, முப்பத்தைந்து வயதுக்கு மேல்— தம் இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசி வழியாகத் தமது வாழ்க்கையிற் சமயவுணர்வு (தெய்வங் கொள்கை) கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள், ஒருவராவது இல்லை. அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம். உயிர்ப்புடைய ஒவ்வொரு மதமும் அவ்வக்காலத்தில் தன்னைப் பின்பற்றும் மக்க ளுக்குத் தருகின்ற மனநிறைவுணர்ச்சியை, அவர்கள் பெருமல் இழந்துவிட்டமையே யாகும். அவர்களில் ஒருவராவது மீண்டும் சமயவுணர்வு கைவரப் பெருமல், உண்மையில் தம்முடைய பிணி தீரப் பெற்றிலர்'' 15 என்று வலியுறுத்திக் கூறுகின்ருர்.

---

(1) "There are in the human body 600 muscles, 1000 miles of blood vessels, 550 arteries. 16 square feet skin, $1\frac{1}{2}$ million sweat glands, 700 million cells in honeycomb fashion in the lungs, $3\times10^{12}$ nerve cells, 30 million white corpuscles, $18\times10^{18}$ red corpuscles and 2,50,000 hairs on the head. In seventy years the heart beats 2500 million times and lifts 5,00,000 tons of blood. 3pints of saliva are swallowed daily and the stomach generates 5to 10 quarts of gastric juice daily which digest the food and destroys the germs''

-LOUIS LEGUEN.

(13) "If you say 'There is no God' I can only ask you, how a speck of a mortal, living for a moment, on an atom of an earth, in plain sight of an infinite universe, full of beauty wonder and design, can confidently hold so improbable a view''

-Sir CHARLES ELIOT.

(14) "There is some thing in the nature of things, which the mind of man, which reason, which human power cannot effect, and certainly that which produces this must be better than man. What can this be but God?''

-CICERO.

(15) "During the past thirty years, people from all the civilised countries of the earth have consulted me. Among all my patients in the second half of life that is to say, over thirty-five years there has not been one, whose problem in the last resort was not that of finding a religious outlook on life. It is safe to say that every one of them fell ill, because he had lost that which the living religions of every age, have given to their followers, and none of them has been really healed who did not regain his religious outlook."

-PROFESSOR C. G. JUNG.

இங்ஙனம் பேராசிரியர் யுங் அவர்கள் கூறுவது, ஆசிரியர் திருவள்ளுவர் பெருமான்,

''தனக்குவமை இல்லாதான்
தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.''

என இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இயம்பி யருளிய பொய்யா மொழியின் எதிரொலி போலவே காணப்படுகின்றது அன்றோ?

## பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்

இவ்வாறே, உலகப் புகழ்பெற்ற மற்றொரு பேரறிஞரும், தத்துவ கணிதமேதையும் ஆகிய பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் அவர்கள் கூறுவதும், நம்மனோர் கருத்தில் இருத்துதற்குரியது. ''நம் கால நிலைக்கு, வேண்டுவன சில உள்ளன.. நான் கூறப்புகும் செய்தியின் அடிப்படை அல்லது வேர் யாதெனில், மிக எளிமையானதும் மிகப் பழமையான முறையில் அமைந்ததுமான ஒன்றே யாம். நான் கூற முற்படுவது மிக மிக எளிமையும் பழமை முறையும் வாய்ந்ததாதல் பற்றி, ஒரு சிலர் என்பாற் புன்முறுவல் பூத்து, என்னை ஏளனம் செய்யக்கூடுமே என்றஞ்சி அதனைக் குறிப்பிடுவதற்கு நான் நாணுகின்றேன். அதனைக் குறிப்பிடுவதற்காக அருள்கூர்ந்து என்னை மன்னித்து விடுங்கள்! அதுவே அன்பு, 'இறைமை அன்பு' அல்லது சமய உணர்வோடு கூடிய இரக்க உள்ளம் ஆகும். இவ்வுணர்வை நீங்கள் பெறுவீர்களாயின், உங்கள் வாழ்க்கைக்கு ஓர் உயரிய நோக்கமும் செயல்களுக்கு ஒரு வழி காட்டியும், மனவுறுதிக்கு ஒரு காரணமும், அறிவின் நேர்மைக்கு ஓர் இன்றியமையாத தேவையும் பெற்றவர்கள் ஆவீர்கள்'' 16,

## எமர்சன்

''கடவுள் ஒருவர் உண்டு என்பது, நம்மைச் சுற்றி நாடோறும் நடைபெறுகின்ற செயல்களை ஒரு சிறிது உன்னிப் பார்த்தாலே நமக்குப் புலனாகும். நமக்கு மேற்பட்ட இயற்கைச் சட்டம் ஒன்று இயங்கிக்கொண்டிருக்கின்றது. அதுதான் உலக நிகழ்ச்சிகளை உருவாக்கி ஒழுங்குபடுத்தி வருகின்றது. ஏதோ நம்மால்தான் நடப்பதுபோலக் கருதிக் கொண்டு நாம் மேற்கொள்ளும் முனைப்பு மிக்க செயல்கள், ஒரு வகையில் தேவையில்லாதனவும் பயனற்றனவுமே யாகும். எளிய இயல்பான ஆடம்பரமற்ற செயல் நிலையில் தான், நாம் வன்மையுடையவர்களாகின்றோம். செருக்கற்ற பணிவுடைமையினால் தான், நமக்குத் தெய்வீக நிலை கிடைக்கின்றது. நம்பிக்கையும் அன்புமே நம்முடைய ஏராளமான கவலைச் சுமைகளினின்று நம்மை விடுவித்து, நமக்கு நலம் விளைவிக்கின்றன. ஓ! என் அன்பிற் சிறந்த உடன்பிறப்பாளர்களே! கடவுள் இருக்கின்றார்.''

''இயற்கைப் பொருள்களினுள்ளும், ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திற்கு மேலும், கடவுள் என்ற ஓர் உயிர்ப்பொருள் உலவி நிலவி வருகின்றது. அதுவே நம்மை இயக்கி நிற்கின்றது. உலக அமைப்பை நாம் ஏதும் பிறழச் செய்துவிடாதபடி அதுதான் கவனித்துக் கொள்கின்றது. உலகப் பொருள்களிலெல்லாம், அது தன்னுடைய ஆற்றல் மிக்க கவர்ச்சித் திறனைப் பாய்ச்சி ஊடுருவச் செய்துள்ளது. அதன் அறிவுரையை உடன்பட்டு ஒழுகும்பொழுது, நாம் வளர்ச்சியும் செழிப்பும் அடைகின்றோம். அதன் சிற்றுயிர்களை நாம் வருத்த முற்படும்போது, அது நம் கைகளைப் பிணித்துவிடுகின்றது. அல்லது நம்மையே தாக்குமாறு செய்கின்றது. உலகப் பொருள் அமைப்புகள். செயல்கள் யாவுமே, கடவுள் ஒருவர் உண்டு என்று நமக்கு உணர்த்தி, நம்பிக்கை கொள்ளச் செய்யும் வகையிலேயே அமைந்திருக்கின்றது. 17'' என்று ரால்ப் வால்டோ எமர்சன் என்னும்

---

(16) 'There are certain things that our age needs and certain things it should avoid. The root of the matter is a very simple and old-fashioned thing, so simple that I am almost ashamed to mention it, for fear of the derisive smile with which wise cynics will greet my words. The thing I mean-please forgive me for mentioning it-is love, Christian love, or compassion. If you feel this, you have a motive for existence, a guide in action. a reason for courage, an impressive necessity for intellectual honesty.''

—Dr. BERTRAND RUSSEL.

(17) ''A little consideration of what takes place around us every day would show us that a higher law than that of our will, regulates events; that our painful labours are very unnecessary and altogether fruitless; that only in our easy, simple, spontaneous action are we strong, and by contenting ourselves with obedience become divine. Belief and love will relieve us of a vast load of care. ol my brothers God exists.

There is a soul at the centre of nature and over the will of every man, so that none of us can wrong the universe. It has so infused its strong enchantment into nature that we prosper when we accept its advice; and when we struggle to wound its creatures, our hands are glued to our sides, or they beat our own breasts. The whole course of things goes to teach us faith''.

—RALPH WALDO EMERSON

அமெரிக்க நாட்டுப் பேரறிஞர் கூறுவதும், ஈண்டு நம்மனோர் அறிதற்கு உரியது,

### சிவஞான சுவாமிகள்

தெய்வம் ஒன்று உண்டு எனத் தெளிவதற்கு வேறு பிறிது சான்றுகள் எதுவும் நாடுதல் வேண்டா. நம் உடம்பின் அமைப்பையும் இயக்கத்தையும் ஒரு சிறிது ஊன்றி உணர்ந்த அளவிலேயே, கடவுளுண்மை தெளியலாம். இதனை ''அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடல்'' எனவரும் சிவஞான போதப் பாயிரத் தொடருக்குப் பொருள் விளக்கும் இடத்தில் சிவஞான சுவாமிகள் பின்வருமாறு விவரிக்கின்றார்.

'உடம்பு முதலியவற்றின் ஆன்மாவை நாடுதலாவது: இவ்வுடல் சடம், இதன்கண் இன்பதுன்பங்களை அறிந்து நுகர்தற்கு இதனின் வேறாய ஆன்மா என்று ஒரு பொருள் உண்டு. ஓர் உடம்பில் நிகழும் இன்பதுன்பங்கள் மற்றோர் உடம்பின் அறியப்படாமையின், உடம்பு தோறும் ஆன்மாக்கள் வெவ்வேறு உண்டு.

அவை இவ்வுடம்பிற் கட்டுற்று நிற்றற்கு மூலமாய் ஒரு பந்தம் அநாதியே யுடையதாதல் வேண்டும் வேண்டவே, கேவலம்-சகலம்-சுத்தம் என்னும் மூன்று அவத்தைகள் உளவாம். நாடோறும் நனவும் கனவும் உறக்கமும் பேருறக்கமும் உயிர்ப்படங்குதலும் காணப்படுதலான், உடம்பிலும் ஆன்மா ஐந்தவத்தைப்படும். புலன்களை உணரும் நனவிடத்து நினைப்பும் மறப்பும் முறையானே மாறி மாறி நிகழ்தலின், கனவு நிலையிலும் ஆன்மா ஐந்தவத்தையுறும்.

இவ்வான்மாக்கள் உடம்பிற் கட்டுண்டு தம் வயத்தன அன்றி நிற்றலின், அவற்றிற்கு உடம்பு முதலியவற்றைப் படைத்து நடாத்தி ஒடுக்குதற்குப் பரமான்மா ஒருவன் உண்டு. அவன் இம்மூன்றனுள் ஒரோவொரு தொழில் செய்யும் கடவுளர்க்கு மேலாய் இவர்களையும் தொழிற்படுத்தி நிற்பன். அவன் உலகத்தைப் படைக்குங்கால் விகாரமின்றி உடனாய் நின்று, தனது சமவேத சத்தியான் இருவினைகட்கேற்ப மாயை என்றொரு சடசத்தியினின்றும் தோற்றுவித்து ஒடுக்குவன்.

அவன் அமலனாய் நின்றே இவ்வான்மாக்களுக்கு இன்ப துன்பங்களைக் கருவிகளின் வழி நுகர்விப்பன். அப்பரமான்மா அழி பொருள போலச் சுட்டி அறியப்படுவானும் அல்லன்; மெய்ப்பொருள் போல அறியபபடாதவனும் அல்லன்; வேறாய் அறியப்படுவன். அங்ஙனம் அறிகின்றவன் ஆன்மா; அறியப்படுகின்றவன் பரமான்மா.''

இதுபோன்ற சிறந்த விளக்கங்கள் சிலவும் நாம் தெய்வம் ஒன்று உண்டு எனத் தெளிவதற்குத் துணைபுரிவன ஆகும்.

### முடிவுரை:

தெய்வம் உண்டு எனத் தெளிந்து ஒழுகுதல், நம் மனித வாழ்க்கை சிறப்புறுதற்குப் பல்லாற்றானும் துணை புரியும். சமய வுணர்வும் தெய்வ நம்பிக்கையும், சிறந்துயர்ந்த பண்பு நலன்கள் பலப்பல வெளிப்பட்டு மேலோங்கித் திகழ்வதற்குக் காரணமாக அமைகின்றன. (18) சமயவுணர்வில்லாத ஒருவன் வேறு பிற துறைகளில் எவ்வளவுதான சீரும் சிறப்பு முற்று விளங்கினாலும், சமயவுணர்வும் தெய்வ நம்பிக்கையும் உடைய ஒருவன் முன்னிலையில் சிறிது தாழ்ந்தே நிற்பான். முன்னையவனிடம் இல்லாத ஏதோ ஒரு சிறந்த தனிப் பெருஞ் சிறப்பு, பின்னையவனிடம் அமைந்திருக்கக் காணலாம். (19) எனவே, நாம் அனைவரும் இத்தகைய தெய்வ உணர்வு மிக்கவர்களாய் விளங்கி, வையத்து வாழ்வாங்கு நலமுற வாழ முற்படுவோமாக!

—ஆசிரியர்.

---

(18) "The highest flights of charity, devotion, trust, patience, bravery etc., to which the wings of human nature have spread have been for religious ideals."

—PROF. WILLIAM JAMES·

(19) "When one compares thc deeply religious and spiritual person with the best and bravest of those who are not religious one sees, it must be confessed, that the former possesses something which others lack."

—PROF. J. B. PRATT

★

# உறவும் உணர்வும்

மாட்சிமிகு திரு. எஸ். மகராசன், B.A.B.L,
நீதிபதி, உயர்நீதிமன்றம், சென்னை.

குழந்தையோடு குலாவும் தாய் உள்ளத்தில் அன்பு வெறி ஏறுகிறது

''உச்சி தனைமுகந்தால்-கருவம் ஓங்கி
வளருதடீ!
மெச்சி யுனைஊரார்-புகழ்ந்தால் மேனி
சிலிர்க்குதடீ!''

என்று மலடியால் சொல்ல முடியாது; தகப்பனுல்கூடச் சொல்ல முடியாது; தாய்தான் சொல்ல முடியும். உறவு நெருங்க நெருங்க, உணர்வு பெருகுகிறது.

ஆனுல், உறவில் எல்லாம் மிக்க உன்மத்தத்தைக் கொடுக்கும் உறவு எதுவென்ருல், காதலன் காதலி உறவுதான். மனிதனுடைய குடுமியைப்பிடித்து ஆட்டிவைக்கும் மாபெரும் சக்திகள் இரண்டு, பசியும் காமமும். மனித வரலாற்றை ஊன்றிப் படிக்கும் போது இந்த உண்மை விளங்குகிறது. இங்கிலாந்து என்ற ஒரு சிறிய தீவில் மக்களுக்குப் போதிய உணவு கிடைக்கவில்லை. பசியைத் தீர்ப்பதற்காக, காடுங் கடலும் கடந்து பல நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்தும், போரிட்டும் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே ஆங்கிலேயர் நிலை நாட்டினுர்கள். இந்த வெற்றிக்கெல்லாம் அடிப்படையாக இருந்தது பசி. இப்படியெல்லாம் கிடைத்த ஒரு மகத்தான சாம்ராஜ்யத்தைத் தூவென்று உதைத்துத் தள்ளிவிட்டார் எட்டாவது எட்வர்ட் மன்னர். அதற்குக் காரணமாக இருந்தது காதல். காதல் உறவிலே அவ்வளவு வன்மை இருக்கிறது. அந்த உறவிலே மனிதன் உணர்வின் உச்ச நிலையைத் தொட்டுவிடுகிருன்.

மனித வாழ்க்கையிலேயுள்ள பல விதமான உறவு நிலைகளிலே நின்று, தம் உணர்வுச் செல்வத்தைப் பெருக்கியவர்கள் நம் ஞானிகள். அந்த உணர்வுச் செல்வத்தையெல்லாம், இறைவனுேடு ஊடாடுவதில் பயன்படுத்திப் பேறுபெற்ருர்கள் அவர்கள்.

இறைவனுக்கு நாமம் இல்லை, உருவம் இல்லை என்ற அறிவு அவர்களுக்கு இருக்கத்தான் இருந்தது. ஆனுல், நமது புலனுக்குத் தெரியாத அச்செம்பொருளோடு நெருங்க வேண்டுமே. ஆகவேதான், அப்பொருளுக்கு நாமத்தையும் உருவத்தையும் கற்பித்தார்கள். அதனுடன் நிற்கவில்லை. மனித வாழ்க்கையில் தாம் அநுபவித்த உறவுகளை, இறைவனுேடு இணைத்து, உணர்வையும் ஈடுபாட்டையும் வளர்த்தார்கள்.

தயிருக்குள்ளே வெண்ணெய் ஒளிந்து கொண்டிருக்கிறது. நமது கண்ணுக்கு அது தெரிவதில்லை. ஆனுல், அதற்குள்ளே மத்தை நட்டுப் பொறுமையோடும் ஆர்வத்தோடும் கடைந்தால், வெண்ணெய் திரண்டு கண்முன் வந்து நின்றுவிடுகிறது. அது போலவே, உள்ளத்தினுள்ளே ஒளிந்துகொண்டு நிற்கிறது இறைத் தத்துவம். அதற்குள்ளே, உறவு என்ற கோலை நட்டு, உணர்வு என்னும் கயிற்றிஞல் கடைந்தால், ஒளிந்து நிற்கும் பரம்பொருள் வெளிப்பட்டுவிடும் என்று கண்டார்கள் நம் முன்னேர்கள்.

''உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றிஞல்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே''

என்ருர் அப்பர் சுவாமிகள்.

வெட்ட வெளியாகப் பரந்து நிற்கும் இறைத் தத்துவத்தைப் பார்த்து, ''ஏ, மச்சான்!'' என்று சொல்லி, தோள்மேல் கைபோட்டு உறவாட முடியாது. ஆனுல், அந்தப் பொருளுக்குக் கண்ணன் என்ற நாமத்தைச் சூட்டி, ஆயர் பாடியிலே யசோதையின் மடியிலே விளையாடும் குழந்தையென்று நினைத்து விட்டாலோ, சொல்ல வேண்டியதில்லை; கையிலெடுத்து, மார்போடு தழுவிக் கொஞ்சிக் குலாவுவதற்குரிய நமது உடைமையாகிவிடுகிறது அப்பரம்பொருள்.

தாய்மையுறவைப் பெரியாழ்வார், 'எப்படிப் பயன்படுத்துகிருர், அதனுல் அவருடைய உணர்வு எப்படிச் செழிப்படைகிறது' என்று பார்ப்போம். கண்ணனைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டுகிருர் பெரியாழ்வார். மூவுலகையும் அளந்த கால்களுக்குத் துணித் தொட்டில் எம்மாத்திரம்? ஒரே உதையாக உதைத்துத் தொட்டிலைக் கிழித்துவிடுகிறது குழந்தை. உடனே கண்ணனை எடுத்துக்கொள்கிருள் தாய். அவ்வளவுதான்; அவளுடைய இடுப்பிலே ஒரு மிதி மிதிக்கிருன் கண்ணன். இடுப்பு முறிந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இப்படிப் படுத்துகிற பிள்ளையிடத்திலேயே தாய்க்கு அதிகப் பாசம் ஏற்படுகிறது. அப்படியே கண்ணனை ஒடுக்கி மார்போடு அணைத்துக்கொள்கிருள். அந்தச்

சமயத்திலே, வயிற்றிலே ஒரு பாய்ச்சல் பாய்கிறன் அவன். இப்படிப் படாத பாடெல்லாம் பட்டுக் கண்ணனை வளர்க்கிருள், அவளுடைய உடம்பு தேய்ந்து மெலிகிறது. மெலிந்தால் தான் என்ன? தாய்க்கு இந்தப் பொல்லாத குழந்தையைப் பற்றிப் பேசும்போதெல்லாம் உள்ளூர ஓர் ஆனந்தம் ஏற்படுகிறது. பாடுகிறார் பெரியாழ்வார் :

''கிடக்கில், தொட்டில் கிழிய உதைத்திடும்,
எடுத்துக் கொள்ளில், மருங்கை
இறுத்திடும்,
ஒடுக்கிப் புல்கில், உதரத்தே பாய்ந்திடும்,
மிடுக்கி லாமையால் யான் மெலிந்தேன்,
நங்காய்.',

தாய்க்கும் சேய்க்கும் இடையே இருக்கும் உறவு, நமக்குத் தெரிந்த உறவு. நம் அநுபவத்துக்கு உட்பட்ட உறவு, நம் உணர்வைத் தட்டி எழுப்பவல்ல உறவு. அந்த உறவை, இறைவனிடத்திலே இணைத்து அவனேடு நாம் ஊடாடும்போது, நம் உணர்வு பெருகுகிறது; ஆணவம் கரைகிறது; ஆனந்தம் மேலிடுகிறது.

குழந்தையாகத்தான் இறைவனைப் பாவிக்க வேண்டும் என்பதில்லை. அவனைத் தாயாகக் கொண்டு வணங்கும்போது உள்ளத்தில் அச்சம் அறவே நீங்கி, தெம்பும் தெளிவும் ஞானமும் பிறக்கின்றன.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் நெல்லையில் வாழ்ந்தவர். நெல்வேலியில் கோயில் கொண்டிருக்கும் வேய்முத்தரையும் வடிவம்மையையும் நாள்தோறும் வணங்கும் பரமபக்தர். 'தகப்பனைக் காட்டிலும் தாய்க்குக் கருணை அதிகம்' என்று தம் குடும்ப வாழ்க்கையிலே உணர்ந்தவர். தம்முடைய குறைகளையெல்லாம் வேய்முத்தரிடத்திலே சொல்லிச் சொல்லிக் கதறுகிறார். ஆனால், வேய்முத்தருக்கு மனம் இளகவில்லை; என்ன செய்வது? தாயினிடத்தில் முறையிட்டால் தகப்பனிடத்தில் சிபார்சு செய்யமாட்டாளா என்று நினைக்கிறார்.

''அவர் திரிபுரத்தை எரிக்கப் புறப்படும்போது என்னைப் பற்றிச் சொல்லிவிடாதே, அம்மா. இளக்கமாக இருக்கும் நேரம் பார்த்து, அவரிடம் நயமாக என்னைப்பற்றிச் சொல்லக் கூடாதா? அப்படிச் சொன்னால், உன் வாயில் இருக்கும் முத்து சிந்தியாபோகும் என்று தாயினிடத்திலே இடித்துச் சொல்லுகிறார் ;

''ஆய்முத்துப் பந்தரின்
மெல்லணை மீதுன் அருகிருந்து
'நீமுத்தம் தா' என்று
அவர்கொஞ்சும் வேளையில், நித்தநித்தம்
வேய்முத்தரோடு என் குறைகளெல்லாம்
மெல்ல மெல்லச் சொன்னால்,
வாய்முத்தம் சிந்திவிடுமோ,
நெல்வேலி வடிவம்மையே.''

அப்பாலுக்கு அப்பால் இருக்கும் பொருளைத் தாயாகக் கருதி உறவாடும் போது, அது இப்பாலுக்கு இப்பால் வந்து நம் இதயத்தோடு ஒட்டிக்கொள்கிறது.

இனி, காதல் உறவு, எப்படிப் பக்தி உணர்வைத் தூண்டி விடுகிறது என்று பார்ப்போம். 'மனுஷப் பயலுக்கு வாழ்க்கைப் படமாட்டேன். நாராயணனையே என் அழகிய மணவாளனாகக் கொள்வேன்,'' என்று உறுதியோடு நோன்பிருக்கிறாள் ஆண்டாள். கண்ணன் என்ற அந்தக் கருந்தெய்வத்தைச் சதா நினைந்து உருகிக்கொண்டிருக்கிறாள். அவளுடைய உடல் வாட்டத்தைக் கண்ட தோழிகளுக்கு அவளுடைய இதயத்தின் நிலை தெரியவில்லை. ''டாக்டரை அழைத்து வரட்டுமா?'' என்று அசட்டுத்தனமாகக் கேட்கிறார்கள். நொந்து போயிருக்கும் ஆண்டாளுக்கு, இந்த அசட்டுக் கேள்வி மேலும் எரிச்சலை உண்டாக்குகிறது. ''வைத்தியமாவது, ஒன்றாவது! என் நோயைத் தீர்க்க ஒரே ஒரு மருந்துதான் இருக்கிறது'' என்று சொல்லுகிறாள். என்ன மருந்து அது? என்னுடைய தீராக் காதலைத் தெரிந்தும் தெரியாததுபோலப் பாசாங்கு செய்யும் அந்த அரங்கப் பெருமான் இருக்கிறானே, அவனுடைய திருமேனியில் படிந்து கிடக்கும் பட்டுப் பீதாம்பரத்தை எடுத்து வாருங்கள். அவனுடைய வேர்வை மணத்தோடு கூடிய பீதாம்பரத்தை என் முகத்தருகே கொண்டு வந்து வீசுங்கள், என் வாட்டமெல்லாம் தணிந்து விடும்,'' என்று சொல்லுகிறாள் :

'' கண்ணன் என்னும் கருந்தெய்வம்
காட்சி பழகிக் கிடப்பேனைப்
புண்ணில் புளிப் பெய்தாற்போல்
புறம்நின்று அழகு பேசாதே,
பெண்ணின் வருத்தம் அறியாத
பெருமான் அரையில் பீதக
வண்ண ஆடை கொண்டென்னை
வாட்டம் தணிய வீசீரே''

என்று ஆண்டாள் பாடும்போது, காமம் பக்தியாக மாறும் ரசவாத வித்தையைக் கண்டு அதிசயிக்கிறோம். நாயக நாயகி பாவத்தில் கொஞ்ச காலமாவது நின்று இறைவனோடு உறவாடிப் பார்த்தவர்களுக்குத்தான், அந்த உறவால் ஏற்படும் எல்லை மீறிய உணர்வு வளத்தைச் சுவைத்து அநுபவிக்க முடியும். ஆனால் காதல் பாதையில் சென்று இறைவனை அடைவது என்பது சமானிய மக்களுக்கு எளிதான காரியம் அல்ல. காதலால் ஏற்படும் சுகம் ஒரு பக்கம் இருக்க, அதனால் ஏற்படும் அல்லல் ஆனந்தம்; பொறாமை, ஏமாற்றம்.

பிரிவாற்ருமை இவற்றையெல்லாம் சமாளிக்க வேண்டுமென்ருல், தன்னையே தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும். ஆண்டாள், மாணிக்கவாசகர் போன்ற துணிச்சல்காரர்களே காதல் பாதையில் சென்று இறைவனையடைய அருகதை உடையவர்கள்.

இறைவனைத் தாயாகக் கருதி உறவாடுகிறவர்களுக்கு இப்படியெல்லாம் அல்லல்கள் ஏற்படுவதில்லை. என்ன குற்றம் செய்தாலும் மன்னித்தருள வேண்டியது தாயின் பண்பு, அச்சம் இல்லாமல் தாயோடு பழகலாம். வெற்று விரலைத் தாயின் வாயில் வைத்து, ''அம்மா, இந்தா சோறு'' என்று சொல்லுகிறது குழந்தை. ''அமிர்தமாயிருக்கு, கண்ணே,'' என்று தாய் அதை அனுபவிப்பாள். காதலி வாயிலே வெற்று விரலை வைத்தால், என்ன செய்வாள்? கடித்தே போடுவாள்.


நம்மை அடிமையாகவும், இறைவனை ஆண்டவனுகவும் பாவித்து உறவாடும்போதும் அபாயம் ஒன்றும் ஏற்படுவதில்லை: பொறுப்பு முழுவதையும் அவன் ஏற்றுக்கொள்கிருன்; நம் தலைமேலிருக்கும் பாரம் இறங்கிவிடுகிறது. ஆண்டவன் பராமுகமாக இருந்தால், அவனேடு வழக்காடுவதற்கு அடிமைக்கு உரிமை இருக்கிறது. துடுக்குத்தனமாகக்கூட வழக்காடலாம்.

திருச்செந்தூர் முருகனிடத்திலே போய் இப்படி வழக்காடுகிருர் படிக்காசுப் புலவர் என்ற பக்தர். ''இத்தனை நாளும் நீ சிறு பிள்ளையாக இருந்தாய். பொறுப்பில்லாமல் சுற்றிக் கொண்டிருந்தாய். இதுவரையிலும் என்னைக் கவனிக்காமல் இருந்தது சரி. இப்போதோ, நீ மீசை முளைத்த ஆடவனுகிவிட்டாய். அன்னமும் மயிலும் போல இரண்டு பெண் கொண்ட ஆண்மகன் நீ. இனிமேலும் என்னைக் கவனிக்காமல் இருக்கலாமா? உனக்குப் பொறுப்பு வேண்டாமா?'' என்று உரிமையோடு கேட்கிருர்.

''முன்னம்நின் அன்னை அமுதூட்டிப்
 பொட்டிட்டு மையிட்டு முத்தமிட்டுக்
கன்னமும் கிள்ளிய நாளல்லவே
 என்னைக் காப்பதற்கே,
அன்னமும் மஞ்ஞையும் போல்இரு
 பெண்கொண்ட ஆண்பிள்ளை நீ
இன்னமும் சின்னவன்தானே,
 செந்தூரில் இருப்பவனே!''[4]

'' கடவுளுக்கு எதற்குப் பெண்டாட்டி?'' என்று ஒரு பெரியவர் கேட்டார். கடவுளுக்குப் பெண்டாட்டி வேண்டியதில்லைதான். ஆனல், அவனேடு நாம் இப்படியெல்லாம் நெருங்கி உறவாடுவதற்கு நமக்கு நாமே வசதி செய்து கொள்ளவேண்டுமல்லவா? அதற்காகவாவது அன்னமும் மஞ்ஞையும் போல் இருபெண்ணை அவனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது உறவு வளர்கிறது. உணர்வு பெருகுகிறது. இறையின்பம் கிட்டுகிறது. ஆகவேதான், சுவானுபவத்தில் இந்த உண்மையை உணர்ந்த அப்பர் சுவாமிகள் பாடினர்,

''உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே''



# முருகன் பெருமை

திரு. கே. எஸ் நரசிம்மன், B.A.,B.L.,I.A.S
ஆணையர். அறநிலையத்துறை, சென்னை-34.

**முன்னுரை:**

முருகன் வழிபாடு தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது. மக்கள் முதன்முதல் தோன்றிய இடம் குமரிக் கண்டமே என்றும், அதன்கண்ணும் குறிஞ்சித் திணைப்பகுதியே யாகும் என்றும் ஆராய்ச்சி யாளர் கூறுவர். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கும் மிக முற்பட்டதெனக் கருதப் படும் தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணம், முருகனைக் குறிஞ்சித் திணைக்குரிய தெய்வம் என்று சிறப்புறக் குறிப்பிடுகின்றது. இவ்வாற்றுல் முருகன் வழிபாடு மிகத்தொன் னெடுங்காலம் முதலே நிகழ்ந்து வருதல் தெளியப்படும்.

**இயற்கைத் தெய்வம்:**

முருகன் இயற்கைத் தெய்வம். இயற்கை யோடு இயைந்த இன்ப எழில் வாழ்க்கை நடாத்திவந்த பழந் தமிழ்ப் பெருமக்கள், முருகனை இயற்கையின் வாயிலாக இனிதறிந் தனர். முருகனின் திருவுருவை இயற்கைக் காட்சியின் வாயிலாகக் கண்டு கருதிக் கவி னுறப் போற்றிக் களித்தனர். நீலக் கடலில், காலைச் செங்கதிரவன் தோன்றும் அழகிய இனிய காட்சியைக் கண்டு மகிழ்ந்த பழம் பெரும் தமிழ்ச் சான்றோர்கள், அக்காட்சியின் வாயிலாக, நீல மயில்மீது இவர்ந்துவரும் செந்நிறம் உடைய முருகனை நினைந்துணர்ந்து, மிகப் பழங்காலம் முதலே வழிபடத் தொடங் கினர் என்பர் அறிஞர்.

**சங்க நூல்கள்:**

முருகனைக் குறித்து முன்னைத் தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள் விளக்கியருளிச் செய் துள்ள கருத்துக்கள், நினைத்துணருந்தோறும் அனைத்தெலும்பும் உள்ளுருக ஆனந்தத்தேன் சொரியும் இயல்பினவாக உள்ளன. முருகன் தன் அடியவர்கள் நினைத்தவற்றை யெல்லாம் நிறைவேற்றி முற்றுவித்துத் தருதலில் சிறந் தவன் என்று, புறநானூறு குறிப்பிடுகின்றது.

முருகன் அருளே வடிவானவன். தன் அடியவர்கள் செய்யும் குற்றங்களைப் பொறுத் துக்கொண்டு, அவர்களுக்கு அருள் புரிபவன். ஆதலின் தண்டிக்கும் தன்மையே இல்லாத சிறந்த கடவுள் என்னும் கருத்தில், 'தெறல் அரும் கடவுள்' என்று, அகநானூறு என்னும் சங்க நூல் முருகனைச் சிறப்பித்துக் கூறு கின்றது,

**தமிழ்க் கடவுள்:**

முருகன் தமிழ்க் கடவுள். முருகனே தமிழ் மொழியை முதல் முதலில் அகத்திய ருக்கு அறிவுறுத்தினன் என்பது வரலாறு. மேலும் சிவபிரானுக்குப் பிரணவப் பொரு ளைத் தமிழிலேயே முருகன் உபதேசித்தான்.

> **கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்**
> **கொஞ்சித் தமிழாற் பகர்வோனே.**

என்பது அருணகிரிநாதர் திருப்புகழ். கூடல் மா நகரில், ஆலவாய் அவிர்சடைக் கடவுளு டன் குன்றம் எறிந்த குமரவேளும் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தான் என்பர் நக்கீரர். ''சங்கத் தமிழின் தலைமைப் புலவன்'' என்பர் குமரகுருபர அடிகள். தமிழ்மொழியின் மெய் எழுத்துக்கள் பதினெட்டும் தன்னுடைய கண் களாகவும், தமிழில் வல்லினம் மெல்லினம் இடையினம் என வழங்கும் இன எழுத்துக்கள் ஆறும் திருமுகங்களாகவும், தமிழின் அகரம் முதலிய உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும், தோள்களாகவும், தனிநிலை எனப்படும் ஆய் தமே. ஒப்புயர்வற்ற நிலையில் தனிச் சிறப் புற்றுத் திகழும் வேலாகவும் கொண்டு, தமிழ்த் தெய்வமாகிய முருகன், தமிழ் வடி வினனாக விளங்குகின்றான்.

> **கண்ணிகர் மெய்யும், சென்னிக்**
> **கணம்உழற் இனத்தின் கூறும்**
> **திண்ணிய புயங்க ளேபோல்**
> **திகழ்தரும் உயிரும் வேறென்**
> **றெண்ணிடற் கரிய தாகும்**
> **எஃகமும் இயலில் காட்டும்**
> **புண்ணிய முருகன் செய்ய**
> **பொற்பதம போற்றி வாழ்வாம்**

என்பது, புலவர் புராணம் பாடிய திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள் அவர்களின் அரிய திருப்பாடல்.

குழந்தைகளுக்குக் குழந்தை வேலன் ஆகவும், இளைஞர்களுக்குப் பாலசுப்பிரமணி யன் ஆகவும், கலைஞர்களுக்கு ஆறுமுகம்

கொண்ட அண்ணல் ஆகவும், வீரர்களுக்குத் தேவசேனாபதி ஆகவும், மந்திர உபதேசம் பெற விரும்பி வழிபடும் அன்பர்களுக்குச் சுவாமிநாதன் ஆகவும், இல்லற நிலையினர்க்கு வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணிய சுவாமி ஆகவும், பற்றற்ற தூய ஞானத் துறவற நிலையினர்க்குப் பழநி யாண்டவர் ஆகவும், பிறவாறும் விளங்கி, அவரவர் களுக்கு ஏற்ற நிலைகளிற் பல்வேறு வகைகளில், முருகப் பெருமான் அருள்புரிந்து காத்து வருகின்றான்.

## கந்தபுராணம்:

முருகனின் வரலாறு கூறும் கந்தபுராணம் உண்மையில் ஆராய்ந்துணர்ந்தால், ஒருவகையில் நமது சொந்த புராணமே யாகும். கந்த புராணத்தில் வரும், சூரபதுமன் சிங்கமுகாசுரன், தாரகாசுரன், என்னும் மூவரும், முறையே ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களைக் குறிப்பவரே யாவர். தாரகன் கன்ம மலம். சிங்கமுகன் மாயா மலம். சூரபதுமன் ஆணவ மலம். கன்ம மலம் முதலில் அழியும். ஆதலின் தாரகாசுரன் முதலில் இறந்தான். மாயாமலம் அறிவை விளக்கும். ஒரோவழி மயக்கமும் செய்யும், அம்முறையில் சிங்கமுகாசுரன் நல்லியல்பும் தீய இயல்பும் ஒரு சேரக் கொண்டிருந்தான். ஆணவமலம் ஆவாரக சக்தி, அதோ நியாமிகா சக்தி என்னும் இருவேறு ஆற்றல்கள் உடையது, அவ்வாறே சூரபதுமனும் மனித உடலும் குதிரைத் தலையும் கொண்டு, சூரன், பதுமன் என இருவேறு உடல்கள் ஒன்றி நின்றான். ஆணவ மலம் ஆற்றல் கெடுமேயன்றி, என்றும் அழிவதில்லை என்பது சைவ சித்தாந்தம். அம்முறையிற், சூரபதுமன் தன் தீய இயல்புகள் அழிந்து சேவலும் மயிலுமாக முருகனுக்குத் தொண்டு பூண்டு என்றும் அழியாத பெருநிலை பெற்றான். அஞ்ஞானத்தை ஞானமே வெல்லும், சூரபதுமனாகிய அஞ்ஞானப் பிழம்பை, மெய்ஞ்ஞானமாகிய வேற்படை வென்றது. முருகனுக்கு வேல் ஞானசக்தி; வள்ளி அம்மை இச்சா சக்தி; தெய்வயானை கிரியா சக்தி. முருகனின் மயில் விந்து தத்துவம், கோழி நாத தத்துவம் என்னும் உண்மைகளைக் கந்த புராணம் கவினுற விளங்குகின்றது.

## ஆறுபடை வீடு:

முருகன் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் ஆறு தலங்களில் எழுந்தருளி விளங்குகின்றான். முருகன்படை வீரர்களுக்கெல்லாம் தலைசிறந்த படைவீரன் ஆதலின், அவன் எழுந்தருளி விளங்கும் தலங்கள், படைவீடுகள் எனப் பெயர் பெற்றன. ஆறுபடை வீடுகளிலும் முறையே ஒளிவடிவம், அருள் வடிவம், தவ வடிவம், மந்திர வடிவம், எளிமை வடிவம், வியாபக வடிவம் என்னும் நிலைகளில், முருகன் விளங்கும் இயல்பினைத் திருமுருகாற்றுப்படை சிறப்புற விளக்குகின்றது.

## முடிவுரை:

முருகனை அன்புடன் வழிபட்டு, முருகா எனப் பலகாலும் கூறித் தியானிப்பவர்கள், என்றும் குறையாத பெருஞ்செல்வத்தைப் பெறுவார்கள்; அவர்களை ஒருபோதும் எத்தகைய துன்பமும் அணுகாது; அவர்களுக்கு எந்த ஒரு நோயும் வராது, அவர்கள் சுற்றமும் கிளையும் சூழ, உயர்ந்த இன்பங்களை நுகர்ந்துகொண்டு நீடூழி காலம் வாழ்வார்கள்.

முருகா எனஉனை ஓதும்
    தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்;
    வியாதி அடைந்து நையார்;
ஒருகால மும்துன்பம் எய்தார்;
    பரகதி உற்றிடுவார்
பொருகாலன் நாடு புகார்;
    சமரா புரிப் புண்ணியனே.

—திருப்போரூர்ச் சந்நிதிமுறை



# தஞ்சை மாவட்டக் கோயில்களின் வரலாறு

(முற்றொடர்ச்சி)

**திருமயிலாடி :**

கொள்ளிடத்திற்கு அடுத்த ஓர் இருப்புப் பாதை நிலையம். ஆணிக்காரன் சத்திரம் என்ற கிராமமாக இப்போது வழங்குகின்றது. இதற்கு உந்தூர்தி வசதிகள் உள்ளன. இங்கு அருள்மிகு சுந்தரேசுவரசுவாமி கோயில் உள்ளது. கோயில் ஒரு ஏக்கர் நிலப் பரப்பு உடையது. சோழமன்னன் ஒருவனல் கட்டப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இங்குள்ள சிவலிங்கம் சுயம்பு. 1957 இல் திருப்பணி செய்யப்பெற்றது. ஒரே ஒரு பிராகாரம். 60 அடி உயரம் உள்ள இராச கோபுரம் இருக்கின்றது. இறைவனுக்கும் இறைவிக்குமாக இரண்டு சந்நிதிகள் உள்ளன. அம்பிகையின் பெயர் பெரியநாயகி. அர்த்த மண்டபமும், மகா மண்டபமும் உள்ளன. பாலசுப்பிரமணிய சுவாமிக்குத் தனியே ஒரு சந்நிதி உள்ளது. அவர் வடக்குநோக்கி இருக்கின்றார். விநாயகர் சுப்பிரமணியர் வள்ளிதெய்வயானை நடராசர் தட்சிணமூர்த்தி பிரமர் இலிங்கோற்பவர் துர்க்கை இலக்குமி சப்தமாதர் ஐயனர் பிடாரி மாரியம்மன் திரௌபதியம்மன் என்னும் தெய்வத் திருவுருவங்கள் உள்ளன. வெண்கலத்தால் அமைந்த உற்சவ விக்கிரகங்கள் பல உள்ளன. அவற்றில் மயில் ஊர்தியில் அமர்ந்துள்ள முருகனின் விக்கிரகம், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. நான்குகால பூசைகள் நடைபெறுகின்றன.

பரம்பரையினர் அல்லாத சிவாசாரியர்கள் கோயில் வருவாயிலிருந்து மாத ஊதியம் பெற்றுப் பூசை புரிந்து வருகின்றனர். பக்தர்களால் அளிக்கப்பெற்ற பல பழமையான பொன் வெள்ளி அணிகலன்கள் உள்ளன. அவைகளின் மதிப்பு சுமார் ரூபா 12.500/-. அவைகளில் பாலசுப்பிரமணிய சுவாமியின் தங்கத்தால் ஆகிய வேல் குறிப்பிடத்தக்கது. அது 10 சவரன் எடை உள்ளது. 160 ஏக்கர் நன்செய் நிலங்களும், 168 ஏக்கர் புன்செய் நிலங்களும் உண்டு. அதன்மூலம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூபா 33,330/- வருவாய் கிடைக்கின்றது. கோயிலின் நாட்பூசைக்கும் பருவ விழாக்களுக்கும் பொது நிர்வாகத்திற்கும் இத்தொகை பயன்படுகின்றது. உண்டியல் மூலம் ரூபா 50/-ம், அருச்சனை அபிடேகம் முதலியவற்றின் மூலம் ரூ. 120/-ம் ஆண்டொன்றுக்குக் கிடைக்கின்றது. மயில் பெருச்சாளி குதிரை எருது சூரன் அன்னம் முதலிய வாகனங்கள் இருக்கின்றன. இங்கு நடைபெறும் விழாக்களில் ஐப்பசியில் 10 நாட்கள் நடைபெறும் முருகன் அறுநாட் பெருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. சிவபிரானும் பார்வதியும் தமக்குள் அழகில் மிகுந்தவர் யார் என்று ஒருசமயம் வாதம் புரிந்தனர் சிவபிரான் சினமுற்றுத் திடீரென்று மறைந்துவிட்டார். அதனல் அவரைத் தேடிக்கொண்டு பார்வதிதேவி மயில் வடிவத்தில் பல இடங்களிலும் அலைந்து திரிந்தாள். பின்னர் இங்கே அவரைச் சுந்தரலிங்கமாகக் கண்டு மகிழ்ந்தாள். அம்மகிழ்ச்சியால் மயில் வடிவங்கொண்ட அம்மை இன்ப நடனம் ஆடினள். அதனல் இதற்குத் திருமயிலாடி எனப் பெயரமைந்தது என்று பழையவரலாறு கூறுகின்றது. இத்தலத்திற்குக் கண்ணுவாச்சிரமம் என்றும் ஒரு பெயர் வழங்கும். கண்ணுவமுனிவர் இங்குத் தவம் செய்து காயசித்தி பெற்றார். இத்தலத்தின் மரம் வில்வம். எனவே வில்வாரண்யம் என்றும் இதற்கு ஒரு பெயர் வழங்குகின்றது. திருமாலை விட்டுப் பிரிந்த திருமகள் இங்கே கடும்தவம் இயற்றி அவருடன் சேர்ந்தாள். இங்குள்ள திருக்குளம் சிவகங்கை எனப்படும். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையால் நியமிக்கப்பெறும் இரண்டு அறங்காவலர்களும், ஒரு செயல் அலுவலரும் இக் கோயிலை நடத்தி வருகின்றனர்.

இங்கு ஒரே ஒரு கல்வெட்டுத்தான் இதுவரையில் கண்டுபிடிக்கப் பெற்றது. திரைலோக்கிய மகாதேவேசுவர முடையார்கோயிலில் விக்கிரமசோழ சந்தி என்னும் பூசை நடத்துவதற்காக ஒரு நிலதானம் கொடுத்தது பற்றி அக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இதனல் திரைலோக்கிய மகாதேவேசுவர முடையார் கோயில் என்று வேருெரு கோயில் இங்கு இருந்ததாகத் தெரிகின்றது.

**திருக்கோலக்கா :**

இது சீர்காழிக் கோயிலுக்கு மேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. இங்குத் திருஞான சம்பந்தர் இறைவனல் பொற்றாளம் அளிக்கப்

பெற்றார். அதனால் சுவாமிக்குத் தாளபுரீசுவரர் எனப் பெயர். சுயம்பு லிங்கம். கண்ணுவ முனிவர் பூசித்தது. திருஞான சம்பந்தருக்குச் சிவபெருமான் பொற்றாளம் வழங்கியபோது, அத்தாளத்தில் அம்பிகை ஓசை உண்டாகும் படிச் செய்தாள். அதனால் இங்குள்ள அம்பிகைக்கு ஓசைகொடுத்த நாயகி என்று பெயர். திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவரின் தேவாரப் பதிகங்கள் இத்தலத்திற்கு உண்டு.

**நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்**
**ஞான சம்பந்தனுக்கு உலகவர்முன்**
**தாளம் ஈந்து, அவன் பாடலுக்கு இரங்கும்**
**தன்மை யாளனை, என் மனக் கருத்தை**
**ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்**
**அங்கணன்தனை எண்கணம் இறைஞ்சும்**
**கோளிலிப் பெருங்கோயில் உள்ளானைக்**
**கோலக் காவினிற் கண்டுகொண்**
**டேனே**

இக்கோயில் கிழக்கு நோக்கியது. 70 செண்ட் நிலப் பரப்புடையது. கோயில் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சோழ அரசர்களால் கட்டப்பெற்றது. நாட்டுக்கோட்டை நகரத்தார், 60 ஆண்டுகளுக்கு முன்னால் புதிய திருப்பணிகள் செய்துள்ளனர். இரண்டு பிராகாரங்கள், அர்த்தமண்டபம் மகாமண்டபம், இரண்டு சந்நிதிகள் உள்ளன. கோயிலின் முன்பு ஒரு திருக்குளம் இருக்கின்றது. நான்கு காலபூசை நிகழ்கின்றது. பரம்பரையினர் அல்லாத சிவாச்சாரியர்கள் மாத ஊதியம் பெற்றுப் பணிபுரிந்து வருகின்றனர். பக்தர்களால் வழங்கப்பெற்ற, ரூபா 1,000/- மதிப்புடைய பழமையான பொன் வெள்ளி நகைகள் உண்டு. நன்செய்யும், புன்செய்யுமாக 37 எக்கர் 78 செண்ட் நிலங்கள் உள்ளன. இவற்றின் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 8,000 வருவாய் கிடைக்கின்றது. கோயிற்பணியாளர்களின் ஊதியத்திற்கும், நித்திய பூசை நைமித்திக பூசை ஆகியவற்றிற்கும் இத்தொகை செலவிடப்படுகின்றது. மயில் அன்னம் பெருச்சாளி வாகனங்களுடன், எருதுவாகனங்கள் இரண்டும் உள்ளன. சித்திரை மாதத்தில் நடைபெறும் சிவஞானப் பால்விழா மிகவும் சிறப்புடையது. அப்போது சீர்காழிச் சட்டைநாதசுவாமி கோயிலிலிருந்து பொற்றாளம் பெறுவதற்காகத் திருஞானசம்பந்தர் இங்கு எழுந்தருளுகின்றார், இவ்விழாவைத் தரிசிக்கப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகின்றனர். அறநிலையத்துறையினர் நியமிக்கும் அறங்காவலர் ஒருவரின் பொறுப்பில் இக்கோயில் நடைபெற்று வருகின்றது.

## திருமுல்லைவாயில் :

இது சீர்காழிக்குக் கிழக்கில் 9 கல் தொலைவில் கடற்கரையைச் சார்ந்து உள்ளது. இத்தலத்தைப் பற்றிய திருஞானசம்பந்தர் தேவாரப்பாடலில் இயற்கையழகின் சிறப்பு அழகுற விளக்கிப் பாடப்பெற்றுள்ளது. வடக்கே சென்னையில் அம்பத்தூருக்கு அருகில், திருமுல்லைவாயில் என்ற மற்றொரு தலம் உள்ளதனால், அதனை வடதிருமுல்லைவாயில் என்றும், இதனைத் தென்திருமுல்லைவாயில் என்றும் வழங்குவர். தென்திருமுல்லைவாயில் ஊராட்சியில் சுமார் 7326 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அமாவாசை கிரகணம் முதலிய சிறப்பு நாட்களில் ஏராளமான பக்தர்கள் இங்கு கடலில் நீராடத் திரண்டு வருகின்றனர் சுவாமியின்பெயர்முல் லைவனநாதர். சுயம்புலிங்கம். அம்மை கோதை அம்பாள், கோயில் 60 செண்ட் நிலப்பரப்பு உடையது. சோழ அரசர்களால் 300 ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப்பெற்றது. இரண்டு சந்நிதிகளும், 22 தூண்களும் ஒரு பிராகாரமும் உள்ளன. கிருஷ்ணதேவராயர் காலத்துச் செப்பேடுகள் பல உள்ளன. அவற்றில் பக்தர்கள் வழங்கிய பலவேறு தானங்கள் குறிப்பிடப்படுகின்றன. முல்லைக்கொடி இத்தலத்திற்கு உரியது. சிவாகம முறைப்படி பரம்பரையினர் அல்லாத சிவாச்சாரியர்கள் நாள்தோறும் நான்கு கால பூசை செய்து வருகின்றனர். ரூபா. 200/- மதிப்புடைய பழமையான பொன் வெள்ளி நகைகள் உள்ளன. கோயிலுக்குரிய நிலங்களின் மூலம் ரூபா. 2,600/- குத்தகையாகக் கிடைக்கின்றது. எருது அன்னம் குதிரை பெருச்சாளி ஆகிய வாகனங்கள் உள்ளன. இவைகள் அனைத்தும் மரத்தால் செய்யப்பெற்றவை.

இங்கே பார்வதிதேவி கடுந்தவம் புரிந்து, தட்சிணாமூர்த்தியிடம் நமச்சிவாய மந்திர உபதேசம் பெற்றாள். தேவேந்திரன் வழிபட்டு இறையருள் பெற்றான். ஒரு சமயம் சோழ அரசன் இங்குள்ள கடற்கரை ஓரத்தில் தன் பரிவாரங்களுடன் தங்கினான். அவனுடைய குதிரையின் கால்கள் முல்லைக்கொடியில் சிக்கிக் கொண்டன. அதனால் அது நகரமுடியாமல் பெரிதும் தவித்தது. அப்போது அரசன் தன் வாளை உருவி, முல்லைக் கொடியை வெட்டினான். உடனே குருதி வெள்ளம் பீரிட்டு எழுந்தது. அதிசயமுற்ற அரசன் ஓர் அழகிய சுயம்புலிங்கத்தைக் கண்டான். அதன் உச்சியில் காயம் பட்டிருந்தது. அரசன் தன் பாவச் செயலுக்காக வருந்தினான். தன் உயிரை மாய்த்துக் கொள்ளக் கருதினான். அப்போது ஓர் அருள்ஒலி எழுந்தது. உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டாவென்று அரசனைத் தடுத்து அங்கே அச்சிவலிங்கத்திற்கு ஓர் அழகிய கோயில் எடுக்கும்படி கட்டளையிட்டது. அதன் படியே அரசனால்கோயில் அமைக்கப்பெற்றது. அன்றுமுதல் சுவாமிக்கு முல்லைவனநாதர் எனப் பெயர் ஏற்பட்டது. அம்பிகை கோதை நாயகி என்னும் பெயரில் நின்றகோலத்தில்

விளங்குகின்றாள். இங்கே இறைவனுக்கும் இறைவிக்கும் பல வெண்கலப் படிமங்கள் உள்ளன. இக்கோயிலுக்குப் பரம்பரை அறங் காவலராகத் தருமபுர ஆதீனத்தலைவர் விளங்கி வருகின்றார். அவர்தம் அருளாட்சி யின் கீழ் இக்கோயில் நன்கு நடைபெற்று வருகின்றது.

நெஞ்சார நீடு நினைவாரை மூடு
வினைதேய நின்ற நிமிலன்
அஞ்சாரு சென்னி அரவாடு கையன்
அனலாடும் மேனி அரனூர்
மஞ்சாரும் மாட மனைதோறும ஐயம்
உளதென்று வைகி வரினும்
செஞ்சாலி நெல்லின் வளர்சோறு
அளிக்கொள்
திருமுல்லை வாயில் இதுவே.

## திருக்குருகாவூர் :

இது சீர்காழிக்கு 6 கி. மீ. தொலைவில் தென்திருமுல்லைவாயில் போகும் வழியில் உள்ளது. திருக்கடாவூர் எனப் பாமரமக் களால் வழங்கப்படுகிறது. இது வரிசைப்பற்று என்றும் வழங்கப்படுகிறது. இது சீர்காழி மாயவரம் ஆகியவற்றுடன் உந்தூர்தித் தொடர்பு பெற்றுள்ளது. இங்குள்ள வெள் ளடைநாத சுவாமிகோயில் 1.5 ஏக்கர் நிலப் பரப்பு உடையது. ஒரு பிராகாரமும் இரண்டு விமானங்களும், இரண்டு சந்நிதிகளும் உள்ளன. சோழர் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. அண்மையில் ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு கிராமத் தாரால் சில புதிய திருப்பணிகள் செய்யப் பெற்றுள்ளன. கருவறையின் வெளிப்புறச் சுவர்களில் கல்வெட்டுக்கள் பல காணப்படு கின்றன. சிவலிங்கத்திருமேனி 1½ அடி உயரம் உள்ளதாக விளங்குகின்றது. அம்மை யின் பெயர் காவியங்கண்ணி. அருகிலுள்ள கிணறு பால்கிணறு என்று வழங்கி வருகிறது. தை அமாவாசையில் அக்கிணற்று நீர் பால் போன்று வெண்ணிறமுடையதாக மாறுகிறது. விநாயகர் முருகர் வள்ளிதெய்வானை கரிய மாணிக்கப்பெருமாள் திருமகள் நிலமகள் சுந்தரர் சம்பந்தர் திருவுருவங்கள் உள்ளன. சம்பந்தர் சுந்தரர் பாடல்பெற்ற தலம். சுந்தரருக்கும் அவருடன் வந்த அடியார் களுக்கும் சிவபெருமான் உண்ணச் சோறும், பருக நீரும் கொணர்ந்து அளித்த தலம். நான்கு காலபூசை காமிக ஆகமப்படி நடை பெறுகின்றது. ரூ. 1,000 மதிப்புள்ள அணி கலன்கள் உள்ளன. 32.50 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்கள் உள்ளன. அவற்றினின்று சுமார் 8,000 ரூபா குத்தகை வருகின்றது. மயில் எருது ஊர்திகள் உள்ளன. சுந்தரருக்குச் சிவபெருமான் கட்டுச்சோறு அளித்த அருள் நிகழ்ச்சியின் நினைவாக, ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதத்துப் பௌர்ணமி நாளில் விழா நடைபெறுகிறது. தை அமாவாசை, முருகன் அறுநாட் பெருவிழா முதலிய விழாக்களும் நடைபெறுகின்றன. தை அமாவாசை விழா வில் 5,000க்கும் மேற்பட்ட மக்கள் கூடுகின் றனர். அறநிலையத் துறையினரால் நியமிக் கப்பெறும் ஓர் அறங்காவலர் இக்கோயிலை நடத்தி வருகின்றனர், இக்கோயிலின் கல் வெட்டுக்களில் பின்வரும் அரசர்களின் பெயர் கள் குறிக்கப்படுகின்றன.

1. இராசராசன் கி. பி. 985-1014
2. இராசேந்திரன் கி. பி. 1014-1044
3. இராசாதிராசன் கி. பி. 1018-1055
4. விக்கிரமசோழன் கி. பி. 1120-1135
5. குலோத்துங்கசோழன் கி. பி. 1179-1216

இங்ஙனம் பெயர்குறிக்கப்பெறாத வேறுசில சோழ அரசர்களின் கல்வெட்டுக்களும் உள்ளன. அவற்றில் பரகேசரி இராசகேசரி என்ற சிறப்புப் பெயர்கள் காணப்பெறு கின்றன. திருக்குருகாவூர் என்னும் இத்தலம், இராசாதிராச வளநாட்டின் உட்பிரிவாகிய திருவாலி நாட்டைச் சேர்ந்ததாகக் கல்வெட் டுக்கள் குறிக்கின்றன. இறைவனின் பெயர் திருக்குருகாவூர் மகாதேவர், திருவெள்ளடை ஆண்டார் என்று காணப்படுகின்றது. மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் 15-ஆம் ஆட்சி யாண்டில் (கி. பி. 1194), மண்ணை கொண்ட சோழநல்லூர்ப் பட்டினவர் ஆகிய சாத்தன் மாந்தை என்பவர் சந்திரசேகரதேவரின் செப் புப்படிமத்தை எழுந்தருள்வித்தார். மற்றும் குலோத்துங்கதேவரின் 13-ஆம் ஆட்சியாண் டில் தேவாரமூவர் முதலிகளின் திருவுருவங் களும் எழுந்தருள்விக்கப்பெற்றன. மண்ட பத்தில் தெற்குச் சுவரில் தவசி வேணுயில் உடையான் இளத்தங்கிளி ஆரூரன் என்பவரின் திருவுருவமும் பெயரும் குறிக்கப்பட்டுள்ளன. விக்கிரமசோழன் முதலிய அரசர்களின் கல் வெட்டுக்களும் காணப்படுவதினால், அம்மண்ட பம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் அமைக்கப் பெற்றது என்று புலனாகின்றது, விக்கிரம சோழன் காலத்தில் திருச்சிற்றம்பலமுடை யான் விழுப்பாதிரையன் என்பவர் இம்மடத் திற்கு நிலங்கள் முதலிய நன்கொடைகள் வழங்கினார். முடிகொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்தில், இராசேந்திரசோழப் பேரம்பலம் என ஒரு மண்டபம் இருந்ததாகத் தெரி கின்றது. உத்தம சோழவேந்த வேளான் என்னும் சாம்பான் அருளாளன் உத்தமநிதி என்பவர், கோயிலில் முரசு முதலியன கொட்டு தற்கு ஒன்பது ஊழியர்களை நியமிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தார்.

பாடுவார் பசிதீர்ப்பாய்
பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக
உண்பலிக் குழல்வானே!

காடு நல் இடமாகக்
கடுஇருள் நடமாடும்
வேடனே குருகாவூர்
வெள்ளடை நீ அன்றே

## திருப்புன்கூர்

தமிழ்நாட்டிலுள்ள புகழ்மிக்க கோயில்களுள் திருப்புன்கூர்க் கோயிலும் ஒன்று. புராண வரலாற்றின்படி, சிவபெருமான் திருநாளைப்போவார் என்னும் நந்தனாருக்குக் காட்சி கொடுப்பதற்காக நந்தியை விலகியிருக்கப் பணித்தருளிய தலம் இதுவேயாகும். வைத்தீசுவரன் கோயிலுக்கு மேற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. வைத்தீசுவரன் கோயிலிலிருந்து அடிக்கடி இவ்வூருக்கு உந்தூர்திகள் செல்லுகின்றன. இறைவனின் பெயர் சிவலோகநாதர். அம்பிகை சொக்கநாயகி. சோழர் காலத்துக் கோயில். கி,பி, 1908–ம் ஆண்டு ஐந்து இலட்சம் ரூபாய்ச் செலவில் சிதம்பரம் செட்டியார் என்னும் செட்டிநாட்டுப் பெருமகனார் இக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து குடநீராட்டு விழாவும் நிகழ்த்தினார். கோயில் 2.94 ஏக்கர் பரப்புடையது. 66 அடி உயரமுடைய ஐந்துநிலை இராசகோபுரம் எழில்மிக்கு விளங்குகிறது. இத்தலத்தின் புனித மரம் புன்கு. அதனாலேயே இதற்குத் திருப்புன்கூர் எனப் பெயரமைந்தது. சுயம்புலிங்கம், சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய சமயாசிரியர்கள் மூவரும் பாடியுள்ளனர். மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்பும் இதற்கு அமைந்துள்ளன. இரண்டு பிராகாரங்கள் இரண்டு சந்நிதிகள், அழகிய சுதை வேலை செய்யப்பெற்ற இரண்டு விமானங்கள், கலைச் சிறப்பு அமையச் சிற்பங்கள் செதுக்கப்பெற்றுள்ள 88 தூண்கள் இக்கோயிலில் உள்ளன. பிராகாரத்தின் தென்கிழக்கு மூலையில் நந்தனாருக்கு ஒரு சந்நிதி அமைக்கப்பெற்றுள்ளது. கோயிலின் நுழைவாயிலில் உள்ள நந்திதேவர் மிகவும் கம்பீரமாகவும் அழகிய வேலைப்பாடுகளுடனும் திகழ்கின்றார். திருமுற்றத்தில் நந்தனாருக்கு உதவி புரிந்து குளம் வெட்டிய விநாயகர் சந்நிதியும் முருகர் சந்நிதியும் புன்க மரமும் உள்ளன. கோயிலின் மேற்கில் பின்புறத்தில் நந்தனாரால் வெட்டப்பெற்ற திருக்குளம் உள்ளது, மகா மண்டபத்தில் துவார பாலகர்களின் பழைய திருவுருவங்கள் உள்ளன அவற்றுள் தெற்கில் உள்ள துவார பாலகரின் தலையானது, நந்தனாருக்குக் காட்சிதருவதற்காக நந்திதேவரை விலகியிருக்கும்படி கட்டளையிட்ட இறைவனின் திருமொழியைப் பணிவுடன் செவிமடுப்பதுபோல அழகுறச் சாய்ந்து நிற்கின்றது. எறும்புப்புற்று வடிவமாகஉள்ள மூலத்தானத்துச் சுயம்புலிங்கத்திற் கு ஒவ்வொரு திங்கட்கிழமையும் புனுகு சாத்தப்படுகின்றது. கோயிலின்வடக்குப் பகுதியில் தனியே அம்பிகைக்குச் சந்நிதி பெரியதாக அமைந்துள்ளது. இங்குள்ள சோமாஸ்கந்த வடிவங்கள் கவர்ச்சிமிக்குத் திகழ்கின்றன. நடராசர் சந்நிதியின் எதிரில் தேவன் ஒருவன் பஞ்சமுக வாத்தியம் வாசிப்பது போன்ற அழகிய சிற்பத் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. பரம்பரை உரிமையுள்ள சிவாச்சாரியப் பெருமக்களால் நாள்தோறும் ஐந்துகால பூசைகள் நடைபெறுகின்றன. ரூபா 12,800 மதிப்புள்ள பொன் வெள்ளி அணிகலன்கள் உள்ளன. 186.63 ஏக்கர் நன்செய் நிலங்களும், 61.62 ஏக்கர் புன்செய் நிலங்களும், 14 வீடுகளும் இக் கோயிலுக்கு இருக்கின்றன. இவற்றின்மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூபா 44,000- வருவாய் கிடைக்கின்றது. உண்டியல் மூலம் ரூபா 200, அருச்சனை அபிடேகம் ஆகியவற்றின் மூலம் ரூபா 125 ஓராண்டுக்குக் கிடைக்கின்றது. மரத்தால் ஆன பல்லக்கு மயில் எருது பெருச்சாளி குதிரை, அன்னம் முதலிய வாகனங்களும், வெள்ளி இடப வாகனங்கள் இரண்டும் இக் கோயிலில் உள்ளன,



நந்தனார்

வைகாசியில் பிரம்மோற்சவம், ஐப்பசியில் கந்தர்சஷ்டி, புரட்டாசியில் நந்தனுர் குருபூசை, நவராத்திரி விழா, ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. பிரம்மோற்சவத்தில் ஐந்தாம் நாள், ஏழாம் நாள் விழாக்கள் மிகவும் முதன்மையானவை. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவர். சுந்தரர் ஏயர்கோன்கலிக்காமர் திருநாளைப்போவார் (நந்தனுர்). என்னும் நாயன்மார்கள் இத்தலத்துடன் வரலாற்றுத் தொடர்பு உடையவர்களாக இருந்ததனைப் பெரிய புராணம் விவரித்துப் பாடியுள்ளது. அறநிலையத் துறையினரால் நியமிக்கப் பெற்று மூன்று அறங்காவலர்களும், ஒரு செயல் அலுவலரும், இக்கோயிலைக் கண்காணித்து நடத்தி வருகின்றனர்.

## கல்வெட்டுக்கள்

மூன்றும் குலோத்துங்கன் (கி.பி. 1179—1216), மூன்றும் இராசராசன் (கி.பி. 1216-1246), பல்லவர் தலைவனுகிய கோப்பெருஞ்சிங்கன் ஆகியோருடைய பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இது ''இராசாதிராச வளநாட்டின் உட்பிரிவாகிய திருவாலி நாட்டைச் சேர்ந்த திருப்புன்கூர்'' என்று குறிககப்பட்டுள்ளது. சுவாமியின் பெயர் சிவலோகமுடைய நாயனுர். இராசராசனின் 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று இரண்டாம் பிராகாரத்தில் வடக்குப் பக்கத்தில் விக்கிரமசோழீசுவரமுடைய நாயனுர் கோயில் சந்நிதி ஒன்று, விக்கிரம சோழன் என்னும் மருதூர் வாணுதிராயன் என்பவன் கட்டிய செய்தியைக் கூறுகின்றது.

**முந்தி நின்ற வினைகள் அவைபோகச்**
**சிந்தி நெஞ்சே சிவனுர் திருப்புன்கூர்**
**அந்தம் இல்லா அடிகள் அவர்போலும்**
**கந்தம் மல்கு கமழ்புன் சடையாரே.**




✻

திருநாளைப்போவார் என்னும்
நந்தனுர் பொருட்டுத்
திருப்புன்கூர்ச்
சிவலோகநாதர் கட்டளைப்படி
சந்நிதியை விட்டுச் சிறிது விலகி
நின்ற திருநந்திதேவர்.

✻



காமதகன மூர்த்தி - கங்கைகொண்ட சோழபுரச் சிற்பம்



ஆடல்வல்லான் - கங்கைகொண்ட சோழபுரச் சிற்பம்

148712
600 008.
JL



நர்த்தன விநாயகர்



விடைஇவரும் விமலன்

கங்கைகொண்ட சோழபுரச் சிற்பங்கள்

# பழனியும், பழனியாண்டவரும்

## முன்னுரை

பழநி என்பது முருகன் தலங்களுள் மிகவும் முதன்மை வாய்ந்தது. மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அனுகதம் விசுத்தி ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களைக் குறிக்கும். முருகனின் ஆறுபடை வீடுகளுள், பழநி (திருவாவிநன்குடி) மூன்றுவதாகத் திகழ்கின்றது. இத்தலம் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்ததொன்று. ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட அகநானூறு என்னும் சங்க கால நூலில்,

> ''வண்டுபடத் ததைந்த கண்ணி ஒண்கழல்
> உருவக் குதிரை மழவர் ஓட்டிய
> முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
> அறுகோட்டு யானைப் பொதினி ஆங்கண்
> சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
> கற்போற் பிரியலம் என்ற சொல்தாம்
> மறந்தனர் கொல்லோ தோழி ..''

எனவரும் பாடலில், பழநி என்பது 'பொதினி' என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. பழங்காலத்திற் சேர சோழ பாண்டியர் ஆகிய முடியுடைய மூவேந்தர்களின் கீழ்ப் பல சிற்றரசர்கள், தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஆண்டு வந்தனர். அவர்களை 'வேளிர்' எனக் கூறுவர். அவர்களுள் ஆவியர் குடியைச் சேர்ந்தவர்களுக்குப் 'பழநி' என இந்நாளில் வழங்கும் பொதினிமலை உரிமை உடையதாக இருந்தது. மிகப் பழங்காலத்திலேயே முருகன் வழிபாடு அங்குச் சிறப்பாக நிகழ்ந்து வந்ததாகல் வேண்டும். பொதினியையும் ஆவியையும் குறிக்கும் இப்பாடலில், முருகனைப் பற்றிய குறிப்பும் அமைந்திருத்தல் பெரிதும் கருதி மகிழற்பாலது,

## வையாவிக்கோப்பெரும் பேகன்

ஆவியர் குடியில் தோன்றியவனே, வையாவிக் கோப்பெரும்பேகன் என்னும் மன்னன். அவனைக் குறித்துப் புறநானூறு என்னும் சங்க நூலில் பாடல்கள் பல பாடப்பெற்றுள்ளன. இப்பேகன் சங்க கால வள்ளல்களுள் ஒருவனுகத் திகழ்ந்தவன். இவ்வரசனே மழையில் நனைந்து குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த ஒரு மயிலைக் கண்டு மனம் பெரிதும் உருகி, அதற்குப் பொற்பட்டாடையைப் போர்த்தருளியவன். இம்மன்னவன் மயிலுக்குப் பொற்பட்டாடை போர்த்தியதற்குக் காரணம், தங்கள் குலதெய்வம் ஆகிய பொதினிமலை முருகனின் ஊர்தியாயிற்றே என்ற பக்தியுணர்வும், பரிவுமே யாதல் வேண்டும்.

இங்ஙனம் பேகன் என்னும் பெருவள்ளல் மயிலுக்குப் போர்வை அளித்த செய்தியினை,

> ''மடத்தகை மாமயில் பனிக்கும் என்றருளிப்
> படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
> கடாஅ யானைக் கலிமான்பேகன்''
>
> (புறம்-141)

> ''உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
> படாஅம் மஞ்ஞைக்கு ஈதத எங்கோ
> கடாஅ யானைக் கலிமான் பேகன்''
>
> (புறம்-145)

> ''கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
> அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
> பெருங்கல் நாடன்பேகன்''
>
> (சிறுபாண்-85.87)

> ''முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
> தொல்லை அளித்தாரைக் கேட்டறிதும்''
>
> (புறப்பொருள்மாலை)

எனப் பழந்தமிழ் நூல்கள் பாராட்டியிருக்கின்றன.

## ஆவிநன்குடி:

இத்தகைய பக்தியுணர்விற் சிறந்த பேகன் என்னும் பெருவள்ளல் தோன்றிய ஆவியர் குடிக்கு உரிமையுடையதாக விளங்கியிருந்த பொதினிமலையைச் சார்ந்த பகுதிக்கு ''ஆவிநன்குடி'' எனப் பெயர் வழங்குவதாயிற்று; இதுபோது அது மலையடிவாரத்திற்கு அணித்தேயுள்ள அழகிய கோயிலுக்கு வழங்கி வருகின்றது. ஆசிரியர் நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை, ஆவிநன்குடியில் முனிவர்களும் தேவர்களும் பிறருமெல்லாம் வழிபட முருகன் எழுந்தருளி விளங்கும் திறனைப் புகழ்ந்து பாடிப் பரவுகின்றது. திருவாவிநன்குடியில் திருமகள் காமதேனு சூரியன் நிலமகள், அக்கினிதேவன் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றமையினைத் தலபுராணம் கூறுகின்றது. (திரு ஆ இனன் குடி)

---

பழநியில் நடைபெறும் திருக்குட நீராட்டு விழாக் குறித்து எழுதப்பெற்ற கட்டுரை.

—ஆசிரியர்.

திரு-மகாலட்சுமி: ஆ-காமதேனு: இனன்-சூரியன்: கு-உலகம், நிலமகள். டி-அக்கினி தேவன் என்று அதன்படி விளக்கம் கூறுவர் பெரியோர்.

''ஆத ரம்பயில் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனுளினில்
ஆதி யந்த உலா ஆசு பாடிய
ஆவி நன்குடி வாழ்வான தேவர்கள்
பெருமாளே''

எனவரும் அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாடலும் ஈண்டுச் சிந்தித்தற்குரியது. இதனல் சேர வேந்தர்களுக்குரிய கொங்கு மண்டலத்தில் வைகாவூர் நாட்டின் பிரிவுக்குள் ஆவி நன்குடி விளங்கியிருந்தமை புலனுகின்றது. 'வையாவியூர்' என்பதே 'வைகாவூர்' என இதன்கண் மருவி வந்துள்ளது. அங்ஙனமே 'வையாவிபுரி' என்பதே இந்நாளில் 'வையாபுரி' என வழங்கப்படுகின்றது. தமிழ்நாட்டின் பழைய வரலாற்றுச் செய்திகளை, இவ்வழக்காறுகள் இன்றும்நமக்குஅறிவித்துக் கொண்டு இருக்கின்றன.

## பழநியின் சிறப்பு :

பழநி என்பது ஒரு சிறந்த பெயர். முருகனின் ஆறுபடை வீடுகளுள், இஃதொன்றே மக்களின் பெயராக வைத்துப் பெரிதும் வழங்கப்படுகிறது. ''படிக்கின்றிலை பழநித் திருநாமம்! படிப்பவர்தாள் முடிக்கின்றிலை'' என அருணகிரிநாதர்பெருமான் அருளிய கந்தர் அலங்காரம் இப் பெயரினை விதந்து போற்றுகின்றது. ''காசியின் மீறியபழநி'' ''அதிசயம் அனேகம் உற்ற பழநி'' என அவர் அருளிச் செய்திருப்பது, இத்தலத்தில் பெருமைகளை விளக்கும். இதற்குச் 'சித்தன் வாழ்வு' என்றும் ஒரு பெயர் உண்டு. முருகன் ஆகிய எல்லாம் வல்ல சித்தனும், போகர் புலிப்பாணி முதலிய எண்ணிறந்த பல சித்தர்களும் வாழ்ந்து வருதல் குறித்து, அப்பெயர் இதற்கு அமைந்திருத்தல் கூடும்.

ஒரு சமயம் நாரதர் சிவபெருமான்பாற் கொணர்ந்து கொடுத்த மாங்கனியின் பொருட்டு முருகப் பெருமான் மயில்மீது ஏறி உலகை வலம் வந்ததும், விநாயகப் பெருமான் சிவபெருமானையும் உமாதேவியையும் வலம் வந்து அதனைப் பெற்றுக்கொண்டதும், அதனல் முருகன் முனிவுகொண்டு பொதினி மலைக்குப் போந்து தங்கிவிட, இறைவன் எழுந்தருளி வந்து 'மிகச் சிறந்த ஞானப் பழம் நீ யன்றோ? இனிமையே வடிவாக அமைந்த நினக்கு, இன்னதை வேறொரு பழமும் வேண்டுவதோ?' எனக்கூறி முருகனை மகிழ்வித்ததும், அதனல் பழநி எனப் பெயர் ஏற்பட்டதும் யாவரும் அறிவர்.

''ஈசன் உருகி மடியினில்வைத்து
என்றும் இளையோய்! அறிவுடையை!
தேசு தரும்நம் வாள்நுதற்கண்
மணிநீ! சிறுவ னே? பெரியை!
வாச நறுமென் கனியும் ஒரு
கனியோ? மதுர மொழிவாயாற்
பேச அரிய மறைஞானப்
பிள்ளை, பழம்நீ எனப்புகன்றார்''

எனவரும் பழநித் தலபுராணப் பாடல் இவ்வரலாற்றைச் செவ்விதின் விளக்கும்.

''கனியைத் தரவிலை எனஅருள் செந்திற்
பழநிச் சிவகிரி தனில்உறைகந்தப் பெருமாளே'

என்னும் அருணகிரிநாதர் திருமொழியும் இதனைக் குறிப்பிட்டுப் போற்றியிருத்தல் காணலாம்.

## பழநியாண்டவர்

திருவாவிநன்குடி என்னும் பண்டைப் பெயருடைய பழநி என்னும் பழம்பெரும் பதியில் எழுந்தருளி விளங்கும் பரமனுகிய ஆண்டவனுக்கே பழநி ஆண்டவர் என்று பெயர். அன்பர்கள் நினைந்து வழிபடும் திருவுருவங்களை மேற்கொண்டு அருள்புரியும் இயல்பினனுகிய முருகப் பெருமானுக்குச் சிற்ப நூல்களில் பலவகையான அழகிய திருவுருவங்கள் கூறப்பெற்றுள்ளன. இத்திருவுருவங்களுள் கந்தசுவாமி என ஒரு திருவுருவம் உண்டு. ஒரு முகமும் இரண்டு கைகளும் உடையவராய், வலக்கையில் தண்டாயுதம் ஏந்தி, இடக்கையை இடுப்பில் வைத்துக் கொண்டு,கோவணம் உடுத்திய நிலையில், செந்தாமரை மலர் போன்ற நிறத்துடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி கொடுத்தருள்பவர், கந்தசுவாமி எனப்படும் திருவுருவம் என்று, சிற்பநூல்கள் கூறும். இவரே பழநியாண்டவர் என வழங்கப்படுபவராவர். கையில் ஞானமாகிய தண்டாயுதம் ஏந்தியிருத்தல் பற்றி, இவருக்கு ஞானதண்டாயுதபாணி எனவும் ஒரு சிறப்புப் பெயர் வழங்கும். தண்டாயுதபாணியாகிய கந்தசுவாமிக்கு மக்களிடையிற் பழநி ஆண்டவர் என்ற சிறப்புப் பெயரே பெருவழக்காகப் போற்றி வழங்கப்பட்டு வருகின்றது.

## பற்றற்ற பண்பு

உலகியல் வாழ்க்கையில், ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்தில், என்றேனும் ஒருநாள், பண்பட்ட மனப்பக்குவம் ஏற்பட்டு. விருப்பு, வெறுப்பற்றுப் பரந்த மனப்பான்மையுடைய, பற்றற்ற தன்மை உண்டாதல் திண்ணம். அந்நிலையிலேயே அவன் தன்நலம் இன்றி, உலக நலம் குறித்துப் பெரிதும் உழைக்கும் உயரிய குறிக்கோள்

உடையவனாக விளங்கப் பெறுகிறான். பற்றற்ற தூய மனப்பண்புடன் உலக நலம் கருதி உழைக்கும் உயரிய பெருந்தகைமையாளனே, உத்தமன் என்று போற்றப்படுவான். அத்தகைய உத்தமர்களாலேயே உலகம் நின்று நிலவி அழிந்துபடாமல் இருந்து வருகின்றது எனப் புறநானூறும் திருக்குறளும் புகலுகின்றன.

''உண்டால் அம்ம இவ்வுலகம் ..
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே''
—புறநானூறு, 182,

''பண்புடையார்ப் பட்டுண் டுலகம்,
அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்''
திருக்குறள், 996.

இங்ஙனம் தன்னலம் நீத்து, மன்பதை நலம் குறித்துப் பற்றற்ற தன்மையுடன், மனிதன் வையத்து வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும் என்னும் உயரிய உண்மையினையே பழநியாண்டவர் திருவுருவம், நமக்குப் பண்புற விளக்கிக்கொண்டு நிகழ்கின்றது,

## ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணம்

முருகப் பெருமான் குழந்தைகளுக்குக் குழந்தைவேலன் ஆகவும், இளைஞர்களுக்குப் பாலசுப்பிரமணியன் ஆகவும், கலைஞர்களுக்குச் சண்முகநாதன் ஆகவும், வீரர்களுக்குத் தேவசேனாபதி ஆகவும், மந்திர உபதேசம் பெற விரும்பி மாணவ நிலையில் வழிபடும் அன்பர்களுக்குச் சுவாமிநாதன் ஆகவும், இல்லற நிலையினர்க்கு வள்ளி தெய்வயானை உடனுறை சுப்பிரமணிய சுவாமி ஆகவும், பற்றற்ற தூய ஞானத் துறவற நிலையினர்க்குப் பழநியாண்டவர் ஆகவும், பிறவாறும் விளங்கி, அவரவர்க்கு ஏற்ற நிலைகளில், பல்வேறு வகைகளில், ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணம் அணிந்து, அருள்புரிந்து காத்து வருகின்றான்.

## துறவுநலம்

''உபநிடத காலம்தொட்டே நாம் உலகுக்கு ஒரு பெரிய அறைகூவலை விடுத்திருக்கின்றோம். அழியாத் தன்மை அடைவது செல்வத்தினாலோ அன்றிச் சந்ததியினாலோ இல்லை. துறவு நெறியுணர்வினாலேயே ஆகும். ஒவ்வோர் இனமும் வரிசையாக இந்த அறைகூவலை ஏற்றுக்கொண்டு தங்களால் இயன்ற வரையில் முயன்று, உலகச் சிக்கல்களை ஆசாபாசங்களால் விடுவிக்க முயன்றுள்ளன. கடந்த காலத்தில் அவைகளெல்லாம் தோற்றுப் போயின. பொருளும் பதவியும் காரணமாக எழும் சூழ்ச்சி வஞ்சகம் துன்பம் முதலிய சுமைகளால் நலிவுற்று, அப்பழைய இனங்கள் யாவும் மறைந்தொழிந்தன. புதியனவும்கூட நிற்கமுடியாமல் தள்ளாடிக் கொண்டுள்ளன. அமைதியா போரா; பொறுமைத் தன்மையா பரபரப்புணர்வா, நல்லியல்பா, வல்லியல்பா, உடல் வலிமையா அறிவு வலிமையா, உலகாயதமா ஆன்மீகமா, இவற்றுள் எது முடிவில் வெற்றி பெறும்? என்பது இனிமேல்தான் தெரியும்.

''ஆனால்எவ்வளவோ காலத்திற்கு முன்பே நாம் நம்முடைய சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டு விட்டோம். ஆகூழ்—போகூழ் இரண்டிலும் கடைசிவரையிலும். அதனையே கடைப்பிடித்து ஒழுகக் கருதியுள்ளோம். நம்முடைய தீர்வு; உலகியற் பற்றிலா உணர்வும்—தூய துறவுநெறி வாழ்க்கையுமே யாகும்.'' எனச் சுவாமி விவேகானந்தர் அவர்கள், தம் சொற்பொழிவு ஒன்றிற் குறிப்பிடுகின்றார். அஃது ஈண்டு நாம் எண்ணியுணர்தற்கு உரியது.

பற்றற்ற தூய துறவு நிலையே, உலகில் மனித வாழ்வின் வளர்ச்சிப் படிநிலைகளுள் முடிவாகச் சிறந்து நிற்பதாகும். ''மகவெனப் பல்லுயிர் அனைத்தையும் ஒப்ப நோக்கும்'' பரந்த மனப்பான்மையும், பற்றற்ற தூய துறவொழுக்கப் பண்பும், எளிய இனிய நல்ல குழந்தையுள்ளமும், உயரிய சிறந்த பல குறிக்கோளும் வாய்க்கப்பெறுதலே, மனித வாழ்வின் உயர்வற உயர்ந்த பெருஞ் சிறப்பு வளர்ச்சி நிலையாகும். இதனை மக்களாகிய நாம் அனைவரும் எய்திச் சிறப்புறுதல் வேண்டும் என்னும் உண்மையினைத் தெள்ளிதின் உணர்த்துவதே பழநி ஆண்டவர் திருவுருவம் எனலாம்.

## தவ வாழ்க்கை

துறவுநெறி தவவாழ்க்கை என்னும் இரண்டின் சிறப்பும், இணையன என்று எல்லையிட்டுச் சொல்லுதற்கரியன. ''இவ்வுலகம் மிகமிகப் பெரியதுதான். ஆயினும் இவ்வுலகத்தையும். தவத்தையும் ஒரு துலாக்கோலில் இட்டுச் சீர்தூக்கிப் பார்த்தால், தவத்திற்கு இவ்வுலகமானது ஒரு சிறு வெண்கடுகு அளவுகூட ஈடாகமாட்டாது'' என்னும் கருத்தமைய,

''வையமும் தவமும் தூக்கில் தவத்துக்கு
ஐயவி அனைத்தும் ஆற்றாது!

எனப் புறநானூற்றுப் பாடல் ஒன்று. தவ நலத்தின் சிறப்பினை மிக விதந்தெடுத்துரைத்துப் போற்றுகின்றது.

துறவே துன்பம் பலபோக்கும்
துறவே இன்பம் பலவாக்கும்,
துறவே கொடிய தன்னலத்தைத்
தொலைக்கும், உயிர்கள் தலைமைப்புரக்கும

துறவே துரிசு பல அகற்றும்,
துறவே தூய்மை உண்டாக்கும்
துறவே இறையைச் சார்விக்கும்
துறவின் பெருமை சொலல் எளிதோ.

தவமே மேலாம் நெறியாகும்
தவமே சித்தி பலபயக்கும்
தவமே துறக்கம் அடைவிக்கும்
தவமே நரனைத் தேவாக்கும்
தவமே சிறந்த வாழ்வாகும்
தவமே ஞானம் தனைக் கொடுக்கும்
தவமே இறைவன் அருள்பயக்கும்
தவத்தின் உயர்ந்த தொன்றில்லை.

—மாதவச் சிவஞான சுவாமிகள்

இத்தகைய துறவு நெறிச் சிறப்பு, தவ வாழ்க்கையின் மேன்மை ஆகியவற்றைக் குன்றின்மேல் இட்ட விளக்கென, உலகுக்கெல்லாம் உணர்த்தி நிற்கும் சிறப்புடையதே, பழநி ஆண்டவர் திருவுருவம் எனலாம்.

## தவநிலையோர் தெய்வம்

இதுபற்றியே சைவ சித்தாந்தச் சான்றோராகிய அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், தமது சிவஞானசித்தியார் செய்யுள் ஒன்றில், ''தவநிலையோர் தெய்வம்'' என முருகப் பெருமானைக் குறித்து மொழிந்துள்ளார். அஃது ஈண்டுச் சிந்தித்து இன்புறுதற்குரியது. பழநி ஆண்டவர் ''தவநிலையோர் தெய்வம்'' எனத் திகழ்தல் குறித்தே, ஆசிரியர் நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில், திருவாவிநன்குடி பற்றிய பகுதியில், ஏனைய எல்லாத் தேவர்களெல்லாம், தங்களைத் தொடர்ந்து பின்னேவர, துறவு நெறி மேற்கொண்டு தவவாழ்க்கை நடாத்துகின்ற முனிவரர்கள் மட்டுமே, முற்படச் சென்று முருகனைத் தொழுது மகிழ்கின்றனர் எனச் சிறந்தெடுத்துக் கூறியிருக்கின்றார். பழநி ஆண்டவர் ''தவநிலையோர் தெய்வம்'' என்பதை இஃது துணர்த்தும்.

சுருக்கமாகக் கூறலுறின், ஆசிரியர் திருவள்ளுவர் தம்முடைய திருக்குறளில், ''நீத்தார் பெருமை'' எனக்கூறிய அதிகாரத்திற்கும், ''பொறி வாயில் ஐந்தவித்தான்'' என இறைவனைக் குறிப்பிட வழங்கிய பொருள் பொதிந்த தொடர்க்கும், சிறந்த இனிய எடுத்துக் காட்டாகத் திகழ்வது, பழநி ஆண்டவர் திருவுருவம் எனக் கூறி முடித்தலும் பொருந்தும்.

## முடிவுரை

பழநி ஆண்டவர் காட்சிக்கு எளியவர்! கருணைக்கு இனியவர்! குணம் என்னும் குன்றேறி நிற்பவர். ''அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை, விடல் வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு'' என நம்மனோர் அனைவர்க்கும் அறிவுறுத்தி யருள்பவர். குழந்தை உள்ளம் படைத்தவர். எளிதாகவும் விரைவாகவும் அருளை இனிது வழங்கும் இயல்பினர். அதனாலேயே அப்பெருமானை அடியவர் உலகம் மீக்கூறிப் போற்றித் துதித்து வழிபட்டு மகிழ்ந்து வருகின்றது. கலியுகத்திற் ''கண் கண்ட தெய்வம்'' என விளங்கி வரும் பழநி ஆண்டவர்தம் பெருமைபகர் தற்கு எளியதோ?

—ஆசிரியர்.

★



சென்னை கோடம்பாக்கம்
வடபழநியாண்டவர் திருவுருவம்

★

# "பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்"

**முன்னுரை;**

மாணிக்க வாசகர், தமிழ் நாட்டில் தோன்றியருளிய சான்றோர்கள் பலருள்ளும் தலைசிறந்த ஒருவர்! அவரை நினைக்கும்போதெல்லாம் அவருடைய ஒப்புயர்வற்ற பக்தியும் ஞானமும் போன்ற உயரிய பண்புகளும், அவர் அருளிச் செய்துள்ள திருவாசகம் என்னும் தெய்வத் தமிழ் நூலும் பிறவும், நம்மனோர் நினைவுக்கு வந்து, நம் உள்ளத்தையெல்லாம் நீராக உருக்கும்.

**மாணிக்கவாசகர்:**

உள்ளம் ஆகிய வயலை, பக்தி என்னும் ஏர் பூட்டி உழுது, அதன்கண் ஞானம் ஆகிய விதையினை விதைத்து, கருத்தூற்றம் என்னும் நீரைப் பாய்ச்சி, மாறி நின்று மயக்கும் கள்ள ஐம்பொறிகள் ஆகிய களைகளைப் பறித்து, சிவானந்தம் என்னும் சிறந்த பயிரை விளைவித்து, சிவபோகப் பேரின்ப விளைவினை யாவரும் இனிதறிந்து பெற்றுப் பயன்கொள்ளும் வண்ணம், வலிந்து கூவி அழைத்து, அனைவருக்கும் பகிர்ந்து வழங்கும் மாட்சிமை வாய்ந்தவர் மாணிக்கவாசகர்!

**திருவாசகம்;**

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், எத்தகைய பெருஞ் சிறப்பினது என்பது, பொதுவாக யாவருமே அறிந்ததொன்று. அதனை வியந்து போற்றி அகம்மகிழாத சான்றோர்கள் எவரும் இலர். "சிவபெருமான் ஒரு பெருங் கருணைக்கடல். அக்கடலில் 'நலமலி கங்கைநதி தலை சேர்ந்து' இருக்கின்றது. சிவபெருமான் ஆகிய கடலில் இருந்து, சிவானுபவம் என்னும் நீரை, மாணிக்கவாசகர் ஆகிய மேகம் நிரம்ப முகந்து கொண்டு, பெரு மழையாகப் பொழிந்தது. அதனால், "திருவாசகம்" என்னும் பக்தி ஞான வெள்ளம், எங்கும் பெருக்கெடுத்து ஓடியது. அஃது ஓதுபவர்களின் மனம் என்னும் பெரிய சிறந்த ஏரியிற் புகுந்தது. அவர்களின் நாக்கு ஆகிய மதகில் நடந்தது. கேட்பவர்களின் காதுகள் ஆகிய மடைகளிற் பாய்ந்தது. அவர்களின் உணர்வு ஆகிய நிலத்தில் அழுந்த ஊன்றப் பெற்றிருந்த அன்பு என்னும் விதையினின்று சிவம் என்னும் மெல்லிய முளை தோன்றச் செய்தது. சிவம் ஆகிய முளை நன்கு வளர்ந்து திருவருள் என்னும் பூ மலர்ந்தது. அதனில் இருந்து வீடு பேற்றின்பம் என்னும் சிறந்த பழம் பழுத்தது, பழுக்கின்றது" என்றெல்லாம் பலவகைகளில் சான்றோர்கள் பலரும், திருவாசகம் பற்றிச் சாலவும் வியந்து பாராட்டி மொழிந்திருக்கின்றனர்.

**திருச்சிற்றம்பலக் கோவையார்:**

மாணிக்கவாசகர், திருவாசகம் மட்டுமேயன்றி, மற்றுமொரு நூலும் இயற்றியுள்ளனர். அதன்பெயர் திருச்சிற்றம்பலக் கோவையார் என்பது. "பாவை பாடிய வாயாற் கோவை பாடுக" எனச் சிவபெருமானே வேண்டிக் கேட்டுக்கொள்ள, மாணிக்கவாசகர் அதனைப் பாடினர் என்பர். சங்ககாலத்துத் தெய்வப் புலவர்கள் பாடிய அகப் பொருட்சுவையுடன், தமக்குக் கைவந்த அருட்பொருள் நலமும் அமையும்படி, மாணிக்கவாசகர் பாடிய அந்நூலின் எல்லையற்ற பெருமைகளைச் சொல்லுதல் எளிதன்று! எனினும், அதனுள் ஒரு பாடலினைப் பற்றிமட்டும் ஈண்டுச் சிறிது இயன்றவரை நினைந்து மகிழ்வோம்!

**காக்கை பாடினியார்;**

சங்க காலத்தில் புகழ்பெற்றுத் திகழ்ந்திருந்த பெண்பாற் புலவர்களுள் "நச்செள்ளையார்" என்பவர் ஒருவர். செள்ளையார் என்பது அவர்தம் இயற்பெயர். 'ந' என்னும் அடைமொழிச் சொல், அவருடைய

சிறப்பை விளக்கி நிற்பது. குறுந்தொகை என்னும் சங்கநூலில் அவர் பாடிய பாடல் ஒன்றினால், அவருக்குக் "காக்கைபாடினி யார்" என்னும் ஒரு காரணச் சிறப்புப் பெயர் அமைந்தது.

தலைவியைப் பிரிந்து பிறநாடு சென்று மீண்டு வந்த தலைவன், "யான் பிரிந்திருந்த காலத்தில், தலைவி துயருறாமல் நீ நன்கு ஆற்றுவித் திருந்தாய்" என்று தோழியைப் புகழ, "யான் ஒன்றும் செய்திலேன். நின் வருகையை அறிவிப்பது போலக் காக்கை கரைந்த நல்ல நிமித்தம் உணர்ந்து, தலைவியே ஒருவாறு ஆறுதல் அடைந்திருந்தாள்" என்று தோழி தலைவனுக்குக் கூறுவதாக அமைந்தது அந்தப் பாடலின் துறை!

திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல் ஆ பயந்த நெய்யில், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல்வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது; என் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே!

— குறுந்தொகை, 210

பாடற் பொருள்:

"திண்ணிய தேரையுடைய நள்ளி என்னும் வள்ளலின் காட்டிலுள்ள இடையர்களுக்குரிய பல பசுக்களும் கொடுத்த நெய்யுடன், தொண்டி என்னும் ஊரிலுள்ள வயல்களில் முற்றும் ஒருங்கே விளைந்த வெண்நெல் அரிசியால் ஆக்கிய புதிய சோற்றை, ஏழு பெரிய பாத்திரங்களில் நிரப்பி ஏந்திக் கொடுத்தாலும், என் தோழியாகிய தலைவியினுடைய பிரிவாற்றாமைத் துன்பம் நீங்கும்படி, தலைவர் ஆகிய விருந்தினர் வரும்படி கரைந்து கூவிய காக்கைக்கு நன்றியாகக் கொடுத்தற்குரிய பலிச்சோறு மிகவும் சிறிய அளவினதாகவே இருக்கும்" என்பது மேற்குறித்த சங்கப்பாடலின் பொருள்.

காக்கை நன்னிமித்தம் தோன்றக் கரைந்து, தலைவியின் பிரிவாற்றாமைத் துன்பத்தை ஒருவாறு ஆற்றுவித்தது. 'காக்கையின் உதவி பெரியது' என்பது, இக் குறுந்தொகைச் செய்யுளின் திரண்ட பொருள்.

இந்தப் பாடலின் கருத்தையே மாணிக்கவாசகரும் தமது திருச்சிற்றம் பலக் கோவையார் என்னும் நூலில், அந் நூலின் இயல்புக்கு ஏற்ப, அகப்பொருட் சுவை அமையத் தழுவிப் பாட நேர்கின்றது. புலவர் ஒருவர் பாடிய கருத்தையே புலவர் பிறரொருவர் பாட நேருங்கால், அதனை மாற்றாமல் அங்ஙனமே ஏற்ற பெற்றி அமைத்துத் திரும்பப் பாடி விடுவது, பெரும்பாலும் புலவர்களுக்கு இயல்பேயாகும். அவ்வியல்பின்படியே,

மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை!
அன்புடை மரபின், நின் கிளையோடு ஆரப்
பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ!
வெஞ்சின விறல்வேற் காளையொடு
அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே.!

—ஐங்குறுநூறு, 391.

என்று, ஓதல் ஆந்தையார் என்னும் சங்க காலப்புலவர் ஒருவர், மேற்குறித்த நச்செள்ளையார் என்னும் பெண்பாற் புலவர் பாடிய பாடலின் கருத்தை, ஒரு சிறிது மாற்றம் மட்டுமே தோற்றும் வகையில் பாடியிருத்தல் காணலாம்.

இக்கருத்தினையே, மாணிக்கவாசகரும் பாட நேர்ந்தனராயினும், இவ்வகப் பொருட்டுறைக் கருத்துக்குப் புதுமையும் பொலிவும் பொருளும் பொருந்தும்படி, மாணிக்கவாசகர் பாடியருளியிருக்கும் திறம், வியக்கத் தக்கதாக விளங்குகின்றது.

பணங்கள் அஞ்சுஆலும் பருஅரவு
ஆர்த்தவன், தில்லைஅன்ன
மணங்கொள் அம்சாயலும் மன்னனும்
இன்னே வரக் கரைந்தால்,
உணங்கல் அஞ்சாது உண்ணலாம்;
ஒள்நிணப்பலி ஒக்குவன்; மாக்
குணங்கள் அஞ்சாற் பொலியும்
நல சேட்டைக் குலக்கொடியே!

- திருக்கோவையார், 235.

என்பது மாணிக்கவாசகர் பாடிய பாடல். கருத்தும் மரபும் பழமையுடையனவே யாயினும், அதனை வெளியிடும் பாடல் அமைப்பில் ஒரு புதுமை இருக்கக் காண்கின்றோம்.

புதுமைப் பொலிவு;

முன்னையன இரண்டும் எளிய அகவற் பாக்கள். இதுவோ கட்டளைக் கலித்துறை

என்னும் சிறந்த செய்யுள் அமைப்பு! முன்னைய இருவரும் ''காக்கை'' எனமட்டும் வாளா குறித்தனர். இவரோ, அப் பெயரையே மீண்டும் திருப்பிக் கூருமல், காக்கைக்குரிய வேருெரு பெயர் ஆகிய 'கொடி' என்பதனைக் குறிப்பிடுகின்ருர். 'காக்கை கரவா கரைந்துண்ணும்' எனத் திருவள்ளுவரும், 'காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்' எனத் தாயுமானவரும் போன்ற சான்ருேர்கள் புகழ்ந்தெடுத்துப் போற்றும் தகைமை வாய்ந்தது ஆகலின், காக்கையின் சிறப்பை யுணர்த்துதற்குக் 'குலக்கொடி' என விதந்தார். (குலம்—மேன்மை). கருத்தின்றிப் பராக்காக இருப்போர் கையிற் பொருள்களைக் கவர்ந்து சென்று விடுதல் போன்ற சில குறும்புகளை ஒரோவழி செய்வதாயினும், 'ஆகாயத் தோட்டி' என விளங்கி யாவர்க்கும் நலம் விளைவித்தலின், ''நல சேட்டைக் குலக் கொடி'' எனத் தன்மை நவிற்சியணி அமையக்கூறியிருத்தலும் நோக்கற்பாலது.

## இரட்டுற மொழிதல்:

புலவர்கள் சொற்களைக் கொண்டே தம் வித்தகம் புலப்படுத்தும் இயல்பினர். அம்முறையில், இச்சிறு தொடரிலும் மாணிக்கவாசகரின் மாண்பு விளங்கக் காண்கின்ருேம். 'கொடி' என்பதற்கு வேருெரு பொருளும் (விலோதம், பதாகை, Flag) உளதாகலின் அத்திறமும் விளங்கவும்; பாடுதற்கு மேற்கொண்ட, காக்கையின் சிறப்புப் புலனுகவும், அதனைச் சேட்டா தேவியின் கொடியாகத் திகழ்வது, உறுப்பைப் புடை பெயர்ப்பது என இரு பொருள்படும்படி, இரட்டுற மொழிதற் குறிப்பு அமைய, ''நலசேட்டைக் குலக் கொடி'' என்கிருர் மாணிக்கவாசகர்.

ஆசிரியர் திருவள்ளுவர், சேட்டாதேவி (ஜ்யேஷ்டாதேவி, மூதேவி) பற்றித் தம்முடைய திருக்குறள் நூலின்கண், ''செய்யவள் தவ்வை'' (1670) என்றும், ''மாமுகடி'' (617) என்றும், குறிப்பிட்டிருப்பது, இயைபுடைமை பற்றி ஈண்டு நாம் அறிந்து இன்புறற்பாலது.

## காக்கையின் குணங்கள்:

இஃது ஒருபுறம் இருப்ப, இவற்றின் மேலாக மாணிக்கவாசகர் இப்பாடலிற் சிறப்பாகத் தெரிவித்திருக்கும் ஒரு புதிய கருத்தும், நம்மால் மிகமிகப் போற்றற் பாலதாகத் திகழ்கின்றது. காக்கையைப் பற்றிப் புலவர்கள் பலரும் பாடியிருக்கின்றனராயினும், அதன் குணங்கள் இவை யென அறிந்து தெளிவுறப் பாடியிருப்பார் எவரையும் காண்கிலோம். மாணிக்கவாசகர் ஒருவர்தாம், காக்கையினை ''மாக் குணங்கள் அஞ்சாற் பொலியும் நலசேட்டைக் குலக்கொடி'' எனத் திறம் தெரிந்து தெளிவுற விதந்து குறிப்பிட்டருளியிருக்கின்ருர்!

1. மறைந்த புணர்ச்சித் தாதல்
2. கலங்காமை.
3. பொழுதுஇறவாது இடம்புகுதல்.
4. நெடுகக் காண்டல்.
5. மடியின்மை.

என்னும் ஐந்து குணங்களை யுடையது காக்கை என மாணிக்கவாசகர் கருத்தினை யுணர்ந்து, அவர் வழி நின்று உரை வகுத்தவர் ஆகிய பேராசிரியர் விளக்கியிருத்தல் காணலாம்.


மாணிக்கவாசகர் ஒரு சிறந்த அன்பர்! அடியார்! சிவஞானச் செல்வர்! என்றே நம்மிற் பலரும் அறிவோம். அவர் பறவை நூல்வல்ல ஒரு கலைஞரும் (Ornithologist) கூட, என்பது இப்பாடலாற் புலனுகின்றதன்ருே?

## முடிவுரை:

மாணிக்கவாசகரின் இனைய பல மாட்சிமைகளை யெல்லாம் உணர்ந்தே, அருட் பெருங் கவிஞர் ஆகிய குமரகுருபர சுவாமிகள், தாம் இயற்றிய சிதம்பரமும் மணிக் கோவை என்னும் நூலின்கண், மாணிக்க வாசகரைப் ''பைந்தமிழ் நவின்ற செந்நாப்

புலவன்'' எனப் போற்றிப் புகழ்ந்து துதித்து இன்புறுகின்றார்! இலக்கண இலக்கியச் சிறப்பு வாய்ந்தது செந்தமிழ்; உள்ளத்தை உருக்கிப் பக்தியைப் பெருக்கி இன்பம் விளைவிப்பது பைந்தமிழ் எனக் குமரகுருபரர் கருதினர் போலும்! இத்தகைய பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவர் ஆகிய மாணிக்கவாசகரையும், அவர் அருளிச் செய்த திருவாசகம்—திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் இரு பெரு நூல்களையும், நாம் நன்கினிது போற்றியும் ஓதியுணர்ந்தும், நலம் பெற்று உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்.



சென்னை யானைகவுனி முருகப்பன் தெரு வைகுண்டப் பெருமாள் தர்மராசா கோயில் திருக்குட நீராட்டுவிழாக் காட்சி.

# நாவாய் உறையும் நாரணநம்பி

டாக்டர் திரு. ந. சுப்புரெட்டியார், M.A.,Ph.D.,
தமிழ்ப்பேராசிரியர், திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

**வைணவசமயத்தின் குறிக்கோள் :**

வைணவ சமயத்தின் முடிவான குறிக்கோள் எம்பெருமானுக்கு அடிமை செய்வதேயாகும். அதுவும் எம்பெருமானின் உகப்புக்காகவே செய்வது மிகவும் சிறந்தது என்பது அச்சமயத்தின் சிறந்த கொள்கையாகும். அங்ஙனம் அடிமை செய்யுங்கால், தான் செய்வதாக எண்ணும் தன் முனைப்பே (Egoism) தலைக்காட்டலாகாது.

> "ஒழிவில் காலமெல்லாம்
> உடனாய் மன்னி
> வழுவிலா அடிமை செய்ய
> வேண்டும் நாம்"

என்று நம்மாழ்வார் கூறுவது காண்க இந்த ஆழ்வார் திருநாவாய் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு அடிமை செய்யவேண்டும் என்று ஆசைப் படுகின்றார். அந்த மனோரதமே நாவாய் உறையும் நாரணநம்பி மேல் திருவாய்மொழியாகப் பரிணமிக்கின்றது. அந்தத் திருவாய்மொழியை அநுபவித்து ஆழங்கால்பட்ட நாமும் அந்த எம்பெருமானைச் சேவிக்க ஆசைப்படுகின்றோம்.

**திருநாவாய்:**

திருநாவாய் என்ற திவ்விய தேசம் தென்னிந்திய இருப்புப் பாதையில், சோரனூர்-மங்களூர் வழியில் சோரனூரிலிருந்து சுமார் இருபத்தைந்து கல் தொலைவில் உள்ளது. சோரனூரில் தங்கி நாம் வித்துவக்கோட்டு அம்மானைச் சேவித்தோம் அல்லவா? இன்று திருநாவாய் எம்பெருமானைச் சேவிக்க ஆயத்தமாகின்றோம். அதிகாலையில் நீராடித் தூய ஆடையை உடுத்திக் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு, காலை சுமார் ஏழரை மணிக்கு சோரனூர் நிலையத்திற்கு வருகின்றோம். விரைவு வண்டி இல்லையாதலின் ஒவ்வோர் நிலையத்திலும் நின்று நின்று செல்லுகின்ற சாதாரண வண்டியில் ஏறுகின்றோம். இயற்கை வனப்புகளும் வளங்களும் நிறைந்த மலைநாடாதலின் இருப்புப் பாதையின் இருபுறமும் உள்ள தோப்புகள், சோலைகள், வயல்கள் இவற்றைக் கண்டு களித்துக்கொண்டே செல்லுகின்றோம். திருவித்துவக்கோடு செல்லும்போது பாரதப்புழா என்ற ஆற்றைப் பற்றிக் குறிப்பிட்டோமல்லவா? அப்போது 'அந்த ஆறு நம்முடனேயே தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. அந்த ஆற்றையே இப்போதும் சந்திக்கின்றோம். ஆனால் இப்போது அந்த ஆறு நாம் செல்லும் திசையிலிருந்து வந்து கொண்டிருப்பதைக் காண்கின்றோம். சுமார் ஒன்றரை மணி நேரத்தில் திருநாவாய் நிலையத்திற்கு வந்து சேர்கின்றோம்.

**கோயிலின் சூழல்**

நிலையத்திலிருந்து திருநாவாய் என்ற ஊர் ஒன்றரைக் கல் தொலைவிலுள்ளது. மாட்டு வண்டியோ குதிரை வண்டியோ அங்குக் கிடைப்பதில்லை. சில சமயம் பேருந்து கிடைக்கும். நாம் அதனை எதிர் பார்க்கத் தேவையில்லை. 'நடராஜா சர்வீஸில்' ஆனந்தமாக நடந்து செல்லலாம். சிறு சாலையின் வழியே நடந்து செல்லும் போதே இருபுறமும் பச்சைப் பட்டு விரித்தாற் போன்ற நெல்வயல் காட்சிகளைக் கண்டு களித்தவண்ணம் நடந்துபோகின்றோம். சாலையிலிருந்து சாலைக்கு உட்புறமாகச் சுமார் நூறு கெஜ தூரத்தில் திருக்கோயில் அமைந்துள்ளது. சாலையிலிருந்து கோயிலுக்கு இட்டுச் செல்லும் குறுக்குப்

பாதையில் இருபுறமும் சோலைகளையும் நந்தவனங்களையும் நாம் காணும்போது 'அடிமை செய்ய வேண்டும்' என்று பாரித்த ஆழ்வாரின் நினைவு வருகின்றது; அவருடைய உணர்ச்சி நம்மையும் பற்றுகின்றது. இதனால்தான். "வெளித்தண்மலர்ச் சோலைகள் சூழ்திருநாவாய்", "சோலைகள் சூழ் திருநாவாய்", "நீள் ஆர் மலைச்சோலைகள் சூழ் திருநாவாய்" "வண்டு ஆர் மலர்ச் சோலைகள் சூழ்திருநாவாய்", "கொந்து ஆர் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்" என்று நம்மாழ்வார் இவ்வூரைச் சுட்டியுரைத்தனரோ என்று எண்ணுகின்றோம். 'எம்பெருமானுக்கு அடிமை செய்வதற்குப் பூக்கள் முதலிய துணைப்பொருள்கட்குத் தட்டுப்பாடில்லாத திவ்விய தேசம் அன்றோ இது?' என்று எண்ணவும் செய்கின்றோம்' திருக்கோயில் பாரதப்புழா என்ற ஆற்றங் கரையின்மேல் அமைந்துள்ளது. இவ்வூர் வழியேதான் ஆறு திருவித்துவக் கோட்டை நோக்கிச் செல்லுகின்றது.

## ஆழ்வார்களின் மங்களாசாசனம்

இந்தத் திருக்கோயில் எம்பெருமானை நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர். எனினும், நம்மாழ்வார் ஒரு பதிகத்தால் இத்திருக் கோயில் எம்பெருமானைப் பாடி அநுபவிக்கின்றார்; அதுவும் பிராட்டி நிலையிலிருந்து அநுபவிக்கின்றார். திருமங்கையாழ்வார் திருநறையூர் நம்பியைப்பாடி அநுபவிக்கும் போது இத் திவ்விய தேச எம்பெருமானையும் நினைவு கொள்ளுகின்றார், நாவாய் உறையும் நம்பியையே நறையூர் நம்பியாகக் கண்டு களிக்கின்றார். அவர்கண்ட காட்சியை,

"தூவாய்ப் புள்ளூர்ந்து
வந்து துறைவேழம்
மூவாமை நல்கி
முதலை துணித்தானைத்
தேவாதி தேவனைச்
செங்கமலக் கண்ணனை
நாவாய் உளானை
நறையூரில் கண்டேனே"

என்ற பெரிய திருமொழிப் பாசுரத்தில் காணலாம். பரமபதநாதன் திருநாவாயில் வந்து குடிகொண்டிருந்தான்; அவனே திருநறையூரில் வந்து சேவை சாதிக்கின்றான் என்கின்றார் ஆழ்வார். பிறிதோரிடத்தில் பதினெண் திருப்பதிகளை மங்களாசாசனம் செய்யும்பொழுது, நாவாய் நம்பியை நினைவு கூர்கின்றார்.

"கம்பமா களிறு
அஞ்சிக் கலங்கஓர்
கொம்பு கொண்ட
குரைகழல் கூத்தனை,
கொம்பு லாம்பொழில்
கோட்டியூர்க் கண்டுபோய்
நம்பனைச் சென்று
காண்டும் நாவாயுளே"

என்பது பாசுரம். குவலயாபீடம் என்ற மத யானையின் கொம்பைப் பறித்த பெருமான், ஆழ்வாருக்குத் திருக்கோட்டியூரில் சேவை சாதித்தார்; அவரைத் திருநாவாயில் காண ஆசைப்படுகின்றார் ஆழ்வார். இந்த இரண்டு பாசுரங்களாலும் திருமங்கையாழ்வார் இத்திருப்பதிக்கு நேரில் வந்து சேவித்ததாகப் புலப்படவில்லை. நம்மாழ்வார் தலைவி பாசுரமாகப் பாடியிருப்பதால், அவர் இத்திருக்கோயிலுக்கு வரவில்லை என்று உறுதியாகச் சொல்ல முடியாது. திருவாய்மொழி அந்தாதி முறையில் அமைந்திருப்பதால் எல்லாப்பாடல்களையும் ஓரிடத்திலிருந்துகொண்டு பாடியிருத்தல் வேண்டும் என்று ஊகிக்க இடம் உண்டு. அப்படிப் பாடும்பொழுது இத்திருக்கோயில் எம்பெருமானைப் பாடுங்கால், 'தலைவி பாசுரமாகப்' பதிகத்தை அமைத்து மகிழ்ந்தார் என்று கொள்ளலே ஏற்புடைத்தாகும்.

## துன்பக்கடல் கடத்தும் தோணி

மேற்கூறிய எண்ணங்களுடன் திருக்கோயிலில் சந்நிதியை அடைகின்றோம். நம்மாழ்வார் பெற்ற அநுபவத்தை நாமும் பெற்று நாவாய் அப்பனைச் சேவிக்கின்றோம். அந்த எம்பெருமானின் பேரருளுக்கு நாம் பாத்திரமாக வேண்டும் என்று துடித்து நிற்கின்றோம். திருநாவாய் என்னும் திவ்வியதேசத்தில் எம்பெருமானின் பேரருள் விளங்கும் என்று ஆசாரிய இருதயம் குறிப்பிடுகின்றதன்றோ? நம்மாழ்வாரும்,

"நாவாய் உறைகின்ற
என்நாரண நம்பீ;
ஆஆ அடியான்
இவன்என்று அருளாயே"

என்று வேண்டுகின்றனரன்றோ? கடல் கடப்பதற்கு உறுப்பாக இருப்பது கப்பல்; நாவாய். அங்ஙனமே எம்பெருமானைப் பிரிந்த துன்பக் கடலைக் கடப்பதற்கு இத் தலத்து எம்பெருமானும் 'நாவாய்' போன்று இருப்பதால், அவன் எழுந்தருளி யுள்ள தலமும் 'நாவாய்' என்ற பெயரால் வழங்கலாயிற்று. 'திரு' என்ற அடை மொழியுடன் 'திருநாவாய்' என்று வழக்கிலிருந்து வருகின்றது.

''துன்பக் கடல்புக்கு
வைகுந்தன் என்பதுஓர்
தோணி பெறாது
உழல் கின்றேன்''

என்ற ஆண்டாளின் திருப்பாசுரத்திலும் இறைவன் துன்பக் கடல் கடத்தும் தோணி யாக அருளிச் செய்யப் பெற்றுள்ளமை காண்க.

### வினைகள் நீங்குதல்

பராங்குச நாயகி (நம்மாழ்வார்) இருந்த இடத்திலிருந்து கொண்டே எம் பெருமானை அநுபவிக்க எண்ணுகின்றாள். ஆகவே,

''வெறித்தண் மலர்ச்சோலைகள்
சூழ்திரு நாவாய்
குறுக்கும் வகையுண்டு
கொலோ கொடியேற்கே''

என்று மனோரதங்களைப் பண்ணுகின்றாள். அந்தத் திவ்யதேசம் அண்மையில் வரும் படியான உபாயம் உண்டோ என்று எண் ணுகின்றார். 'குறுகும் வகை' என்பது 'குறுக்கும் வகை' என்ற மலையாள மொழி வழக்காகப் பாசுரத்தில் அமைந்து கிடக் கின்றது. இதுபற்றி ஓர் ஐதிகம் சொல் வதுண்டு. ஒரு சமயம் இராமாநுசர் மலை நாட்டுத் திருப்பதி யாத்திரையாகச் சென் றிருந்தார். திருநாவாய்க்கு அணித்தாகப் போய்க்கொண்டிருக்கும் பொழுது எதி ரிலே வந்து கொண்டிருந்த மலையாளர்களை நோக்கித் 'திருநாவாய்' எவ்வளவு தூர முண்டு? என்று வினவினார். அவர்கள் 'குறுக்கும்' என்றார்கள்; அண்மையில் உள் ளது என்பது இதன் பொருள். எம்பெரு மானார் அதனைக் கேட்டு 'இப்பகுதி மொழி யாலே யன்றோ அருளிச் செய்துள்ளார் ஆழ்வார்' என்று பாசுரத்தில் ஈடுபட்டதாக வரலாறு ஒன்று உண்டு. அதனை ஈண்டு நினைவு கூர்ந்து நாமும் பாடலில் தோய்ந்து அநுபவிக்கின்றோம்.

''அறுக்கும் வினையாயின
ஆகத்தவனை
நிறுத்தும் மனத்தொன்றிய
சிந்தையினர்க்கு''

என்பது, பாசுரத்தின் முதலிரண்டு அடிகள். ''அப்பொழுதைக்கு அப்பொழுது ஆராவ முதமாக இருக்கும் எம்பெருமானைத் தங் கள் உள்ளத்தில் நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தினை உடையவர் கட்கு''த் திருநாவாய் அண்மைக்குவரும்படி யான உபாயமுண்டோ என்பது பராங்குச நாயகியின் எண்ணம். 'வினையாயின' என் பதனால் விரோதிகளைக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். அந்த விரோதிகள் சொரூப விரோதி, உபாய விரோதி, பிராப்ய விரோதி என்று திருமந்திரப் பொருளில் கூறப் பெறும் மூன்று விரோதிகளாகும். இவற் றைத் தவிர சஞ்சிதம், பிராரப்தம் என்ற வினைத் தொடர்களும் உள்ளன. இவை யனைத்தும் அடங்கியவையே 'வினையாயின' வாகும். எம்பெருமானை உள்ளத்தில் நிலை நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்களிடம் இவ் விரோதிகள் யாவும் அணுகா என்பது கருத்து.

### எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் நிலை

இத்தகைய எம்பெருமான் பெரிய பிராட்டியாரோடும், பூமிப் பிராட்டியா ரோடும் நப்பின்னைப் பிராட்டியாரோடும் திருநாவாயில் எழுந்தருளியுள்ளான். இதனை ஆழ்வார்,

''கொடியேரிடைக் கோகனகத்
தவள்கேள்வன்
வடிவேல் தடங்கண்
மடப்பின்னை மணாளன்
நெடியான் உறை சோலைகள்சூழ்
திருநாவாய்''

''மணாளன் மலர்மங்கைக்கும்
மண்மடந்தைக்கும்;
கண்ணாளன் உலகத்துயிர்
தேவர்கட் கெல்லாம்;
விண்ணாளன் விரும்பிஉறையும்
திருநாவாய்''

என்று கூறுகின்றார் மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும், பரமபதத்தையும்

ஆட்சி புரியும் எம்பெருமான் திருநாவாயில் விரும்பியுறைகின்றான். பெரிய பிராட்டியோ பரிந்துரைப்பதில் (புருஷகாரத்தில்) ஊன்றியிருப்பவள், பூமிப் பிராட்டியோ பொறுமையே வடிவெடுத்தவளாயிருப்பவள். நப்பின்னைப் பிராட்டியோ தன் அழகால் எம்பெருமானை வசீகரித்து நிற்பவள். இம்மூன்று அன்னைமார்களும் அருகிலிருக்கவும் தான் எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்யும் வாய்ப்பினை இழக்கலாமோ என்று ஏங்குகின்றார் ஆழ்வார். தவிர, அடைவது அரிதாக இருக்கும் இடத்திலன்றி எல்லோருக்கும் எளிதில் சென்றடையும் இடத்தில் எழுந்தருளியிருந்தும் இந்த வாய்ப்பினை இழக்கலாகாது என்பது ஆழ்வாரின் குறிப்பு.

### கைங்கரிய வாய்ப்பும் இறைவனருளே

இத்தகைய இறைவனுக்கு இடையறாது கைங்கரியம் செய்யவேண்டும் என்று எண்ணுகின்றவர் ஆழ்வார். அதற்கு எம்பெருமான் எந்த நாளை எண்ணி வைத்திருக்கின்றனனோ என்று கலங்குகின்றார்.

''நாளேல் அறியேன்
எனக்குள்ளன; நானும்
மீளா அடிமைப் பணிசெய்யப்
புகுந்தேன்''

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. மேலும் அவர்,

''தொண்டே உனக்காய்
ஒழிந்தேன் துரிசின்றி''

என்று தனது கைங்கரிய உறைப்பினை வெளியிடுகின்றார். எம்பெருமானுக்கு அடிமை செய்யவேண்டும் என்று என்ன தான் பாரித்து நின்றாலும், அவ்வாய்ப்பு அவனது அருளின்றி நிறைவேறப்பெறாது. அந்த அருளை வேண்டுகின்றார் ஆழ்வார்.

''அருளாது ஒழிவாய்;
அருள்செய்து அடியேனைப்
பொருளாக்கி உன்பொன்னடிக்கீழ்ப்
புகவைப்பாய்;
மருளேயின்றி உன்னைஎன்
நெஞ்சத்(து) இருத்தும்
தெருளேதரு தென்திருநாவாய்
என்தேவே''

இப்பாசுரத்தின் ஈற்றடியிலுள்ள 'தெருளே தரு' என்பதைத் திருநாவாய்த் தேவனுக்கு அடைமொழியாக்குவர் பிள்ளான் (ஆறாயிரப்படியில்); 'தரு-தந்தருள்க' என்று வினைமுற்றாகக் கொண்டு உரைத்தனர், மற்றையுரையாசிரியர்கள். ''உன் கருணையால் 'நம் அடியான் இவன்' என்று ஆட்கொண்டு அடியேனை உன் பொன்னடிக் கீழ்ப் புகவைத்தருள்வாய், வைத்தருளா தொழிவாய்; திருவுள்ளமானபடி செய்தருள்க'' என்கின்றார் ஆழ்வார்.

### நெஞ்சழிந்து கூப்பிடுதல்

திருநாட்டில் காணக்கடவதான வடிவை எம்பெருமான் இங்கே காட்டுவதாகக் கொண்டு திருநாவாயில் வந்து குடியேறியுள்ளான். அப்படியிருந்தும் அவனைக் காணப்பெறாமையினால் நெஞ்சழிந்து கூப்பிடுகின்றார் ஆழ்வார்.

''அந்தோ அணுகப்பெறும்
நாள்என்று எப்போதும்
சிந்தை கலங்கித்
திருமால்என்(று) அழைப்பன்:
கொந்தார் மலர்ச்சோலைகள்
சூழ்திரு நாவாய்
வந்தே உறைகின்ற
எம்மாமணி வண்ணா!''

என்ற பாசுரத்தில் இம்முறையீட்டினைக் காணலாம். ஒருகால் சொல்லப்புக்கு அதனால் இளைத்தாலும் கைவிடாமல் மேலும் மேலும் எல்லாக் காலத்திலும் துயர்வுற்ற பிள்ளை தாய் தந்தையர்களை 'அம்மா அம்மா', 'அப்பா, அப்பா' என்று சொல்லிக் கதறியழுது கூப்பிடுமாறு போலே ஆழ்வாரும் சிந்தை கலங்கித் 'திருமாலே, திருமாலே' என்று கூப்பிடுவதாக உரைக்கின்றார் ஆழ்வார். இங்ஙனம் கதறிக் கதறிக் கூப்பிடும் ஆழ்வாரின் உணர்ச்சியுடன் 'திருநாவாய் உறைகின்ற மாமணிவண்ணனைச்' சேவிக்கின்றோம்.

### அடிக்கடி பிராட்டியின் அநுசந்தானம்

திருநாவாய் எம்பெருமான்மீது பாடப்பெற்ற திருவாய்மொழியில், ''கொடியேரிடைக் கோகனகத்தவள் கேள்வன்,வடிவேல் தடங்கண் மடப்பின்னை மணாளன்'' என்றும், ''மடப்பின்னை மணாளா'' என்றும், ''மணாளன் மலர் மங்கைக்கும் மண் மடந்தைக்கும்'', என்றும் பிராட்டியின்

சம்பந்தம் அடிக்கடி அநுசந்திக்கப் பெறுகின்றதைக் காண்கின்றோம். அதற்கு நப்பின்னை காரணம் அருளிச் செய்கின்றார்: "வேறுதேசத்திற்குச் சென்றிருந்த குழந்தை ஊர் அணித்தானவாறே தாய்மாரைப்பல கால் நினைக்குமாறு போன்று, அடையத் தக்க தெளிவிசும்பு அணித்தானவாறே, திரளவும் தனித்தனியும் பிராட்டிமாரை அநுசந்திக்கின்றார்" என்று. திருநாவாய்த் திருவாய்மொழி 9: 8; பத்தாம்பத்தில் முதல் திருவாய்மொழியில் திருமோகூர்க் காளமேகத்தைச் சரணமடைந்து ஆழ்வார் பரமபதம் (தெளிவிசும்பு) அடையக் கருதியது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

## ஆழ்வாரின் அநுபவம் பெறல்

இங்ஙனம் நம்மாழ்வார் (பராங்குச நாயகியாக) பெற்ற அநுபவங்களை எல்லாம் முறையாக எண்ணிய வண்ணம் தெற்கே திருமுகமண்டலங் கொண்டு மலர் மங்கைத் தாயாருடன் வீற்றிருக்கும் கோலத்தில் நாவாய் உறையும் நாரண நம்பியை வணங்குகின்றோம். நம் மனம் உலகெங்கும் பறந்து திரிந்தாலும், திருநாவாய்த் தேவனேயன்றி வேறொன்றையும் எண்ணாது; நம் வாயோ அவனையன்றி வாழ்த்தாது. இந்த உணர்ச்சியுடன் திருநாவாய்த் திருவாய்மொழியை அவன் சந்நிதியிலேயே பாடி ஆழ்வார்பெற்ற அநுபவங்களை எல்லாம் பெற முயல்கின்றோம். இந்நிலையில்,

"பறந்து திரிதரினும்
பாவியேன் உள்ளம்
மறந்தும் பிறிதுஅறிய
மாட்டா: சிறந்த
திருநாவாய் வாழ்கின்ற
தேவனை அல்லால், என்
ஒருநாவாய் வாழ்த்தாது
உகந்து"

என்ற திவ்விய கவி பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் அவர்களின் பாடலையும் சிந்திக்கின்றோம். இத்திருவாய் மொழியைப் பாடியதன் பயனாக,

"மண்ணாண்டு மணங்கமழ்வர்
மல்லிகையே"

என்று ஆழ்வார் கூறியதுபோல், இகபர இன்பங்களைப் பெற்றதுபோன்ற உணர்ச்சியால் பூரித்து நிற்கின்றோம். அந்தப் பரவச நிலையில் நம் இருட்பிடத்திற்குத் திரும்புகின்றோம். ★

## திருமுறைக் கருத்தரங்கம்

திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிற் கண்காணிப்பாளர் விடுத்துள்ள அறிக்கை: திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிலின் ஆதரவில் நிறுவப்பெற்ற திருமுறைக் கருத்தரங்கத்தின் முதல் மாநாடு 1971-லும், இரண்டாவது மாநாடு 1972-லும், சீரிய முறையில் நடைபெற்றதை இத்துறையில் ஈடுபாடுடைய பல்லோர் அறிவர். மூன்றாவது திருமுறைக் கருத்தரங்கம் மே மாதத்தில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால், பொதுவாக யாண்டும் இருந்த மின் தட்டுப்பாடு, இவ்வூர்ப் பகுதியில் மிகையாக இருந்ததனால், ஆயிரக் கணக்கான அன்பர்கள் விழைவோடு நாடும் இப்பெருவிழாவை இச்சூழ்நிலையில் நடத்துவது கடினமெனக் கருதி, இவ்வாண்டு செப்டம்பர் மாதத்தில் நடத்தலாமென்று, இத்திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலராகிய துறைசை ஆதீனம் திருப்பெருந் திரு மகா சந்நிதானம் அவர்கள், திருவருள் பாலித்தருளியுள்ளார்கள். ஆக, மூன்றாவது திருமுறைக் கருத்தரங்கத்தை வருகிற செப்டம்பர் மாதத்தில் சிறந்த முறையில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளோம். தொடர்ந்து மூன்று நாட்கள் நிகழவிருக்கும் அப்பெருவிழா, அப்பரடிகளது திருப்பதிகங்களைப் பல கோணங்களில் ஆய்ந்துணரும் கருத்தரங்கமாக அமையும். இத்துறையில் வல்ல அறிஞர் பெருமக்கள், அக்கருத்தரங்கத்தில் பங்கேற்று உரையாற்றுவதையும், திருமுறைகளில் ஈடுபாடுடைய அன்பர்கள் பெருமளவில் வந்திருந்து கேட்டுப் பயன்பெறுவதையும் விரும்புகிறோம். பங்கேற்று உரையாற்ற விரும்பும் அறிஞர்கள், திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிற் கண்காணிப்பாளருடன், கடிதம் மூலம் தொடர்பு கொள்ளலாம். விழா நடைபெறும் தேதிகள், முன்னதாக நாளிதழ்களில் அறிவிக்கப்படும். முதல் கருத்தரங்கத்தின், சொற்பொழிவுகளை நூல் வடிவில் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வெளியீட்டின் அச்சுவேலையில் சிறிது தாமதம் நேர்ந்துள்ளது. இவ்வெளியீட்டுக்கு முன்பணம் அனுப்பிய அன்பர்கள் அருள்கூர்ந்து சிறிது பொறுத்திருக்க வேண்டுகிறோம்.

# இறைவனும் உயிரும்

டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனாபதி, M. A., Ph. D.

தத்துவநூற்பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்

இறைவன், உயிர், தளை, என்னும் முப்பொருள் உண்மையைச் சைவ சித்தாந்தம் வற்புறுத்துகிறது. இவற்றுள் முதலிரண்டும் அறிவுடையவை; பின்னது அறிவற்றது. எனவே, இறைவனும் தளையும் உயிரும் தளையும் வேறாயிருக்கக்கூடும். அறிவுப் பொருள்களான இறைவனும் உயிரும் எவ்வாறு வேறுபடலாம்? கட்டுநிலையில் வேறுபடுகின்றன எனினும் வீட்டுநிலையில் அவைஒன்றேயாயிருப்பதற்குத் தடையாது? என்னும் கேள்விகள் எழலாம். சைவ சித்தாந்தம் இக்கேள்விகளுக்குக் கூறும் விடையைப் பார்ப்போம்.

இதற்கிடையில், உள்பொருள் ஒன்றே என்னும் மறைமொழி நினைவுக்கு வரலாம். ஒன்று எனில் உயிர்களைப் பன்மையில் எவ்வாறு கொள்ளமுடியும்? உள்பொருள் ஒன்றென மறைகள் முழங்குவது உண்மைதான். ஆயின் அவை இறைவன் ஒன்று, என்னும் கருத்தில் 'ஒன்று' என்று கூறுகின்றன. மறைகளைப் பின்பற்றி ஒன்று என்று கூறும் உயிர், இறைவனன்று, தளையால் பிணிப்புண்டது. இவ்வாறு பிணிப்புண்ட உயிர்களும் பல. அகரம் என்னும் முதன்மையான எழுத்தையின்றி ஏனைய எழுத்துக்கள் அமையாவாறு, இறைவனின்றி உயிர்களும் அமையா. இவ்வுண்மையை மெய்கண்டார் மிகத் தெளிவாகப் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

**ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றேபதி; பசுவாம்**
**ஒன்றென்ற நீ பாசத்தோடுளைகாண்-ஒன்றின்றால்**
**அக்கரங்கள் இன்றாம் அகர உயிரின்றேல்**
**இக்கிரமத் தென்னும் இருக்கு.**

இனி உயிர் தளையுற்றிருப்பது உண்மைதானா என்னும் கேள்வி எழலாம். அறியாமையால் உயிர் தளையுற்றிருப்பது போலக் கருதிக் கொள்ளக் கூடும். அறியாமை நீங்கினால் தளை இல்லையென்பது தெளிவாகும். உண்மையில் உயிர் தளைபட்டிருக்கக் கூடுமெனில் ஒருகால் தளை நீங்கினாலும் மீண்டும் தளை ஏற்படக் கூடும். எனவே, முடிவான உண்மை உயிர் ஒருபோதும் தளைபட்டிருப்பதில்லை என்பது தான் என்று முடிவு செய்யலாம். ஆனால் இம் முடிவு ஆன்மிக வாழ்விற்குப் பொருந்துவதாக உளதா என்று பார்க்கவேண்டும்.

மெய்யுணர்வு ஆராய்ச்சியில் ஈடுபடாதவரையில் சிக்கல் ஒன்றுமில்லை. ஆராய்ச்சி தொடங்கிய உடன் பலவகையான சிக்கல்கள் எழுகின்றன. உடலோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாலும் உயிர் உடலன்று என்னும் உண்மை புலப்பட்ட உடன் உயிரின் வரலாறு யாது? அதன் தன்மை யாது? என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறது. தன்னுடைய அறிவும் ஆற்றலும் விருப்பங்களும் தடைப்பட்டிருப்பதாக உயிர் உணர்கிறது. ஏதோ ஒரு வகையான கறை அல்லது மாசு தன்னைப் பற்றிக் கொண்டிருப்பதாகவும் உயிர்உணர்கிறது. 'பொத்தின நோயிதனைப் பொருளுணர்ந்தேன். போய்த் தொழுவேன்' என்று சுந்தரர் கூறுவதனை இங்கே நினைவு கொள்ளலாம். மாசு அல்லது நோய் செயற்கைதான். ஆகையால் இம்மாசு அல்லது கறை அல்லது நோய்நீங்கி இயற்கை நிலையாகிய தூய்மை அல்லது நலத்திற்கு மீளும் வரையில் உயிர் ஓய்வு கொள்வதற்கில்லை. இதற்கான வழிவகைகளை மேற்கொண்டாலும் இறைவன் திருவருளின்றி வெற்றி காண முடியாது. எனவே, அவனருளால் தொடங்கப்படும் முயற்சி அவனருளாலேயே முற்றுப்பெற வேண்டியதாகிறது. இம் முயற்சி கைகூடுவதற்குப் பல பிறவிகள் தேவைப்படலாம். இவ்வுண்மைகள் அனைத்தும் வெறும் அறிவு வழி நின்று பெறக் கூடியவை அல்ல. இறைவனருளால் மட்டுமே விளங்கக்கூடியவை; இறைவன் அருளால் சமயச் சான்றோர்களுக்குப் புலப்பட்டவை. எனவேதான், அருணந்திசிவம் மறைகளாலும் உள்ளத்தாலும் உரையாலும் இறைவனை உணர முடியாது என்று கூறியபின் இறைவனருள் வாய்க்குமானால் இவற்றாலும் அவனை உணர முடியுமென்கிறார்.

மாசு நீங்கித் தூய்மை யடைந்த உயிர் தன் 'இயற்கை நிலை மாசற்றதென்பதற்காக மாசு படிந்திருந்த செயற்கை நிலையைமறைப்பதோ, மறுப்பதோ, மறப்பதோ, ஆன்மிக வரலாற்றுக்குப் பொருந்தாத செயலாகும். இறைவனருளின்றி அது மீண்டும் தன் இயற்கையான தூய்மையை அடைந்திருக்கமுடியாது. எனவே அவனருளால் தான் பெற்ற நன்மையை மறப்பது உய்தியில்லாத பிழையாகும் என்று மெய்கண்டார் வற்புறுத்துகிறார்.

இனி அறிவுப் பொருள்களாயினும் இறைவனும் உயிரும் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதற்கு அருணந்திசிவம் தரும் விளக்கம், இருள் மருள் ஆகிய நிலைகளிலிருந்து அருள்நிலைக்கு


உயிர் செல்லும் ஆன்மிக வளர்ச்சியை மைய மாகக் கொண்டுள்ளது.

உயிர் அறிவுடைய பொருளெனினும் அருளை நாடி நிற்பது, பிறப்பு இறப்புகளில் படிவது, அறிவித்தால் அறிவது. ஆதலின் இறைவனும் உயிரும் அணைந்தாலும் அவை ஒரே பொருளாய் விடாமல் தம்முள் நெருங்கிய தொடர்புடையதாக இருப்பவை. இத் தொடர்பு பிரிக்கமுடியாது. கட்டுநிலையில் உயிர் இதனை உணர்வதில்லை. கட்டு நீங்கிய உடன் உயிர் எதையும் யாரையும் இறைவனாகவே பார்க்கிறது. 'பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்' என்பது அருணந்தி சிவத்தின் வாக்கு.

'' சிவன்சீவன் என்றிரண்டும் சித்து; ஒன்றும் என்னில்
சிவன் அருட்சித்து; இவன் அருளைச் சேரும் சித்து; அவன்தான்
பவங்கேடு புத்திமுத்தி பண்ணும் சித்து அவற்றிற்
படியுஞ்சித்து அறிவிக்கப்படும் சித்தும் இவன்தான்;
அவன்தானே அறியுஞ்சித்து ஆதலினால் இரண்டும்
அணைந்தாலும் ஒன்றாகாது; அநந்நியமாயிருக்கும்;
இவன்தானும் புத்தியுஞ் சித்து; இவனோ புத்தி?
இது அசித்து என்றிடில் அவனுக்கு இவனும் அசித்தாமே''

— சிவஞானசித்தியார்.

அத்வைதம் என்னும் சொல்லுக்குச் சிவ ஞானமுனிவர் 'வேறன்மை' என்று அன்மைப் பொருள் கொள்வதைப்போல 'அநந்நியப்' என்பதையும் வேறன்மையாகவே கொள்ளுதல் ஏற்புடைத்து.



பழநி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி கோயிலில் உள்ள தங்கரதத்தின் காட்சி.

# திருவண்ணாமலைக் கோயிற் கல்வெட்டுக்கள்

திரு. இரா. நாகசாமி. M. A.
இயக்குநர்: தொல் பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

அண்ணாமலை உடையார் கோயிலுக்குப் பலர் சிறந்த திருப்பணிகள் செய்திருக்கிறார்கள். அவற்றில் விசயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் செய்த திருப்பணிகள் ஏராளம். அவற்றை அங்குள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன.

இக்கல்வெட்டு இரண்டு பகுதியாக உள்ளது. முதல் பகுதியில் கிருஷ்ணதேவராயர், தான் அடைந்த வெற்றிகளையெல்லாம் சிறப்பாகக் குறிக்கிறார். தான் சிறைபிடித்த பலருக்கு அருள் செய்ததையும் குறிக்கிறார். இராஜமகேந்திர குலத்தில் தேவியார் சின்னச்சி அம்மன், திருமலைதேவி அம்மன் இவர்கள் மகாதானம் செய்ததையும் கிருஷ்ணதேவராயர் குறிக்கிறார். சகவருடம் *1438*-ல் காளத்திக்கு வந்து நூற்றுக்கால் மண்டபமும் பெரிய திருக்கோபுரமும் கட்டுவித்துப் பிறகு திருவண்ணாமலையில் செய்த திருப்பணிகளை அவர் சிறப்பாகக் குறிக்கிறார்.

திருவண்ணாமலையில் ஆயிரக்கால் மண்டபம் ஒன்று கட்டுவித்தார். வசந்த உற்சவம் நடத்துவதற்கு இந்த மண்டபத்திற்கு முன்னர் ஒரு திருக்குளம் வெட்டினார். இதற்குத் தண்ணீர் வருவதற்குத் திருமலைதேவி அம்மன் சமுத்திரம் என்ற ஓர் ஏரியை வெட்டியிருக்கிறார். பதினொரு நிலைக் கோபுரம், 7-ம் திருநாள் மண்டபம், விநாயகருக்குத் திருத்தேர், ஒரு திருவீதி, வான வதரையன் சோழன் வாசல் கதவு, கதவு கால், உத்தம சோழன் திருவாசல்கால், கதவு, முதலியவை செய்தளித்தார். அவற்றிற்குப் பலகணி வாசல் பொன்பூசியது முதலியவற்றை அவர் கட்டுவித்தார். இந்த வாசல் முன்னகத்தை அவர் பத்தரை மாத்துத் தங்கத்தினால் கட்டினார். கொடுங்கை தகடுக்குப் பொன் பூசினார். உண்ணாமுலை நாச்சியார் கோயில், சடைப்பெருமாள் நாயனார் சந்நிதிக்கு மேற்கு வாசல் கால், கதவு அமர்த்தினார். அதற்கு வெண்கலம் போர்த்தினார். வாசற்கால் கதவிற்குப் பொன் பூசினார். நாச்சியார் கோயில் மடைப்பள்ளிக்கு முன் ஆராவமுது கிணற்றை வெட்டினார். கிருஷ்ணதேவராயர் பதக்கம் என்ற திருவாபரணம் ஒன்றை அளித்தார். நாகாபரணம் பொன்னார்சிலை வாகுபுரி, உத்தரீயம் முதலியவையும், பொன்னால்சேகண்டி, அஸ்திரதேவநாயனாருக்கு வெள்ளித் தகடும், அதன் உச்சிமேல் பொன்னும் பூசினார். திருமஞ்சனம் எடுக்க வெள்ளிக்குடம் ஒன்றை அளித்தார். இவ்வனைத்துத் திருப்பணிகளையும் அக்கல்வெட்டு குறிக்கிறது. இவை அனைத்தும் ஆயிரக்கால் மண்டபத்திற்கு முன் உள்ள ஒரு கல்லில் எழுதப்பட்டுள்ளன. இவை கொடுத்த ஆண்டு கி.பி. *1516* ஆகும்.

(S. I. I. Vol 8—165)

## மெய்கண்டதேவர்

திருவண்ணாமலைக் கோயிலில் இராசராச சோழன் 16-வது ஆண்டுக் கல்வெட்டில் மெய்கண்டதேவர் என்பவர் குறிக்கப்படுகிறார். அவர் திருவெண்ணைநல்லூரைச் சேர்ந்தவர் என்றும், வேளார் என்றும் குறிக்கப்படுகிறார். ''திருவெண்ணைநல்லூருடையான் மெய்கண்டதேவன் ஊருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளார்'' என்று இவரைக் கல்வெட்டு கூறுகிறது. இவர் திருவண்ணாமலைக் கோயிலைச் சேர்ந்த மாத்தூர் என்ற இடத்தில் ஒரு ஏரி வெட்டிவைத்தார். அந்த ஏரிக்கு மெய்கண்டதேவப் புத்தேரி என்று பெயர். அதே ஊரில் இவர் ஒரு சிவாலயம் எடுப்பித்தார். அதற்கு மெய்கண்டீசுவரர் என்று பெயர். இக்கல்வெட்டில் குறித்துள்ள இராசராசன் மூன்றாவது இராசராசனாக இருக்கக்கூடும். ஆதலின் இக்கல்வெட்டு 13-ம் நூற்றாண்டின் முதற் பகுதியைச் சார்ந்தது. சிவஞான போதம் எழுதிய மெய்கண்டதேவர் திருவெண்ணைநல்லூரைச் சார்ந்தவர் என்றும், வேளாளர் குலத்தைச் சார்ந்தவர் என்றும், 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவர் என்றும் வரலாற்று ஆசிரியர் குறிப்பர். இக்கல்வெட்டில் குறித்துள்ளவர் அவராகவே இருக்கக்கூடுமோ என்பது ஆராய்ச்சிக்கு உரியது. (S. I. I. Vol 8—74)

முற்றும்,

# இராமாநுசரின்
# இனிய அருளுரைகள்

### முன்னுரை:

சான்றோர்களின் சொற்கள் நமக்கு வாழ்க்கையில் பெரிதும் நலம் விளைக்கும் சிறப்புடையன. வழுக்குகின்ற நிலத்தில் நடப்பதற்கு ஊன்றுகோல் பயன்படுவது போல, வாழ்க்கையில் துன்பங்களும் தொல்லைகளும் தோன்றும்போது சான்றோர்களின் சொற்கள் நமக்கு மிகவும் துணை புரிகின்றன. ''இழுக்கல் உடையுழி யூற்றுக்கோல் அற்றே ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்'' என்பது திருக்குறள்.

சான்றோர்களின் சொற்கள் அனைத்துமே, பொதுவகையில் நமக்கு நன்மை விளைவிக்கும் தன்மையுடையனவாகும். எனினும், அவற்றுள்ளும் சான்றோர்கள் தமது இறுதிக் காலத்திற் கூறியருளும் சொற்கள், சிறப்பு வகையில் நமக்கு மிகவும் பயன் விளைவிக்கும் இயல்புடையனவாம். இறுதிக் காலத்திற் கூறப்படும் சொற்கள் அனுபவத்தின் முடிவாகவும் பிழிவாகவும் தோன்றுவன; தன்னலம் அற்ற நிலையிற் பிறர் நலமே விழைந்து வெளி வரும் புனிதம் மிக்கன; சொல்ல வேண்டுவன பலவற்றையும் உள்ளடக்கிச் சுருக்கமாகப் புலப்படுத்துவன; இனியொருகாற் கூறவும் கேட்கவும் படாத நிலையுமைடமைபால், மிக்க அருமையும் பெருமையும் வாய்ந்தன.

### இறுதி அருளுரைகள்

**(1)** உலகப் புகழ்பெற்ற புதின நூல் ஆசிரியர்களுள் ஒருவரும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பேரறிஞரும் ஆகிய சர் வால்ட்டர் ஸ்காட் (sir walter scott) என்னும் பேரறிஞர் இறக்கும் தருவாயில், லாக்கர்ட் (Lockart) என்பவரை நோக்கி, இறுதியாகக் கூறிய அறிவுரை, ''எனக்கு இனியோய்! ஒரு நல்ல மனிதனாக இரு'' ''(Be a good man, my dear'') என்பதாகும். இவ்வறிவுரை, எத்துணை அருமை மிக்க தொன்றாகத் திகழ்கின்றது! சுருக்கமாக இருப்பினும், இஃது எவ்வளவு பொருட் பெருக்கம் வாய்ந்து காணப்படுகின்றது.

*(2)* அங்ஙனமே, மெய்ப்பொருள் நாயனார் தமது அரசியல் ஆயத்தார்க்கும் அழிவுறுங் காதலார்க்கும், தம் உயிர் பிரியும் பொழுதில் இறுதியாகக் கூறிய அறிவுரை 'பரவிய திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர்' என்பதாகும். தமது வாழ்நாள் முழுவதும் தாம் கடைப் பிடித்து ஒழுகி வந்த ஒரு குறிக்கோளினை இவ்வாற்றால் அவர் புலப்படுத்தியிருத்தல் காணலாம்.

*(3)* இங்ஙனமே, தாம் சிலுவையில் அறையப்பட்டபோது இயேசுபெருமான் கூறிய இறுதியுரை, ''பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கின்றேன்'' என்பது. இவ்வாறு சொல்லி அவர் தம் உயிரை நீத்தார். இந்தச் சொல்லானது எத்தனையோ பல நூற்றாண்டுகளாக உலகெங்கும் வாழ்கின்ற பக்தியுள்ளவர்களின் மரண வேளை ஆறுதற் சொல்லாகப் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.

இவ்வாறே புத்தர் பெருமானும், நபிகள் நாயகமும்கூடத் தமது இறுதிக் காலங்களில், இத்தகைய அருளுரைகளைத் தம்மைப் போற்றிப் பின்பற்றிச் சூழ்ந்து நின்ற அன்பர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளி யுள்ளனர்.

### இராமாநுசரின் அருளுரைகள்

அவைகளெல்லாம் எத்தகைய சிறப்பும் பெருமையும் உடையனவோ, அத்தகைய முறையில் திருமால்நெறிப் பெரும் சான்றோராகிய இராமாநுசர், தாம் பரமபதத்துக்கு எழுந்தருளும் போது, அனைத்துயிர்களும் இறையருளைப் பெற்று உய்தி அடையும் பொருட்டு, தம்முடைய திருவடித் தொழும்பர்களாகிய முதலிகளுக்கு அறிவுறுத்திப் போந்த அருள் மொழிகளும் இணையற்ற பெருஞ் சிறப்பு உடையனவாகும்.

''ஒரு வைஷ்ணவனுக்குத் துவயத்தை ஒழிய மந்திரம் இல்லை; மிதுனம் ஒழிய வஸ்து இல்லை; கைங்கரியம் ஒழியப் புருஷார்த்தம் இல்லை, ஆசாரிய அபிமானம் ஒழிய மோட்ச உபாயம் இல்லை. பாகவத அபசாரம் ஒழிய மோட்ச விரோதம் இல்லை,, எனத் தம் திருவடியைச் சார்ந்த முதலிகளுக்கு, இராமாநுசர் தமது இறுதிக் காலத்தில் அருளிச் செய்தார் என்று **குரு பரம்பரைப் பிரபாவம்** என்னும் நூல் கூறுகின்றது.

'பிரபந்த அம்ருதம்' என்னும் பிறிதொரு நூல், இராமாநுசர் தமது திருவடி முதலிகளுக்குப் பின்வரும் 82 இனிய அருண்மொழிகளை உபதேசித்து அருளினர் எனச் சுவைமிகத் தொகுத்துக் கூறுகின்றது. இராமாநுசர் தம இறுதிக் காலத்தில் அருளிச் செய்த அவ் இனிய அறவுரைகள் மக்கள் உயிர்க்கு உறுதிபயக்கும் நலமுடையனவாகச் சிறந்து திகழ்கின்றன. இம்மைக்கும் மறுமைக்கும் நலம் பயக்கத்தக்க வகையில் விளங்கி, மக்கள் வையத்து வாழ் வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் அவ் அறவுரைகள் பின்வருவனவாகும்;

(1) இறைவனின் தொண்டினையும், அடியவர்களின் தொண்டினையும், ஆசிரியரின் தொண்டினையும், சமநிலையிற் கருதி மதித்தல் வேண்டும். (2) முன்னோர்கள் அருளிச் செய்த நூல்களில் நம்பிக்கை வைக்கவேண்டும். (3) ஒருபோதும் புலன்களுக்கு அடிமைப்பட்டு இருத்தல் ஆகாது. (4) சாதாரண நூல்களில் ஒருபோதும் பற்றுக் கொள்ளுதல் ஆகாது. (5) இறைவனைப்பற்றிக் கூறும் நூல்களில் நிலையான அன்பும், உறுதியும் கொள்ளுதல் வேண்டும். (6) தனது ஆசிரியர்களின் அருளால் ஞானோபதேசம் பெற்ற பின்னர், ஒரு பாகவதன் ஐம்புலங்களின் வழிச் செல்லுதல் கூடாது. (7) சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தையும் அளவாக நுகர்தல் வேண்டும். (8) மலர் சந்தனம் வெற்றிலை முதலிய நுகர்ச்சிப் பொருள்களில் ஆசையற்றிருத்தல் வேண்டும். (9) இறைவனின் திருப்பெயர்களிற்போல, அடியார்களின் திருப்பெயர்களிலும் மதிப்பும் விருப்பமும் கொள்ளுதல் வேண்டும். (10) சிறந்த அடியார்களாகிய நல்லோர் இணக்கமே வீடுபேற்றுக்கு வாயில் என்று தெளிந்து அவர்களின் திருவுள்ளம் மகிழும்படி நடந்துகொள்ளுதல் வேண்டும்.

(11) ஒருவன் எவ்வளவுதான் அறிவு உடையவனாயினும், இறைவனின் தொண்டினையும் ஆசிரியனின் தொண்டினையும் இகழ்ந்து, விருப்பு வெறுப்பு முதலியவைகளால் ஐம்புல நுகர்ச்சிகளில் ஈடுபடுவானாயின், அவன் அழிவு எய்துதல் திண்ணம். (12) வெறும் புற ஒழுக்கங்களும் ஆசாரங்களும் மட்டுமே பகவானை அடைவிக்கும் என்று நினைத்தல் ஆகாது. (13) ஸ்ரீவைஷ்ணவ ஒழுக்கங்களையே, வாழ்க்கையின் சிறந்த பயனாக மதித்தல் வேண்டும். (14) அடியார்களை ஒருபோதும் ஒருமையில் அழைத்தல் ஆகாது. (15) அடியார்களைக் காணும்போது, தாமே முதலில் கைகூப்ப வேண்டும். (16) இறைவன், ஆசிரியர், அடியார் ஆகியவரின் முன்னிலையில் கால்களை நீட்டலாகாது. (17) இறைவன் - ஆசிரியர் - அடியார் ஆகியோரின் திருமாளிகைகள் உள்ள திசையில் கால்களை நீட்டிக்கொண்டு படுத்தல் கூடாது. (18) துயில் விழித்து எழும்போது ஆசிரியர்களின் திருமரபை நினைத்துத் தியானம் செய்துகொண்டு எழுந்திருக்க வேண்டும்.

(19) இறைவன் சந்நிதியில் அடியார்கள் பலர் திரளாக இருக்கும்பொழுது, துவயம் என்னும் மந்திரத்தை நினைந்து கொண்டே, வீழ்ந்து வணங்குதல் வேண்டும். (20) ஸ்ரீவைஷ்ணவர்கள், இறைவன் - ஆசிரியர் - அடியார் ஆகியோரின் குணநலங்களைப் புகழ்ந்து ஈடுபட்டிருக்கும்போது, அவர்களைத் தானும் இயன்ற அளவு வழிபடுதலைவிட்டு, இடை நடுவில் எழுந்து போவது மிகவும் பெரிய குற்றமாகும்.

(21) வைஷ்ணவர்கள் எழுந்தருளினால், எதிரே சென்று வரவேற்று உபசரிக்கவும், அவர்கள் திரும்பிப் புறப்படுங்கால் பின் சென்று அவர்களின் திருவுருவம் கட்புலனுக்கு மறையும் வரையில் அஞ்சலியும் கையுமாய்க் கண்களிக்க நோக்கிக் கொண்டிருந்து பிறகு திரும்பவும் வேண்டும். (22) வைஷ்ணவர்களுக்கு அடிமைப்பட்டு ஆன்மாவை நற்கதி அடையச் செய்து கொள்ளாமல், வயிறு வளர்த்தற்காகச் சாதாரண மக்களின் பின்னே அவர்களைப் புகழ்ந்து போற்றிக்கொண்டு, அலைந்து திரிதலாகாது, (23) எம்பெருமானின் விமான கோபுரங்களைக் கண்ட மாத்திரத்தில் எழுந்து அஞ்சலி செய்ய வேண்டும். (24) பிற சமயத் தெய்வங்களின் விமானம் முதலியவற்றைக் கண்டால், மிக வியப்பாக நினைத்தல் கூடாது. (25) பிறசமயத் தெய்வங்கள் பற்றிய செய்திகளைக் கேட்டு மிக மகிழ்தல்கூடாது. (26) வைஷ்ணவர்கள் பகவத் பாகவத ஆசாரிய குணநலங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது அவற்றைக் கேட்டு மகிழ்ச்சியடையாமல், இடையில் குற்றங் குறைகளை எடுத்துக் கூறுதல் பெரும் பிழையாகும். (27) வைஷ்ணவர்களின் திருமேனி நிழலை மிதித்தல் கூடாது. (28) வைஷ்ணவர்கள்மீது, தம் நிழல்படும்படி நடத்தல் கூடாது. (29) அசுத்த மக்களைத் தொட்டு வைஷ்ணவர்களைத் தொடல் ஆகாது. (30) ஏழையான வைஷ்ணவன் நம்முன்னே தண்டனிட, அதை நாம் அசட்டை செய்தல் அபசாரம் ஆகும்.

(31) வைஷ்ணவர்கள் அடியேன் என்று முன்சொல்லி வணங்க, அவர்களைப் போற்றாமல் அசட்டை செய்தல் பெருங் குற்றமாகும். (32) யாரேனும் ஒரு ஸ்ரீவைஷ்ணவரின் குற்றங் குறைகளை நாம் அறிந்து கொள்ள நேர்ந்தாலும், அவற்றைப் பிறரிடம் சொல்லிக் கொண்டிராமல் அவருடைய நற்குணங்களை மட்டுமே நாம் நினைத்துப் பாராட்டி வருதல் வேண்டும். (33) பகவத் பாகவத ஆசாரியார்களின் திருவடித் தீர்த்தங்களைச் சாதாரணப் பொது மக்கள் பார்க்கும்படி பெறுதல் கூடாது. (34) தத்துவத்திரயம் இரகசியத்திரயம் என்பவற்றின் ஞானம் இல்லாதவர்களின் திருவடித் தீர்த்தத்தை ஒருபோதும் ஏற்றல் கூடாது. (35) ஞான அநுட்டானங்கள் நன்றாகவே உடைய வைஷ்ணவர்களின் திருவடித் தீர்த்தத்தை நாள்தோறும் ஏற்றல் வேண்டும். (36) பாகவதர்களுக்குத் தான் அடிமையென்று இராமல், தன்னை அவர்களுக்குச் சமமானவன் என்று எண்ணக் கூடாது. (37) விழிப்பின்மையால் சாதாரணக் கீழ் மக்களைத் தீண்ட நேர்ந்தால், அவ்வுடையோடு நீராடியே, பாகவதர்களின் திருவடித் தீர்த்தத்தை உட்கொள்ள வேண்டும். (38) ஞான பக்தி வைராக்கியங்கள் நிறைந்த பெருமக்

களைப் பெரிதும் சிறப்பாகப் போற்றி மதிக்க வேண்டும், (39) ஞானபக்தி வைராக்கியங்களில் சிறந்த திருமாலடியார்கள் திறத்தில், குலம் குணம் முதலியன பற்றிக் கருதாமல், அவர்களைப் பெருமதிப்பிற்கு உரியவர்களாக மதிக்க வேண்டும். (40) சாதாரண உலக மக்களின் இல்லங்களில், பெருமாள் தீர்த்தமாகிலும் ஏற்கலாகாது. (41) அத்தகையோர் இல்லங்களில் உள்ள பெருமாள் திருவுருவங்களையும் சேவிக்கத்தகாது.

(42) பெருமாள் உகந்தருளிய திவ்விய தேசங்களில், பொதுமக்களின் பார்வைபடுதலாகிய குற்றம் இல்லை. (43) இறைவன் சந்நிதியில் ஸ்ரீவைஷ்ணவர்கள் கொடுத்த பிரசாதத்தைத் தனக்கு அன்றைய தினம் விரதநாள் என்று கூறி மறுத்தலாகாது. (44) பகவத் பிரசாதத்தினை இன்னொருக்குக் கொடுத்து எஞ்சியது என்று மறுத்தலாகாது. (45) ஸ்ரீவைஷ்ணவர்கள் முன்னிலையில் தன்னுடைய பெருமைகளைச் சொல்லிக் கொள்ளக் கூடாது. (46) பாகவதர்களின் எதிரில் மற்றொரு பாகவதரை அசட்டை பண்ணுதல் கூடாது. (47) பாகவத குணானுபவத்தை நாள்தோறும் ஒரு கணமேனும் செய்யாமல், தன் வேலையை மாத்திரம் பார்த்துக்கொண்டிருத்தல் ஆகாது. (48) ஆசாரியரின் குணநலங்களை நாடோறும் ஒரு நாழிகையாவது புகழ்ந்து போற்றல் வேண்டும். (49) நாள்தோறும் ஒரு நாழிகையேனும் அன்புடனும் நம்பிக்கையுடனும் திருவாய்மொழி முதலான பிரபந்தங்களை ஓதி வருதல் வேண்டும். (50) வயிறு வளர்ப்பதிலேயே காலம் கழிக்கும் உலக மக்களோடு கூட்டுறவு கொள்ளுதல் கூடாது,

(51) ஸ்ரீவைஷ்ணவ சின்னங்களைத் தரித்துக்கொண்டு புலன்வழியே செல்லும் வஞ்சகர்களுடன் பழகுதல் ஆகாது. (52) எப்போதும் பிறர்மீது குற்றம் சொல்லிக்கொண்டே இருப்பவர்களோடு பேசுதலாகாது. (53) அத்தகையவர்பால் பேச நேர்ந்த குற்றத்தைப் போக்கிக் கொள்ள, ஸ்ரீவைஷ்ணவர்களோடு இடையறாது பழகி உரையாடுதல் வேண்டும். (54) ஆசாரியர்களையும் பாகவதர்களையும் நிந்திப்பவர்களைக் கண்ணெடுத்துப் பார்த்தலும் ஆகாது. (55) துவயத்தை அனுசந்திக்கும் பாகவதர்களோடு எப்பொழுதும் பழகி நட்புக் கொள்ளல் வேண்டும். (56) பிரபத்தி நெறியில் மூழ்கியிருக்கும் பாகவதர்களோடு இடையறாது தொடர்புகொண்டு பழக வேண்டும். (57) தத்துவத் திரயம், இரகசியத்திரயங்களில், முழுப் புலமை வாய்ந்த பெருமக்களுடன் பழகவேண்டும். (58) உலகியலிலேயே உழலுபவர்களின் தொடர்பைவிட்டு, பகவத் பக்தியிலேயே இருப்பவர்களோடு இடையறாது பேசியும் பழகியும் வரவேண்டும். (59) ஸ்ரீவைஷ்ணவர்கள் தன்னை அவமானப்படுத்தினாலும் அவர்களிடத்தில் பகைமை பாராட்டுதல் ஆகாது.

(60) பரமபதத்திற்குப் போக வேண்டும் என்ற எண்ணம் கொண்டால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாம் நன்மை செய்ய வேண்டும். (61) இறைவனுடைய கட்டளைக்கு மாறான செயல்களைச் செய்வதால் மிகப்பெரிய நன்மைகளை அடைவதாக இருந்தாலும், ஒரு சேதனன் அவற்றைச் செய்தலாகாது. (62) பெருமாளுக்கு நிவேதனம் ஆகாத பொருள்களை உண்ணுதல் கூடாது. (63) இறைவனிடம் பக்தியின்றிப் பொருள் ஈட்டுதல், இன்பம் நுகர்தல் ஆகியவற்றிலேயே உழலுபவர்களிடத்தில், எந்தப் பொருளையும் ஏற்கலாகாது. (64) புலால் முதலிய தாமச குணப்பொருள்களையும், சண்டாளர் மிலேச்சர் முதலியவர்களால் விரும்பப்படும் பொருள்களையும், அசுத்தமான பொருள்களையும், சிராத்தம் முதலியவற்றில் அளிக்கப்படும் பொருள்களையும், இறைவன்பால் அடைக்கலம் புகுந்த பிரபந்நர் புசித்தல் ஆகாது. (65) தனக்கு விருப்பமான பொருள்களையெல்லாம் இறைவனுக்கு நிவேதனம் செய்தல் கூடாது. (66) நூல்கள் உண்ணத் தகுந்தவை என்று கூறும் பொருள்களையெல்லாம் இறைவனுக்கு நிவேதநம் செய்தல் வேண்டும். (67) பகவானுக்குப் படைத்த உணவு நீர் சந்தனம் மலர் தாம்பூலம் ஆகியவற்றைப் பிரசாதம் என்று கருத வேண்டுமே தவிர, நாம் அனுபவிக்கத் தக்கவை என்று கருதுதலாகாது. (68) நூல்கள் விதிக்கும் கடமைகளையெல்லாம் இறைவனின் முக மலர்ச்சிக்காகச் செய்வதாக எண்ண வேண்டும். (69) பாகவதர்களிடத்தில் அபசாரப்படுவதைக் காட்டிலும், ஆத்மாவுக்குக்கேடு வேறுஎதுவும்இல்லை. மோட்சத்தை அடைவதற்குப் பாகவதர்களை உவகையுறச் செய்வதிலும் மேலான உபாயம் வேறு எதுவும் இல்லை.

(70) பாகவதர்களை வணங்கி வழிபடுவதைக் காட்டிலும், நாம் செய்யத் தக்கது வேறொன்றும் இல்லை; பாகவதர்களிடத்தில் துவேஷ புத்தி கொள்ளுவதைத் தவிர, ஆத்மா கெடுதற்கு வேறு காரணம் இல்லை, (71) இறைவனின் விக்கிரகமாக வழிபடப்பெறும் திருவுருவங்களைக் கல் மரம் என்றும், ஆசாரியனைச் சாதாரண மனிதன் என்றும், ஸ்ரீவைஷ்ணவர்களை இன்னசாதியார் என்றும், பகவத் பாகவதத் திருவடித் தீர்த்தத்தை வெறும் நீர் என்றும், இறைவனின் திருமந்திரத்தை எளிய சொற்கள் என்றும், திருமகள் கேள்வனை ஏனைய தெய்வங்களோடு ஒப்பு என்றும் நினைத்தல், நரகத்தை அடைய ஏதுவாகும். (72) இறைவனை மகிழ்விப்பதைவிட, அடியார்களை மகிழ்விப்பது சிறந்தது; இறைவன்பால் செய்யும் குற்றங்களை விட, அடியார்கள்பாற் செய்யும் குற்றம் மிகவும் கொடியது. (73)

பிரபந்நர்க்கு ஆன்ம ஈடேற்றம் இறைவனால் நிகழ்வது ஆதலால் அது நேராததற்குத் தான் வருந்துதலாகாது; வருந்துவானாயின், இறைவன்பால் தன் ஆன்மாவை ஒப்படைத்தது பொய்யாகும். (74) பிரபந்நனுடைய உடல் வாழ்க்கை, முன்செய்வினையின் பயனாக நிகழ்வது ஆதலால், அது குறித்துக் கவலையுறுதல் ஆகாது. கவலையுற்றால், கடவுளிடத்து விசுவாசம் இல்லாதவனாவான். (75) நீங்கள் செய்யும் கடமைகளை ஏதேனும் நன்மை கருதிச் செய்தலாகாது. இறைவனின் திருவுள்ளம் உவப்பதற்காகவே செய்ய வேண்டும்.

(76) ஸ்ரீபாஷ்யத்தைத் தக்க ஆசிரியரின்பால் கேட்டுத் தெளிந்து, உலகத்தில் பரவச் செய்ய வேண்டும். (77) அது முடியாவிட்டால், ஆழ்வார்களின் அருளிச் செயல்களை நன்கினிது கற்றுத்தேர்ந்து மாணவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். (78) அது முடியாவிட்டால், எம்பெருமான் உகந்தருளின திவ்விய தேசங்களில் திருவிமானம் திருமதில் திருமண்டபங்கள், திருஆராதனப் பாத்திரங்கள், திருவாபரணங்கள், திருப்பரிவட்டங்கள், திருத்தேர் முதலிய வாகனங்கள், திருவிழா, அமுதுபடி, சாத்துபடி, திருநந்தவனம், திருமாலை, திருவிளக்கு முதலிய தொண்டுகளில் இயன்றதைச் செய்ய வேண்டும். (79) இதுவும் செய்ய இயலாவிட்டால், நமக்கு மிகவும் விருப்பமான திருநாராயணபுரத்தில் ஒரு கூரை வீடாகிலும் கட்டிக் கொண்டு, வாசம் பண்ணுங்கள். (80) இதுவும் இயலாவிட்டால், பொருள் உணர்ந்து துவயத்தை இடையறாது அநுசந்தித்துக் கொண்டு இருப்பிடத்திலேயே இருங்கள். (81) இதற்கும் இயலாவிட்டால், ஞான பக்தி வைராக்கியம் முதலான நற்குணங்கள் நிறைந்தவராய், நம்மைச் சேர்ந்தவர்கள் என்கிற நினைவுள்ள மகாத்மாக்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடன் சேர்ந்து, அகங்காரத்தை விட்டு, அவர்களின் கட்டளைப்படி பணிந்து நடந்து கொண்டிருங்கள். இதுவேதான் கடைசி உபாயம். இதைவிட வேறு உபாயமில்லை.


(82) இவ்வாறு உய்தி பெறுதற்குரிய அன்பர்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆகிய அநுகூலர், பகவத் விரோதிகளாகிய பிரதிகூலர், உலகியல் வாழ்க்கையிலேயே ஊன்றியுள்ளவர்களாகிய அநுபயர் என்னும் மூவர் திறத்திலும், முன் எச்சரிக்கையாக ஆராய்ந்து நடந்து கொள்ள வேண்டிய முறைகள் மூன்று உண்டு. அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்களைச் சேவிக்கும்போது சந்தனம் புஷ்பம் தாம்பூலம் முதலானவைகளைப் பார்த்தாற் போலவும், விருப்பமான நற்பொருள்களைக் கண்டாற் போலவும், நடந்து கொள்ள வேண்டும்; பிரதிகூலமான பகவத் விரோதிகளைக் கண்டால், நெருப்பு பாம்பு முதலியவைகளைக் கண்டாற் போல அஞ்ச வேண்டும்; அநுபயரான உலகமக்களைக் கண்டபோது, விறகையும், மண்ணையும் கண்டாற் போல அசட்டை செய்ய வேண்டும்.

ஒருகாற் பிரதிகூலர்கள் அநுகூலர்களானால், இரக்கமுற்று அவர்களை இனிது போற்ற வேண்டும். இவ்வாறன்றிப் பொருள் முதலியவற்றின் மீதுள்ள ஆசையினால் பிரதிகூலர் ஆன பகவத் விரோதிகளைப் போற்றினால், ஒரு ஒரு பேரரசனின் மனைவி நீசனிடத்தில் பிச்சை ஏற்றால், அப்பேரரசனுக்குப் பழியும் சீற்றமும் உண்டாகுமாறு போல, இறைவனின் திருவுள்ளம் நொந்துவிடும். பொருள் மீதும் இன்ப நுகர்ச்சிகளின் மீதும் கொண்ட ஆசையால், அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டு வணங்காமலும், ஆதரிக்காமலும் இருந்தால், பேரரசரின் முன்பு அவனது அருமைப் புதல்வனை அவமதிப்புச் செய்தவன் தண்டிக்கப்படுவதைப் போல, இறைவனின் திருவுள்ளம் கலங்கிவிடும். உலக மக்களாகிய அநுபயரை விரும்பி ஆதரித்தால். அது பெருஞ்சுடர் மணிக்கும் வெறும்கல்லுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை அறியாமை போன்ற குற்றமாகும். இதனால் நன்மை எதுவும் எய்துதல் இயலாது.

## முடிவுரை:

இராமானுசர் அருளிச் செய்த இனிய அருள் மொழிகளாகப் 'பிரபந்நாமிருதம்' என்னும் நூல் கூறுகின்ற இவ் வெண்பத்திரண்டு திருவார்த்தைகளின் அருமை பெருமைகளை, அன்பர்கள் அனைவரும் அறிந்து பெரிதும் போற்றிக் கடைப்பிடித்து ஒழுகி, நலம் பலவும் எய்த முயலுவார்களாக!!

—ஆசிரியர்.



# இராமாநுசர் மாட்சி*

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

சேமநல் வீடும் பொருளும்
தருமமும். சீரியநற்
காமமும் என்றிவை நான்கென்பர் ;
நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம்; அறம்பொருள்
வீடிதற் கென்றுரைத்தான்
வாமனன் சீலன், இராமாநுசன்
இந்த மண்மிசையே

—திருவரங்கத்தமுதனார்

## முன்னுரை:

வைணவ சமயத்தின் ஆசாரியப் பெருமக்களில் மிகவும் தலைசிறந்த ஒருவராகத் திகழ்பவர், இராமாநுசர் ஆவார். இவ் இருள் தரும் மாஞாலத்தைத் தெருள்தரு மாஞாலமாகச் செய்தருள்வதற்குத் திருவவதரித்தவர் அவர். 'கலியுப் கெடும் கண்டு கொண்மின்' என்ற ஆழ்வார் பாசுரத்தை மெய்ப்பித்தற்காகவே தோன்றியருளிய சான்றோர் **இராமாநுசர்** எனலாம். திருவாய்மொழி ஆயிரத்தையும் ஈன்றளித்த முதல்தாய் நம்மாழ்வார் என்றால், அவற்றை உலகிற் பரப்பி வளர்த்துச் செழிப்பித்த **இதத்தாய்**, இராமாநுசரே எனப் பெரியோர்கள் போற்றியுள்ளனர். வைணவ சமய வரலாற்றில், இவருக்குப் பெரிதும் சிறப்பும் முதன்மையும் கொடுக்கப்பெற்றுள்ளன. இவருக்கு முன்னர் 'பரம வைதிக சித்தாந்தம்' எனவே வழங்கப் பெற்று வந்த வைணவப் பெருஞ்சமயமானது, இவருக்குப் பின்னர் ''எம்பெருமானுர் தரிசனம்'' என்னும் சிறப்புப்பெயர் இட்டு வழங்கப் பெறுவதாயிற்று. எனின், இவர்தம் அருமை பெருமைகளை யாவரும்கருதி இனிதுணரலாம்.

## அவதாரம்

இராமாநுசரைத் திருவனந்தாழ்வான் (ஆதிசேடன்) அவதாரம் என்றும், விஷ்வக்சேனர் அவதாரம் என்றும், பெரியோர்கள் சிறப்பித்துக் கூறுவர்.

''அடையார் கமலத் தலர்மகள்
கேள்வன்கை ஆழிஎன்னும்
படையோடு நாந்தக மும்படர்
தண்டும்ஒண் சார்ங்கவில்லும்
புடையார் புரிசங் கமும்இந்தப்
பூதலம் காப்பதற்கென்
றிடையே இராமா நுசமுனி
ஆயின இந்நிலத்தே''

எனவரும் பாடலால், திருவரங்கத்தமுதனார் இவரைத் திருமாலின் திருக்கைகளில் உள்ள ஐம்படைகளின் அவதாரமாகச் சிறப்பித்துப் பாடிப் போற்றியுள்ளார்.

## பெரும்பூதூர்:

ஆளவந்தார் திருவடிகளில் ஈடுபட்டிருந்த முதலிகளில் பெரிய திருமலை நம்பிகள் என்பவர் ஒருவர். அவர் திருமலையில் திருவேங்கடமுடையானுக்குத் தொண்டு செய்துகொண்டு வாழ்ந்து வந்தவர். அவருக்குச் சகோதரிகள் இருவர் இருந்தனர். அவருள் மூத்தவளாகிய **பூமிப்பிராட்டியார்** என்பவர், பெரும்பூதூரில் **ஆசூரி கேசவப்பெருமாள்** என்பவரை மணந்து வாழ்ந்து வந்தார். இளையவளாகிய பெரிய பிராட்டியார், மழலைமங்கலம் என்னும் ஊரில் இருந்த கமலநயனபட்டர் என்பவரை மணந்து இல்லறம் நடத்தி வந்தார்.

## அவதார நாள்:

தொண்டை நாட்டைச் சேர்ந்த பெரும்பூதூரில் ஆசூரி கேசவப்பெருமாள் என்னும் தந்தையாருக்கும், பூமிப்பிராட்டியார் என்னும் தாயாருக்கும், சாலிவாகனசகம் 939-ல் பிங்கள ஆண்டு சித்திரைத் திங்கள், வளர்பிறைப் பஞ்சமிதிதி, திருவாதிரை நாள் கூடிய நல்லோரையில், இராமாநுசர் தோன்றியருளினர்.

''சங்கர பாஸ்கர யாதவ பாட்ட
பிரபாகரர் தங்கள் மதம்
சாய்வுற வாதியர் மாய்குவர் என்று
சதுமறை வாழ்ந்திடும் நாள்!
வெங்கலி இங்கினி வீறுநமக் கிலை
என்று மிகத் தளர்நாள்!
மேதினி நம்சுமை ஆறும் எனத்துயர்
விட்டு விளங்கிய நாள்!

* எம்பெருமானுர் என்னும் **இராமாநுசர்** திருவவதரித்த தலத்தில், 15-8-73 முதல் 19-8-73 வரை நடைபெற்ற ''**அதிசாந்தி**'' என்னும் பெருவேள்வியை முன்னிட்டு, இக் கட்டுரை வெளியிடப் பெறுகின்றது.
— ஆசிரியர்.

**மங்கையர் ஆளி பராங்குச முன்னவர்**
**வாழ்வு முளைத்திடு நாள்!**
**மன்னிய தென் அரங் காபுரி மாமலை**
**மற்றும் உவந்திடும் நாள்**
**செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளும்**
**சிறந்த பெரும் பூதூர்ச்**
**சீமான் இளையாழ்வார் வந்தருளிய நாள்**
**திருவாதிரை நாளே!''**

என இராமாநுசர் திருவவதாரம் செய்தருளிய நாளின் சிறப்பை 'வித்வத் சிகாமணி' ஆகிய மணவாள மாமுனிகள், புகழ்ந்து பாடிப் போற்றியிருத்தல் காணலாம்.

### நாமகரணம்

பெரிய திருமலை நம்பிகள், தமது சகோதரி யார்க்கு மகப்பேறு வாய்த்த செய்தியினைச் செவிமடுத்துப் பூரிப்பு எய்தித் திருமலையினின் றும் பெரும்பூதூர்க்கு எழுந்தருளிப்போந்து, குழந்தையின் திருமுகத்திற் பொலியும் தெய் வீக ஒளியைக் கண்டு அகமும் முகமும் மலர்ந்து இளையாழ்வார் (இராமாநுசன்) என்னும் திருப் பெயரிட்டு, வாழ்த்திச் சென்றனர். அக் குழந்தை முறையே வளர்ந்து கல்வி பயின்று எல்லாக் கலைகளிலும் இணையற்ற தேர்ச்சி பெற்று, 'சொல்லார் தமிழ் ஒரு மூன்றும்; சுருதிகள் நான்கும்; எல்லையில்லா அறநெறி யாவும் தெரிந்தவன்' எனும்படி விளங்கு வதாயிற்று.

எனினும் 'குருவருளின்றித் திருவருள் இல்லை' என்பர் ஆதலின், கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர்க்கு அணித்தேயுள்ள **திருப்புட் குழி** என்னும் தலத்தில் இருந்த, யாதவப்பிர காசர் என்னும் வேதாந்த ஆசிரியரை அடுத்து இராமாநுசர் சில காலம் வேதாந்த சாத்திரங் களைக் கேட்டு வந்தார். மழலை மங்கலத்திற் கமல நயனபட்டர் என்பவரை மணந்து வாழ்ந்து வந்த பெரிய பிராட்டியார் என்னும் இவர் தம் சிற்றன்னையின் புதல்வர் **கோவிந்த பட்டர்** என்பவரும், இவரோடு ஒருங்கு சேர்ந்து யாதவப் பிரகாசரிடம் வேதாந்த நூல்களை ஓதி வந்தார்.

### யாதவப் பிரகாசர்

யாதவப் பிரகாசர் மாயாவாத மதத்தைச் சேர்ந்த கொள்கையை உடையவர். ஆதலின் ''சத்யம் ஞானம் அநந்தம் பிரம்மம்'' என்பன போன்ற வேதாந்தச் சொற்றொடர்களுக்குத் தமது மதத்திற்கு ஏற்பப் பொருந்தாத வகை களில் பொருள்கூறி வரும் வழக்கம் உடைய வராக இருந்தார். அதனைப் பொறுக்க லாற்றாத இராமாநுசர் இடையிடையே உண் மைப் பொருள்களைக்கூறி, இங்ஙனம் இருக்க லாகாதோ எனப் பணிவுடன் வினவுவார். அதனால் யாதவப்பிரகாசருக்கு இவர்பால் படிப்படியே அருவருப்பும் அழுக்காறும் தோன்றலாயின.

ஒரு நாள் யாதவப் பிரகாசர், ''தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணி'' என்வரும் வேத வாக்கியம் ஒன்றுக்கு, ''இறைவன் குரங் கின் பின்புறம் போன்ற சிவந்த கண்களை உடையவன்'' என்று பொருள் கூறினார். அது கேட்டு இராமாநுசர் அளவற்ற துக்கம் அடைந்தார். திருமகள் நாதனின் சிறந்த கண்களுக்கு உவமையாக, மிகவும் இழிந்த குரங்கின் பின்புறத்தையோ கூறுவது? இது பெரும் அபசாரமல்லவா?என்று கருதிச் சிந்தை மிக நொந்தார். அதற்கு ''இறைவன் சூரி யனைக்கண்டு மலரும் செந்தாமரை மலரைப் போன்ற, அழகிய சிவந்த கண்களை உடைய வன்'' என்பதே உரிய பொருத்தமான பொரு ளாகும் அன்றோ! எனப் பணிவுடன் கூறினார். யாதவப் பிரகாசர் அதனைக் கேட்டுச் சினமும் அழுக்காறும் கொண்டார். அதனால் இருவரும் பிரிய நேர்ந்தது.

### திருக்கச்சி நம்பிகள்

பின்னர்த் தன் தாயாரின் கருத்தின்படி, இராமாநுசர் காஞ்சியில் இருந்த திருக்கச்சி நம்பி என்பவரை அடைந்து, அவர்பாற் பக்தி யுடன் பழகி ஒழுகி வந்தார். அவர் பணித்த படி சாலைக் கிணற்றினின்று நீர் கொணர்ந்து, நாடோறும் தேவப் பெருமாளுக்குக் கொடுத் துப் பணிவிடைகள் செய்து வந்தார்.

இராமாநுசரின் திருவுள்ளத்தில் சில நினைவு கள் ஐயப் பொருளாக நிலவிவந்தன. அவற் றைப் பற்றிப் பெருமாளின் திருவுள்ளக் கருத்து யாது? என்று அறிய அவர் விரும்பினார். பெருமாளிடம் தம் ஐயப்பாடுகளை விண்ணப் பித்து, அவற்றுக்குரிய விடைகளை அவர்பால் அறிந்து வரும்படி, இராமாநுசர் திருக்கச்சி நம்பிகளை வேண்டிக் கொண்டார். நம்பிகளும் அதற்கு இசைந்து, பெருமாளிடம் இராமா நுசர் கேட்டறிய விரும்பிய வினாக்களைக் கூறி னார். அதற்குப் பெருமாள் கூறிய மறு மாற் றத்தினை அறிந்து வந்து, திருக்கச்சி நம்பிகள் இராமாநுசருக்குப் பின்வரும் ஆறு வார்த்தை களாகக் கூறினார்.

(1) பரதத்துவப் பொருள் யானே.

(2) சித்து அசித்து ஈசுவர பேதமே தரிசனம்.

(3) உபாயம் பிரபத்தியே.

(4) யாக்கையின் முடிவில் என்னை நினைத் தல் வேண்டுமென்பதில்லை.

(5) யாக்கையின் முடிவில் வீடுபேறு;

(6) இளையாழ்வான் பெரிய நம்பியின் திரு வடியைப் பற்றக் கடவன்.

என்பனவே அவையாகும்.

**ஆளவந்தார் :**

இராமாநுசர் இவ்வாறு காஞ்சியில் இருந்து வருங்கால், திருவரங்கத்தில் இருந்த ஆளவந்தார், திருமேனி நோவு சாத்திச் 'சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான்: இனி உனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே' எனும்படி யான நிலைமையை எய்தியிருந்தார். அதனால் அவர் தமக்குப் பின் வைணவ தரிசனத்தை வளர்த்துப் பரப்புதற்குரிய 'ஆம் முதல்வன் இவன்' என்று முன்னரே தாம் தம் திருவுள்ளத்தில் ஆய்ந்து தேர்ந்து வைத்திருந்த இராமாநுசரை அழைத்து வரும்படி பெரிய நம்பிகளைத் ருவரங்கத்தினின்று காஞ்சிக்கு அனுப்பி வைத்தார்.

இராமாநுசரை அழைத்துக் கொண்டு திரும்பும் முன்னரே ஆளவந்தார் திருநாடு அலங்கரித்து விட்டார். அவரைத் திருக்கரம் பன்துறையில், திருப்பள்ளிபடுத்த ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அந்நிலையிற் சென்று சேர்ந்த இராமாநுசர், மிகவும் மனம் வருந்தினர். ஆளவந்தாரின் திருமேனியை அடி முதல் முடிகாறும் நோக்கித் தொழுதார். அப்போது அவர் தம் திருக்கையில் மூன்று திரு விரல்கள் முடங்கியிருக்கக் கண்டார். ஆளவந்தார் திருவுள்ளம் விரும்பியபடி,

(1) பிரம்ம சூத்திரத்திற்கு விசிட்டாத்வைத மதக் கொள்கையின்படி சிறந்ததொரு பேருரை இயற்றுதல்.

(2) நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கு நயம் செறிந்த நல்ல விரிவுரை ஒன்று வகுத்தல்.

(3) வியாசர் பராசரர் எனும் முனிவர்கள் திறத்தில் செய்ந்நன்றி உணர்வு என்றும் நின்று நிலவி வரத்தக்க முறையில் ஏதேனும் ஒரு நற்செயல் புரிதல்.

ஆகிய மூன்றையும் தாம் செய்து முடிப்பதாக இராமாநுசர் அனைவரும் அறிய உறுதி கூறினர். அதுகேட்டு, ஆளவந்தாரின் முடங்கிய விரல்கள் மூன்றும் நிமிர்ந்தன. யாவரும் கண்டு மகிழ்ந்தனர்.

**பெரிய நம்பிகள்**

பின்னர் இராமாநுசர் காஞ்சிபுரத்துக்கு மீண்டும் வந்து, சிலகாலம் தேவப் பெருமாள் தொண்டில் ஈடுபட்டு வந்தார். பெரிய நம்பிகளை அவர் மதுராந்தகத் தலத்தில், ஏரிகாத்த இராமபிரான் சந்நிதியில் சந்திக்க நேர்ந்தது. அப்போது அங்கே,

(1) சங்கு சக்கர இலச்சினைகளைத் தோள்களில் தரித்தல்.

(2) நெற்றியில் திருமண் அணிதல்.

(3) அடியவர் என்பதற்குரிய பெயர் தரித்தல்.

(4) திருமந்திரத்தை உச்சரித்தல்.

(5) திருமகள் நாதனை ஆராதித்தல்.

ஆகிய பஞ்ச சம்ஸ்காரங்களையும், பெரி நம்பிகள்பால் இராமாநுசர் பெற்று மகிழ்ந்தார்.

**எதிராசர்:**

இராமாநுசர், பெரிய நம்பிகளைக் காஞ்சிபுரத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து, தம்முடைய திருமாளிகையில் அவர் தமது குடும்பத்தினருடன் வாழ இடம் அளித்து, அவருடைய தளிகைக்கு வேண்டும் பொருள்களையும் அவ்வப்போது பெருக வழங்கி, அவர்பால் நுண்பொருள்கள் பலவும் கேட்டுணர்ந்து இன்புற்று வாழ்ந்தார். அந்நிலையில் அவருக்குத் தமது இல்லற வாழ்வில் நாளடைவே உவப்பு ஏற்படலாயிற்று. தஞ்சமாம்பாள் என்னும் தமது தேவியாரிடத்தில், அவர் மூன்று குற்றங்கள் நிகழக் கண்டார்.

(1) திருக்கச்சி நம்பிகள் பக்கலில் தமது திருவுள்ளத்திற்கு மாறாக நடந்து கொண்டமை. (2) ஒரு நாள் திருமால் அடியவர் ஒருவருக்கு உணவு அளிக்கும்படி தாம் நியமிக்க, அகத்தில் உணவு இருந்தும் இல்லை என்று பொய்கூறி மறுத் தொழித்தமை. (3) தமது ஆசாரியராகிய பெரியநம்பிகளின் திருத்தேவியாரோடு மாறுடிப் பூசலிட்டுப் பிணங்கியமை.

இம் மூன்று குற்றங்கள் கண்டு வெறுப்புற்ற இராமாநுசர் தம் இல்லற வாழ்வை நீத்துத் துறவற நெறியை மேற்கொண்டார். அதனால் அவருக்கு **இராமாநுச முனி** என்றும், **எதிராசர்** என்றும் பெயர்கள் வழங்கப்படலாயின. முதலியாண்டான், கூரத்தாழ்வான், ஆகியோர் இவர்பால் மாணவராக வந்தடைந்தனர். கங்கை நீராடுங்கால் தம் உள்ளங்கையில் சிவலிங்கம் கிடைக்கப்பெற்றதனால் 'உள்ளங்கை கொணர்ந்த நாயனார்' என்னும் சிறப்புப் பெயர் பெற்று, திருக்காளத்தியில் சிவனடியாராக விளங்கியிருந்த **கோவிந்தபட்டர்** 'தேவன் எம்பெருமானுக்கு அல்லால் பூவும் பூசனையும் தகுமே' என்னும் பாசுரத்துககுத் திருமலை நம்பிகள் நிகழ்த்திய விரிவுரைகளைக் கேட்டு மனம் மாறினர்; வைணவர் ஆகித் திருமலைநம்பிகள் மூலம், இவர்பால் வந்து அடைந்தார். இக்கோவிந்தபட்டரே **எமபார்** எனப் புகழ்ந்து ஓதப் பெறுபவராவார். முன்னர் இவருக்குக் குருவாக விளங்கிய யாதவப்

பிரகாசரும், மனம் மாறிப் பின்னர் இவர் பக்கலில், மாணவராக வந்து அடைந்து உய்ந்தார்.

### உடையவர்

திருவரங்கப் பெருமாள் அரையர் என்பவர், திருவரங்கத்தினின்று காஞ்சிக்கு வந்து திவ்வியப் பிரபந்தப் பாடல்களை இன்னிசையுடன் பாடித் தேவப் பெருமாளை மகிழ்வித்து, அவர்தம் இசைவும் ஆசியும் பெற்று, இராமாநுசரைத் திருவரங்கத்திற்கு அழைத்துக்கொண்டு போய்ச் சேர்த்தார். பெரிய பெருமாள் தமது திருப்பொலிந்த சேவடியை இவர்தம் சென்னிமேல் பொறித்து 'உபய விபூதிச் செல்வத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்தோம். இனி நம்முடைய கோவிலைத் திருத்திப் பணிகொள்ளக் கடவீர்' என்று பணித்தருளினர். அன்றுமுதலாக இவர்க்கு உடையவர் என்னும் சிறப்பியற் பெயர் வழங்கத் தலைப்பட்டது. ''தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே'' என்றபடி, நாள்விழா பட்சவிழா-மாதவிழா என்னும் பலதிற விழாக்களும் செவ்விதில் நிகழும்படி, இராமாநுசர் அனைத்தும் ஆராய்ந்தருளி அரிய ஏற்பாடுகள் பலவும் செய்து வைத்தார்.

### எம்பெருமானர்

திருக்கோட்டியூர் நம்பிகள் பக்கல், 18 முறை திருவரங்கத்தினின்று விடாது சென்று, திருவெட்டெழுத்து மந்திரத்தையும், சரம சுலோகத்தின் நுண்பொருள் நலங்களையும், செவியறிவுறுக்கப் பெற்ருர். பிறர் எவர்க்கும் தெரிவித்தலாகாது என அவர் வற்புறுத்திச் சூள் கொண்டிருந்தும், இராமாநுசர் அவற்றைத் தம் மனத்திற்குள்ளேயே பொதிந்து வைத்துக் கொண்டிருக்க மாட்டாதவராய், தம்முடைய பெருங்கருணைத் திறத்தினுல், மறுநாளில் அவ்வூர்ப் பெருமாள் கோயிலில் ஆர்வலரான பல திருமால் அடியார்களைப் பெருந் திரளாகக் கூட்டி, அரிய பெரிய அம்மறைநுண் பொருள்களை எல்லாம், அவர்கள் அனைவருக்கும் வெளிப்படையாக எடுத்துக் கூறி உபதேசம் செய்து உவகையுற்ருர்.

திருக்கோட்டியூர் நம்பிகள் இச் செய்தியைக் கேட்டு, இராமாநுசரை அழைப்பித்து, இங்ஙனம் செய்தது முறையோ? இதன் விளைவு என்னுகும் என்று நீர் அறியீரோ? என வினவினர். ''ஆசிரியரின் கட்டளையைப் புறக்கணித்தால் எரிவாய் நிரயமே எய்த நேரும் என்று அறிவேன். அடியேன் ஒருவன் நிரயம் புக நேரினும், தேவரீர் திருவருளால் இவ்வுயிர்த் திரள்கள்யாவும் உய்தி பெற்று ஈடேறக்கூடுமே என்ற கருத்தினுல், இவ்வாறு செய்யத் துணிந்தேன். பிழை பொறுத்தருள்க'' எனக் கூறிப் பணிந்து நின்ருர்.

திருக்கோட்டியூர் நம்பிகள், அது கேட்டுத் தம் உள்ளம் நெகிழ்ந்தார். இத்தகைய பரந்த பெருங்கருணைத் திருவுள்ளம் நமக்கு வாய்த்திலதே! இவர் தம் இனிய இரக்க இயல்பு இருந்தவாறு என்னே!'' என்று எண்ணி வியந்தார். அம்மகிழ்ச்சிப் பெருக்கால் இராமாநுசருக்கு ''எம்பெருமானர்'' (எமக்கெல்லார்க்கும் தலைவர்) என்ற சிறப்புப் பெயரை வழங்கி மகிழ்ந்தார். பரமவைதிக சித்தாந்தம் என வழங்கி வந்த வைணவ சமயம், இனி ''எம்பெருமானர் தரிசனம்'' என்றே வழங்கக் கடவதாக! என்றும் பணித்தருளினர்.

''இராமாநுசர் ஏழை எளிய மக்கள்பாற் பெரிதும் பரிவு கூர்ந்தார். சமுதாய வாழ்வில் அவர்களைக் கைதூக்கி உயர்த்திவிடப் பெரிதும் பணிபுரிந்தார். பழையனவாய் இருந்த பல சடங்குகளின் மாசுகளைக் களைந்து தூய்மை செய்தார். புதிய சிறந்த நல்ல சடங்குகளையும் முறைகளையும் வகுத்தார். இறை வழிபாட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். அந்தணர்கள் முதல் அரிசனர் வரை, அனைவருக்கும் ஆன்மீக வாழ்வின் நலங்கள் கிடைக்கும்படி வாயில்களைத் திறந்து வைத்தார். அவர்தம் பரந்து விரிந்த அருளுள்ளம் பெரிதும் வியந்து போற்றி வணங்குதற்கு உரியது...*'' என்று, இராமாநுசரின் பெருங் கருணை மிக்க திருவுள்ளத் திறனின் சிறப்பினை மிகவும் வியந்து விவேகானந்த சுவாமிகள் அவர்கள் புகழ்ந்து போற்றியுள்ளதும், ஈண்டு நாம் அறிந்து இன்புறுதற்கு உரியது;*

### அருளாளப்பெருமாள் எம்பெருமானர்

ஒரு சமயம் அத்துவித மதத்துறவி ஆகிய யக்ஞ மூர்த்தி என்பவர் ஒருவர், திருவரங்கத்திற்கு வந்து இராமாநுசரை வாதப்போருக்கு அழைத்தார். இருவருக்கும் இடையே 16 நாட்கள் வாதப்போர் நிகழ்ந்தது. 17ஆம் நாள் யக்ஞமூர்த்தி வாதப்போரில் தோல்வியுற்ருர். 'தோற்றவர் வென்றவர் மதத்தைத் தழுவுவது' என்று முதலில் வரையறுத்துக் கொண்ட நிபந்தனையின்படி, இராமாநுசர் அவரை முப்புரி நூலுடன் சிகையும் முக்கோ

---

* "Sankara with his great intellect had not, I am afraid, as great a heart; Ramanuja's heart was greater. He felt for the down-trodden; he sympathised with them. He took up the ceremenies, the accretions that had gathered, made them pure as far as could be, and instituted new ceremonies, new methods of worship for the people, who absolutely required these. At the same time he opened the door to the highest spiritual worship from the Brahmin to the Pariah"

—SwamyVIVEKANANDA

லும் தரிக்கச்செய்து, வைணவராக்கி 'அருளாளப்பெருமாள் எம்பெருமானுர்' எனவும் பெயரைத் தந்து மாணவராக ஏற்றுக்கொண்டார். அவர் ஞானசாரம், பிரமேயசாரம் என்னும் இரு நூல்களை இயற்றியுள்ளார். தம்மை வந்தடைந்த.

(1) அநந்தாழ்வான்
(2) எச்சான்
(3) தொண்டனூர் நம்பி
(4) மருதூர் நம்பி

என்னும் நால்வருக்கும் இராமாநுசரின் கட்டளைப்படி திருவிலச்சினை திருமந்திரம் முதலிய ஐந்தினையும் அருளி, ''குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினாற்போல, உடையவர் எனக்கு உம்மை ஆசாரியனாகப் பணித்தனராயினும், நீங்கள் எம்பெருமானுர் திருவடிகளே தஞ்சம் என்று இருக்கக் கடவீர்கள்'' என்று அருளிச் செய்தார்.

### கூரத்தாழ்வார் :

இராமாநுசரின் காலத்தில் வாழ்ந்திருந்த சோழ அரசன் ஒருவன், சிவபரத்துவம் நிறுவுவதில் மிகவும் நாட்டம் கொண்டவனாக இருந்தான். சிவத்தைக் காட்டிலும் மேலான பொருளில்லை, என்னும் கருத்தமைய வடமொழியில் 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்று எழுதி யாவரிடத்தும் அதனை இசைந்து கையெழுத்திடுமாறு வற்புறுத்தி வந்தான். நாலூரான் என்னும் அமைச்சன் ஒருவன் கூறியபடி, இராமாநுசரை அழைத்து அதிற் கையெழுத்திடுமாறு அவரை வற்புறுத்த நினைத்தான். இராமாநுசரின் கோலத்தில் கூரத்தாழ்வார், அவ்வரசனின் அவைக்குச் சென்று, சிவம் என்னும் சொல்லுக்குக் குறுணி (நான்குபடி) என்னும் பொருளும் உண்டாகலின், குறுணி என்னும் முகத்தல் அளவைக்கு மேல் பதக்கு என்னும் முகத்தல் அளவை உண்டு என்னும் கருத்தமைந்த ''த்ரோணம் அஸ்தி தத: பரம்'' என்னும் வாக்கியத்தினை எழுதி வைத்தார். அதுகண்ட அரசன் மிகவும் சினந்து அவர்தம் கண்களைப் பறித்து எறியக் கட்டளையிட்டான், ''தர்சனம் (சமயம்) காக்கத் தர்சனம் (கண்கள்) கொடுக்கப் பெற்றோமே'' என்று மகிழ்ந்து, கூரத்தாழ்வார் தாமே தம் கண்களைப் பறித்தெறிந்து திரும்பினார். அந்நிலையிற் சோழ அரசனின் கொடிய மனநிலையை அறிந்து, யாது இடர் நேருமோ என்று அன்பர்கள் பலரும் வேண்டிக் கொண்டபடி, இராமாநுசர் திருவரங்கத்தைவிட்டு அகன்று, மலை நாட்டுக்கு எழுந்தருளுவாராயினர்.

### திருநாராயணபுரம் :

வழியில் அவர் 'நல்லான் சக்கரவர்த்தி' என்பவரால் ஆட்கொள்ளப் பெற்ற வேடமுதலிகளால் உபசரிக்கப்பெற்று, மிதுளாபுரி சாளக்கிராமம் என்னும் பதிகளைக் கடந்து, தொண்டனூர் என்னும் பதியை அடைந்தார். அங்கேயிருந்த 'விட்டலதேவராயன்' என்னும் அரசனின் மகளைப் பற்றியிருந்த பேயைத் துரத்தி அருள் புரிந்தார். அதனால் சமணனாக இருந்த அவ்வரசன் ''விஷ்ணு வர்த்தன தேவராயன்'' என்னும் பெயரை ஏற்று வைணவனாக மாறினான். அவ்வரசனின் உதவியால் திருநாராயணபுரத்தில் புற்றினால் மூடுண்டு மறைந்து கிடந்த பெருமாளை வெளிப்படுத்தி, சாலிவாகன சகம் 1012, வெகுதானிய ஆண்டு தைத்திங்கள் வளர்பிறைச் சதுர்த்தியில் புனர்பூச நன்னாளில் அவரைத் தரிசித்து மகிழ்ந்தார். டெல்லியை ஆண்டுவந்த முகம்மதிய அரசன் ஒருவன், கைப்பற்றிச் சென்றிருந்த இராமப்பிரியர் என்னும் உற்சவ பேரத்தினை மீட்டுக் கொணர்ந்து நிறுவினார். திருநாராயணபுரத்தில் தாம் எடுப்பித்த கோயிலை, ஞான ஒழுக்கங்கள் அமைந்து தம்மால் ஆட்கொள்ளப்பட்ட 'ஐம்பத்திருவர் முதலிகள்' என்பவர்கள்பால் ஒப்படைத்தார். அங்கு இராமாநுசர் 12 ஆண்டுகள் தங்கியிருந்தனர் என்பர்.

இந்நிலையில் முன்னர்த் தமக்கும் கூரத்தாழ்வானுக்கும் கேடு சூழ்ந்த சோழ மன்னன், கண்டமாலை என்னும் நோயுற்றுக் கழுத்தில் புழுநெளியப் புண்கள் ஏற்பட்டு வருந்திக் 'கிருமி கண்ட சோழன்' என்னும் பழிப்பெயர் பூண்டு, மாய்ந் தொழிந்தான். அதனால் பண்டேபோல் நல்ல சூழ்நிலை நிலவுதல் அறிந்து, இராமாநுசர் திருவரங்கத்திற்கு மீண்டும் திரும்பிப் போந்தார். அங்கே திருவரங்கனுக்குப் பல கைங்கரியங்களைச் செய்து கொண்டும், திவ்வியப் பிரபந்தமாகிய அருளிச் செயல்களைப் பேணிப் பலவகைகளால் வளர்த்துக்கொண்டும் வாழ்ந்து வந்து, தமது 120ஆம் அகவையில் (கி. பி. 1017-1137), நித்திய சூரிகள் எதிர்கொள்ளப் பரமபதம் சேர்ந்து, திரு நாடு அலங்கரித்தார்,

### நூல்கள் :

இராமாநுசர் நவநிதிகள் போலவும், நவரத்தினங்கள் போலவும் ஒன்பது சிறந்த நூல்களை அருளிச் செய்துள்ளார்.

(1) ஸ்ரீபாஷ்யம்
(2) வேதாந்த தீபம்
(3) வேதாந்த சாரம்
(4) வேதாந்த சங்கிரகம்
(5) கீதா பாஷ்யம்
(6) சரணாகதி கத்யம்
(7) ஸ்ரீரங்க பாஷ்யம்

(8) ஸ்ரீவைகுண்ட கத்யம்

(9) நித்யம்.

**ஆசிரியர்கள் :**

இராமாநுசருக்குப் ''பஞ்சாசார்ய பதாச்ரிதர்'' என ஒரு சிறப்புப் பெயர் உண்டு. ஐந்து ஆசிரியர்களின் திருவடிகளில் ஈடுபட்டு ஒழுகியவர் என்பது அதற்குப் பொருள்.

(1) பெரிய நம்பிகள், பஞ்ச சம்ஸ்காரம் செய்தருளியவர்.

(2) திருக்கோட்டியூர்நம்பி, திருமந்திர நுண் பொருள்கள் அறிவுறுத்தியவர்.

(3) திருமாலையாண்டான், திருவாய்மொழிப் பொருள் போதித்தார்.

(4) திருமலை நம்பிகள், இராமாயண நுண் பொருள்களை விளக்கியருளினர்.

(5) திருவரங்கப் பெருமாளரையர், திருவாய்மொழியும் தோத்திரங்களும் நல் வார்த்தைகளும் அருளிச் செய்தார்.

**பிற சிறப்புகள் :**

''நாறும் நறும்பொழில் மால் இருஞ்சோலை நம்பிக்கு, நான் நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்; நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்'' என்று ஆண்டாள் நாச்சியார் பாடிய பாடல்களுக்கு ஏற்ப, திருமாலிருஞ்சோலைப் பெருமாளுக்கு நூறு தடா வெண்ணெயும் அக்கார அடிசிலும் சமர்ப்பித்ததனால், ''**கோயில் அண்ணர்**'' என்ற சிறப்புப் பெயர் அருச்சகர் முகமாக ஆண்டாளால் வழங்கப் பெற்றது.

போதாயன விருத்தியைத் தழுவிப் பிரம்ம சூத்திரத்திற்கு இவர் வகுத்த உரையின் மாட்சிமையைக் கண்டு வியந்து மகிழ்ந்த கலைமகள், இவருக்குப் ''**பாஷ்யகாரர்**'' என்னும் சிறப்புப் பெயரை வழங்கியருளினள்.

''திருவேங்கடம் உடையானுக்கு, அவர் தம் திருமார்பில் அலர்மேல் மங்கை நாச்சியாரை எழுந்தருளப் பண்ணித் திருவாழியும் திருச்சங்கும் சாதித்தருளினமையால், திருவேங்கடம் உடையானுக்கு மாமனாரும் ஆசாரியரும் ஆயினர் இராமாநுசர்'' என்றும் பெரியோர்கள் கூறுவர்.

இராமாநுசரின் திருவுருவத் திருமேனிகள் திருவரங்கம், மேல்கோட்டை, பெரும்பூதூர் என்னும் மூன்று இடங்களிலும் அவருடைய காலத்திலேயே அன்பர்களால் அமைக்கப்பெற்றன என்பர்.

(1) திருவரங்கம் - தான் ஆன திருமேனி.

(2) மேல்கோட்டை - தான் உகந்த திருமேனி,

(3) பெரும்பூதூர் - தமர் உகந்த திருமேனி,

திருவரங்கத்து அமுதனார் இராமாநுசரைப் போற்றித் துதித்து அருளிச் செய்த 'இராமானுச நூற்றந்தாதி' பெரியோர்களால் 'பிரபந்த காயத்திரி' எனப் புகழ்ந்து மதிக்கப் பெற்று, திவ்வியப் பிரபந்தங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

**முடிவுரை :**

இராமானுசரின் பெருமை எல்லையற்றது. அது நிலத்திலும் பெரியது; வானினும் அகன்றது. வைணவ சமயத்தின் ஆழ்வார்களும் ஆசாரியார்களும் ஆகிய அனைவரின் சிறப்பும் பண்பு நலங்களும், இராமானுசர் பக்கல் ஒருங்கே திரண்டு ஓர் உருவாய் அமைந்திருந்தன.

இராமானுசர்க்கு நம்மாழ்வார் தலை; நாதமுனிகள் திருமுகம்; உய்யக் கொண்டார் கண்; மணக்கால் நம்பி கன்னம்; ஆளவந்தார் மார்பு; பெரிய நம்பி கழுத்து; திருக்கச்சிநம்பி கைகள்; திருக்கோட்டியூர் நம்பி நெஞ்சு; திருவரங்கப்பெருமாள் அரையர் வயிறு; திருமாலையாண்டான் முதுகு; எம்பார் இடுப்பு; பட்டரும் நஞ்சீயரும் பின்னிருக்கை: நம்பிள்ளை தொடை; வடக்குத் திருவீதிப்பிள்ளை முழங்கால்; பிள்ளைலோகாசாரியர் திருவடி; திருவாய்மொழிப்பிள்ளை பாதரேகை; மணவாளமாமுனிகள் பாதுகை; சேனபதி ஜீயர் ஊர்த்வபுண்டரம்; கூரத்தாழ்வான் புரிநூல்; முதலியாண்டான் திரிதண்டம்; வடுக நம்பி காவியுடை; திருக்குருகைப்பிரான் பிள்ளான் தோமாலிகை; பிள்ளை உறங்கா வில்லிதாசர் நிழல்: இங்ஙனம் ஆசாரியார்கள் எல்லோரையும் தமக்கு உறுப்பாய்க் கொண்டு இணையற்ற பெருமையினராக விளங்குபவர் இராமாநுசர்! இராமாநுசர் திருவடி வாழ்க ! அவர் தம் புகழ் வளர்க !! எம்பெருமானார் தரிசனம் தழைத்தினிது ஓங்குக.

''அத்திகிரி அருளாளர்
அடிபணிந்தோன் வாழியே
அருட்கச்சி நம்பியுரை
ஆறுபெற்றோன் வாழியே
பக்தியுடன் பாடியத்தைப்
பகர்ந்திட்டான் வாழியே
பதின்மர்கலை உட்பொருளைப்
பரிந்துதந்தான் வாழியே
சுத்தமகிழ் மாறனடி
தொழுதுய்ந்தோன் வாழியே
தொல்பெரிய நம்பிசரண்
தோன்றினன் வாழியே
சித்திரையில் ஆதிரைநாள்
சிறக்கவந்தோன் வாழியே
சீர்பெரும்பூ தூர்முனிவன்
திருவடிகள் வாழியே.

—ஆசிரியர்

# "குறிஞ்சிக் கிழவன்"

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின் கண் உள்ள நூல்களுள், மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்தது தொல்காப்பியம். அது கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அத்தகைய பழம்பெரும் தமிழ் இலக்கண நூலில், அதன் ஆசிரியராகிய தொல்காப்பியர், நிலத்தைப் பல திணைகளாக வகுத்தார். அத்திணைகள் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகைப்படும் என்றும், முல்லைக்குத் திருமாலும், குறிஞ்சிக்கு முருகனும், மருதத்திற்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும், பாலைக்குக் கொற்றவையும் முறையே தெய்வங்களாக விளங்குவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**''மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''**

என்பது தொல்காப்பிய நூற்பா. இதன்படி குறிஞ்சித் திணையாகிய மலையும் மலையைச் சார்ந்த பகுதியும் ஆகிய நிலத்திற்குரிய கடவுள் முருகனே என்பது, தமிழ் நூல் மரபு என்பது புலனாகும். ஆதலின் முருகனுக்குரிய பலபெயர்களுள் ''குறிஞ்சிக் கிழவன்'' என்பது ஒரு பெயராகத் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றது.

உலகப் படைப்பில் முதன்முதல் மனிதன், உலகின் நடுவிடத்தில் மேட்டுப்பாங்கான மலை நிலத்திலேயே தோன்றியிருத்தல் வேண்டும் என்று, சர் ஜான் எவன்ஸ் (Sir John Evans) போன்ற ஆராய்ச்சி அறிஞர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர். அண்டம் (Macrocosm), பிண்டம் (Microcosm) என்னும் இரண்டும் தம்முள் ஒரே தன்மையுடையன. அண்டத்திலுள்ளது பிண்டத்திலும், பிண்டத்திலுள்ளது அண்டத்திலும் ஒரே தன்மையாக இருக்கும் என்பது ஞானிகளின் கூற்று. பிண்டமாகிய நம் உடலின் நடு இடத்தில் மேடான பகுதியாகிய வயிற்றிலேயே கருத்தோன்றி வளர்ந்து மகப்பேறு நிகழக் காண்கின்றோம். எனவே உலகின் நடு இடத்தில் மேட்டுப் பகுதியான மலைநிலமாகிய குறிஞ்சித் திணையில்தான், உலகப் படைப்பில் மனிதன் முதன்முதல் தோன்றியிருத்தல் வேண்டும் என்னும் ஆராய்ச்சி உண்மை அறிவிற்குப் பெரிதும் பொருந்துவதாக உள்ளது. அதன்படி பார்த்தால் மலைநிலப் பகுதிகளாகிய குறிஞ்சித் திணையிலேயே ஆதிமனிதன்தோன்றியிருத்தல் வேண்டும். அவ்வாதி மனித குலத்துக்குரிய தெய்வமாக விளங்கி வருபவன், குறிஞ்சிக் கிழவனாகிய முருகப்பெருமானே யாவன். அதனாலேயே அவனுக்கு நூல்களில் குறிஞ்சிக் கிழவன் என்ற பெயர் வழங்கி வருகிறது.

முருகனுக்குரிய வெட்சி கடம்பு முதலிய மலர்மாலைகள் குறிஞ்சி நிலத்துக்குரியனவே. அவனது ஊர்தியும் கொடியுமாகிய மயிலும் கோழியும் குறிஞ்சி நிலத்துக்குரியனவே. முருகனுக்குரிய ஊர்திகளுள் யானையும் ஒன்று. யானைமீது அமர்ந்துவரும்முருகனைக் கஜவாகன மூர்த்தி (களிற்றூர்திப்பெருமான்) என நூல்கள் நுவலும். திருமுருகாற்றுப்படையில் திருச்சீரலைவாய் பற்றிய பகுதியின் தொடக்கத்தில், நக்கீரர் யானைமீது இவர்ந்து வரும் முருகனின் தோற்றத்தைப் புகழ்ந்துபோற்றித் துதித்திருக்கின்றார்.

**''வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்**
**வாடா மாலை ஓடையொடு துயல்வரப்**
**படுமணி இரட்டும் மருங்கிற் கடுநடைக்**
**கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பிற்**
**காலகிளர்ந் தன்ன வேழம் மேற்கொண்டு...''**

என வரும் திருமுருகாற்றுப்படை வரிகள், முருகப்பெருமான் தமக்குரிய வாகனமாகிய பிணிமுகம் என்னும் யானைமீது இவர்ந்துவரும் சிறப்பினை விளக்குதல் காணலாம். யானையும் குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருளேயாகும். அதுமட்டுமன்று; முருகனின் இச்சா சத்தி எனப்படும் வள்ளியம்மை, குறிஞ்சித் திணையில் வாழும் குறவர் ஆகிய வேட்டுவர் மரபில் உதித்தவளே யாவள் என்னும் வரலாறும் சிந்தித்தற்குரியது. முருகனுக்குரிய நிவேதனப் பொருள்களாகிய தேனும் தினைமாவும்கூட, குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள் வகையைச் சேர்ந்தனவே யாகும். இவற்றினால் எல்லாம் முருகப்பெருமான் குறிஞ்சிக்கிழவன் என்னும் உண்மை புலனாகும்.

முருகன் அடியார்களுள் தலைசிறந்த ஒருவர் அருணகிரிநாதர். அவர் நம் முருகனுக்குரிய 'குறிஞ்சிக்கிழவன்' என்னும் தொடரைவியந்து போற்றிச் சிந்தித்து இன்புறுகின்றார். புலமை நலம் சிறந்த கவிதை உள்ளத்தால் அப்பெயர் குறித்து நகைச்சுவை தோன்றவும், கற்பனை நலம் பொலியவும் ஓர் அழகிய கருத்தை அவர் வெளியிடுகின்றார், ''முருகன் இளமையும் அழகும் உடையவன் ஆயிற்றே! அவனுக்குக்

JL
Ø2m2.4, N5974, N73 . 15.11



**குழந்தைவேலன்** என்றும் ஒரு பெயர் உண்டே; அவனுடைய பெயர்களுள் **சேய்** என்பதும் ஒன்றன்றோ; சின்னஞ்சிறிய குழந்தையை யன்றோ சேய் என்னும் சொல் குறிக்கும். சின்னஞ் சிறியவனுகக் குழந்தை வேலனுகத் திகழும் முருகப்பெருமானை அறிஞர் உலகம் குறிஞ்சிக் கிழவன் என்று கூறுகின்றதே; இஃது என்ன வியப்போ? கிழவன் என்னும் சொல்லுக்கு வயது முதிர்ந்து மூப்படைந்து தளர்ந்தவன் என்ற ஒரு பொருளும் உண்டன்றோ?

முருகன் உலகங்களையெல்லாம் ஈன்றெடுத்த அன்னையாகிய உமாதேவியின் திருமுலைப்பால் அருந்தினன்; சரவணப் பொய்கையாகிய பூந்தொட்டிலில் ஏறி அமர்ந்தான். கார்த்திகைப் பெண்களாகிய அறுவரின் கொங்கைகளை விரும்பிப் பாலுண்டான்; கடல் அழவும், கிரவுஞ்சம் என்னும் குன்று அழவும், சூரபதுமனுகிய கொடிய பகைவன் அழவும், இளங் குழந்தையாக விம்மி விம்மித் தேம்பித் தேம்பி அழுதவன் அல்லனே நம் முருகன். இத்தகைய இளம் குருந்தைப் போன்ற முருகனுகிய குழந்தையை, உலகம் **கிழவன்** என்று சொல்லுகின்றதே, இப்படியும் சொல்லலாமோ?'' என்னும் கருத்தமைய,

> ''திருந்தப் புவனங்கள் ஈன்றபொற்
> பாவை திருமுலைப்பால்
> அருந்திச் சரவணப் பூந்தொட்டில்
> ஏறி அறுவர்கொங்கை
> விரும்பிக் கடல்அழக் குன்றழச்
> சூரழ விம்மிஅழுங்
> குருந்தைக் குறிஞ்சிக் கிழவன்என்
> றோதும்; குவலயமே''

என்று அருணகிரிநாதர், தாம் பாடிய கந்தர் அலங்காரப் பாடல் ஒன்றில், முருகப்பெருமான் ''குறிஞ்சிக் கிழவன்'' என்று தொன்று தொட்டுத் தமிழ்மக்களால் போற்றப்பெற்று வரும் கருத்தினையே மறுப்பதுபோன்று காட்டி வியந்து போற்றி நிலைநிறுத்துகின்றார்.

முருகன் குறிஞ்சிக் கிழவன் ஆதலினுலேயே, மலைகள்தோறும் குடிகொண்டு தங்கி வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள்புரிந்து வருகின்றான். ''பலகுன்றிலும் அமர்ந்த பெருமாளே'' என்று அருணகிரிநாதரின் திருப்புகழ் முருகனைப் போற்றித் துதிக்கின்றது. முருகன் குன்றுதோறாடும் குமரனுகி, எங்கெங்கும் விளங்கித் திருவருள் புரிந்து வருகின்றான். ஆதலின் முருகனுக்கு ''மலையப்பன்'' என்றும் ஒரு பெயர் வழங்கும்.

போக நுகர்ச்சிக்குரிய நாகருலகத்தையும், இப் பூவுலகத்தையும், வித்தியாதரர் உலகத்தையும், திருமால், பிரமன், இந்திரன் முதலியவர்களுக்குரிய உயர்ந்த உலகங்களையும், தன்னை வழிபடும் அடியவர்களுக்கு உரிமையாக்கி வைத்து, வேடர்கள் குடியிருக்கின்ற குறிச்சி என்னும் சிற்றூர்களும், அங்கேயுள்ள தினைப் புனங்களும், மலைச் சாரல்களும் பிறவுமாகிய வற்றை, அவ்வேடர்களின் மகளாகிய வள்ளியம்மையை மணந்ததனுல், சீதனக்காணியாகப் பெற்று, மலை நிலங்களுக்கெல்லாம் உரிமையும் தலைமையும் உடையவனுய்க் ''**குறிஞ்சித்தலம் தலையளிப்பவன்**'' முருகப் பெருமான என்று குமரகுருபர அடிகள், பாடி மகிழ்கின்றார்.

> ''விண்ணெனன் கடற்புவன முடவுப் படத்தேந்து
> வேந்துபொலி பரூதள் வைப்பும்,
> விரிநீர் வரைப்பும், எழில் விஞ்சையர் இருப்பும்,
> முகைவிண்டு நறைவிரி முண்டகக்
> கண்ணன் திருப்பதமும், நான்முகக் கடவுள்பூங்
> கஞ்சமும், குலிசப்பிரான்
> கற்பகக் காவும்,நின் தொண்டர்கள் தொழும்
> ஓர்காணியா வைத்து மற்றத் [புக்கு
> திணணென் தடக்கை வெஞ்சிலை வேடர்
> குடிகொண்ட சீறூரும், ஊரூர்தொறும்
> செந்தினைப் புனமுடு தண்சரரல் பிறவுமாம்
> சீதனக் காணிபெற்று, அத்
> தண்ணென் குறிஞ்சித்தலம் தலையலைப்பவன்
> சப்பாணி கொட்டியருளே
> தையல் நாயகி மருவு தெய்வநாயகன்மதலை
> சப்பாணி கொட்டி யருளே''

இங்ஙனம் குறிஞ்சிக் கிழவனுயும், குறிஞ்சித் தலம் தலையளிப்பவனுயும் விளங்கிப் பெருங் கருணைத் தடங்கடலாய்த் திகழ்ந்து, அடியவர்களுக்கெல்லாம் பேரருள் புரிந்துவரும் செந்தமிழ்த் தெய்வமாம் திருமுருகனை, நாம் அனைவரும் அன்புடன் போற்றி வழிபட்டு, இம்மை மறுமை நலங்கள் யாவும் எய்தி, உய்ய முயல்வோமாக !

—ஆசிரியர்


·800 009·
148712



திருச்சி மாவட்டம், குமாரவயலூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலில், நிகழ்ந்த தியான மண்டபத் திறப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பர் அவர்களும் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களும் வரவேற்கப் பெறுதல். (12—8—73)



குமாரவயலூர் தியான மண்டபத் திறப்பு விழா.



தஞ்சை மாவட்டம், கோயில் சீயாத்தமங்கை, அருள்மிகு பிரம்மபுரீசுவர சுவாமி கோயிலில் நிகழ்ந்த ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழாவில் திரு. தம்பி. அ தேவேந்திரன், M.L.A. அவர்கள் உரைநிகழ்த்துதல் (25—7—73)



கோயில் சீயாத்தமங்கை அருள்மிகு பிரம்மபுரீசுவர சுவாமிகோயிலில் நிகழ்ந்த தூய்மைப் பரிசளிப்பு விழாவில். அறநிலைய ஆணையர் திரு. கே எஸ் நரசிம்மன் B.A., B.L., I.A.S. அவர்கள். சுழல் கோப்பையை அறங்காவலரிடம் வழங்குதல் (25—7—73)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments, (Admn.) Dept., Madras-34. Printed at Paari Achakam, Madras-1. Editor. N. R. Murugavell, M.A., M.O.L.